
www.tamilarangam.net

ஒக்டோபர் 2000

# எரிமலை



குருதிவடிக்கும் பேனாக்கள் சனநாயகம் கண்ணீர் வடிக்கின்றது

பயங்கரங்களின் ஆழ்கிடங்காக மாற்றப்பட்டிருக்கும் கிளிநொச்சியின் இன்றைய நிலவரம்

## அரசின் நம்பிக்கைகளையும் திட்டங்களையும் சிதறடிக்கும் வகையில் ஓயாத அலைகள்-04

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்

அண்மைக் காலமாகவே இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் வெளியிடப்படும் நாளிதழ்கள், நாளொரு பொய்யும், பொழுதொரு புனை சுருட்டுமாக சந்திரிகா கும்பலால் கொட்டப்படும் 'செய்திகளை' உள்வாங்கி வாந்தியெடுத்து வருகின்றன! விதிவிலக்கின்றி தொலைக்காட்சிகளும், வானொலியும் இதே கடமையைச் செவ்வனே மேற்கொண்டுள்ளன. தேர்தல் வெற்றிக்காக தனது இருப்பை உறுதிப்படுத்துவதற்காக ஏற்கனவே கிழிந்துவிட்ட தனது கபட முகத்தில் கிடைத்தவற்றையெல்லாம் அள்ளிப் பூசிக்கொள்கிறது பேரினவாதம்.

சிறப்புக் கட்டுரைகளான கடினமான களமுனையில் புலிகள் பெற்ற மகத்தான வெற்றி, காலமெங்கும் வீழ்த்தப்பட்ட பெண் இன்று, வியட்நாம் ஒன்று பட்ட மக்களின் தேசம் ஆகிய படைப்புக்கள் செப்பமும் செறிவுங் கொண்டிருந்தன. விடுதலை பெற்று 25ஆம் ஆண்டின் நிறைவில் நிற்கும் அம்மண்ணின் வரலாறு, தமிழீழ மண்மீட்புச் சமரில் 25 ஆண்டுகளை எட்டியிருக்கும் எமது சகோதர இனத்திற்கு மிகப் பெரும் உந்து விசையாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

வே.பகவதிராஜ்
ஈரோடு
தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை இதழ்கள் ஒவ்வொன்றும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் "தென்செய்தி", "இலட்சியப் போராளி" போன்ற தமிழீழ ஆதரவுப் பத்திரிகைகள் மூலமாக ஓரளவு தமிழீழச் செய்திகளை அறியக்கூடியதாக உள்ளது. தமிழ்நாட்டில் முன்பு என்றுமில்லாத அளவில் தமிழீழ ஆதரவுக்குரல்கள் வலுத்து ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. நீறுபூத்த நெருப்பாக இருந்த உணர்வுகள் தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு. பழ.நெடுமாறன் அவர்களின் தலைமையின் கீழ் தற்போது காட்டாற்று வெள்ளம் போல் வெளிப்பட்டு நிற்கின்றது. தமிழீழ மண்ணில் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படும் கொடுமையை இங்கே எங்களாலும் உணரக்கூடியதாக இருக்கின்றது. வீரஞ்செறிந்த தலைமையின் கீழ் வெற்றிக் கொடிகளை நாட்டி வரும் "பெண்புலிகள்" "கரும்புலிகள்" ஆகியோரின் வீரம் புறநானூற்று வரலாற்றை மிஞ்சிவிட்டது.

ம.முனிறாஜு
தர்மபுரி
தமிழ்நாடு

✉ ✉ ✉

ஓயாத அலைகள்-3 இல் நடந்தேறிய யாழ் நோக்கிய சமர்கள், கடலிலே காவியம் படைத்த கடற்கரும்புலிகளின் வீரச்சமர் என்பவற்றினைப் படிக்கும் போது "தமிழீழத் தேசியத் தலைவர்" அவர்கள் ஓர் வல்லரசு நாட்டுப் போர் வீரர்களுக்கு இணையாக நமது வீரர்களையும் வளர்த்தெடுத்துள்ளார் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. இவற்றை எல்லாம் படிக்கும்போது விரைவிலே தமிழீழம் உருவாகும் என்பது நிச்சயம் என்பது புலம்பெயர்ந்து வாழும் எங்களுக்கு உணர்த்துவதாக உள்ளது.

தம்பிராசா வரதன்
அறோ
சுவிஸ்

✉ ✉ ✉

எரிமலை வாசிக்கின்ற வேளைகளில் என் அன்னை மண்ணிற்கே சென்று வருகின்றேன். அத்துடன் தமிழ்ப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு எரிமலை சஞ்சிகையில் வரும் தகவல்கள் என் போன்ற ஆசிரியத் தொழில்புரியும் பலருக்கு தாயகத்தின் உண்மை நிலவரங்களை ஆதாரத்துடன் எடுத்து விளக்குவதற்கும் உதவுகின்றது.

மட்டுவில் ஞானக்குமரன்
ஜேர்மனி

✉ ✉ ✉

கரும்புலிகளின் வீரகாவியம் படித்து உணர்வலையில் ஆழ்ந்துவிட்டேன். வெடிமருந்துகள் சுற்றப்பட்ட வீரவிதைகள் அவர்கள். கரும்புலி கப்டன் மில்லரின் நெல்லியடிச் சமரும், அவரது அன்னையின் கூற்றும் நெகிழ்வு ஏற்படுத்தியது. உலக அளவில் புரட்சியை முன்னெடுத்துச் சென்ற நாடுகள் தற்போது அதிகார வெறியில் மூழ்கிவிட்ட நிலையில், 21ஆம் நூற்றாண்டில் உதயமாகும் முதல் புரட்சிகரமான நாடான நமது தமிழீழம் சிறந்து விளங்கும்.

வெறிபிடித்த சிங்கள ஓநாய்களின் கோர வெறிப்பற்கள் 70 வயது மூதாட்டியை நாசப்படுத்தியதற்குக் கொழும்பு நகரின் மையப் பகுதியில் நினைவுத் தூண் எழுப்பி உலகில் பெருமை கொள்ளட்டும். இனவெறி அரசிடம் கையேந்தி கள்ளக் கருத்துக்களை இடைச்செருகல் ஏற்படுத்தும் போலி மனித உரிமை அமைப்புக்களை உலகு ஒதுக்க வேண்டும்.

த.இளங்கோவன்
தமிழ்நாடு

✉ ✉ ✉

நான் கடந்த ஐந்தாண்டுகளாக எரிமலை இதழைப் படித்துக் கொண்டு வருகிறேன். தமிழ் இன மீட்புப்பணியில் தங்களுடைய பணியை எண்ணி மிகவும் பெருமைப்படுகிறேன். உலகில் தமிழன் இல்லாத நாடு இல்லை. ஆனால் தமிழனுக்கு என்று நாடு இல்லை என்ற நிலையில் ஈழப் போராட்டம் என்பது வரலாற்றுத் தேவை என உறுதியாகின்றது. வரலாற்று சிறப்புமிக்க இனம், நமது இனம் இன்று நாடற்று அனாதையாக உலகெங்கும் வாழந்து கொண்டிருப்பதை எண்ணி மிகவும் வருத்தமாய் இருக்கிறது.

தங்கள் இதழின் வடிவமைப்பு, கட்டுரை முதலியன யாவும் அருமையாக உள்ளது வாழ்த்துக்கள்.

அ.தேவநேயன்
சென்னை
தமிழ்நாடு

✉ ✉ ✉

ஆகஸ்ட் மாத எரிமலை கிடைக்கப் பெற்றேன். இந்த இதழில் இடம்பெற்ற கடற்சமர் குறித்த கட்டுரை படித்தேன். நேரடி வர்ணனையாக அமைந்திருந்தது. களத்தின் மையத்திற்கே எமை அழைத்துச் சென்றது.

சங்ககால இலக்கியத்திற்கு நிகராக இவை கவிஞர் கருப்பொருளாக அமைய வேண்டும்.

ச.வேல்முருகன்
புதுச்சேரி
இந்தியா




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை

ஒக்டோபர் 2000

## கட்டுரை

அரசின் நம்பிக்கைகளையும் திட்டங்களையும் சிதறடிக்கும் வகையில் ஓயாத அலைகள் 4 பக்கம் - 04

நிலையற்ற ஆட்சியை நோக்கிச் செல்லும் சிறீலங்காவின் 'ஜனநாயக ஆட்சி' முறை பக்கம் - 10

எல்லை காக்கும் இல்லங்கள் பக்கம் - 12

பாலியல் வல்லுறவு எங்கே தவறிழைத்தோம் பக்கம் - 14

குருதிவடிக்கும் பேனாக்கள் சனநாயம் கண்ணீர் வடிக்கின்றது பக்கம் - 16

ஈழத்தமிழர் இனி ஆற்ற வேண்டியது என்ன? பக்கம் - 22

மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பு. பக்கம் - 24

தமிழ் மண் மீட்போம் தாயகம் காப்போம் பக்கம் - 34

பெண்கள் எழுச்சி நாள் பக்கம் - 36

அரசியலுக்குப் புதிதல்ல பக்கம் - 37

இருள் சூழ்ந்த நகரத்தின் விடுதலைக் கதை பக்கம் - 40

## அணையாத தீபங்கள்

லெப்.கேணல் நாதன், கப். கஜன் பக்கம் - 08

## சிறுகதை

உரிமைக்கு உயிர்– முத்து சிவஞானம் பக்கம் - 38

அந்தப் பெருவெளியில்–அலையிசை பக்கம் - 44

## கவிதை

போர்ப்பாடல் -முல்லையூரான் பக்கம் - 21

எரிமலை வாசலில் இருக்கின்றாய் என்று நீ அறியாமல் சிரிக்கின்றாய்- வியாசன் பக்கம் - 26

ஆற்றலின் வடிவம் அண்ணல் அவன் வளர்ப்பினில் அனலாய்த் தங்கை பக்கம் - 33

கதைகள் இரண்டு - கனக திருச்செந்திநாதன் பக்கம் - 43

## தொகுப்பு

தமிழர் வரலாற்றில் ஒக்டோபரில் நடந்தேறியவை பக்கம் - 09

நிலவரம் பக்கம் - 46

மீள்பார்வை ஒக்டோபர் பக்கம் - 47

கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 48

**06** பலத்தால் ஒரு தேசிய இனத்தின் ஆன்மாவைக் கட்டியெழுப்பும் பணியில் தமிழீழப் பெண்கள்



**18** சிறுவரின் வாழ்வாதாரத்தை போராதாரமாக்கும் அரசு



**28** ஒரு நகரத்தின் கதை






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழம் கிட்டும்வரை போராட்டம் தொடரும்



எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கின்றோம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந்திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப்பட்டிருக்கிறோம். இழிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீரசாதனைகளுக்குப் பின்னர், நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கைநீட்டப் போவதில்லை.

நாம் சுதந்திரமாக, கௌரவமாக நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திர தமிழீழத்தில்தான் சாத்தியமாகும். அந்த சுதந்திர தமிழீழம் கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து தமிழ்த்தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்மபலமும் ஆயுதபலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

**-தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**

('எனது மக்களின் விடுதலைக்காக' என்ற நூலில் இருந்து)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
ஒக்டோபர்
*2000*

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail: erimalai@freesurf.fr

# தலைவாசல்

## பண்டாரவளைப் பயங்கரவாதம்

பயங்கரவாதத் தடைச்சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு - சித்திரவதைகளை எதிர்கொண்டு பின்னர் சீர்திருத்தம் செய்கின்றோம் என்ற பெயரில் பண்டாரவளையில் சிறையிடப்பட்ட தமிழர்கள் தற்போது கொடுமையான முறையில் சிறீலங்காவால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான சிங்கள கிராமவாசிகளால் வெட்டியும், எரித்தும் இத்தமிழர்கள் கொல்லப்பட்டதாக கொழும்பில் "வெட்கமின்றி" செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஆத்திரமடைந்த சிங்கள மக்களின் கலகம் இது என்றுகூட இனப்படுகொலைகளுக்கு கொழும்பில் காரணங்கள் கூறப்படுகின்றன. இதற்கும் ஒருபடி மேலே சென்ற சிங்கள ஆட்சியாளர் சந்திரிகா, வெளிச்சக்திதான் சிறைப்படுகொலைகளுக்குக் காரணம் என்கின்றார். பண்டாரவளை முகாம் காவலாளிகளோ, பாதுகாப்புக்குப் பொறுப்பான இராணுவத்தினரோ அல்லது படுகொலைகளில் ஈடுபட்டார்கள் என சிங்களப் பொலிசார் பழிபோடும் சிங்கள கிராமவாசிகளோ பொறுப்பல்ல எனச் சிங்களத்தின் தலைவி விளக்கம் கொடுத்துள்ளார்.

சந்திரிகா கூறும் வெளிச்சக்தி எது? பேரினவாதத்தின் கொடிய முகமாக இன்று திகழும் சந்திரிகா பண்டாரநாயக்க வெளிச்சக்திதான் படுகொலைகளுக்குக் காரணம் என்று கூறுவதன் மூலம் திருமலை கடற்படை தளம் மீது புலிகள் நடாத்திய தாக்குதலிற்கு பதிலடியே பண்டாரவளைப் படுகொலைகள் என்ற பொதுஊகத்தை உறுதிப்படுத்தியுள்ளார். சிங்கள ஆக்கிரமிப்பிற்கு எதிராக தமிழர்கள் நடாத்தும் போர் நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக பெரும் இனப்படுகொலைகளை காலம் காலமாகச் சிங்களம் நடாத்தி வந்துள்ளது. மேலும் தமிழ் இளைஞர்களை சிறைமுகாம்களில் வைத்தே வெட்டியும் எரித்தும் கொல்லும் பயங்கரவாதத்தை 1983 முதல் சிங்களம் மேற்கொண்டு வருகின்றது.

சிங்களத்தின் இன்றைய இப்படுகொலைகளுக்கு சந்திரிகா தலைமை தாங்கும் சிங்கள அரசுதான் பொறுப்பாளிகள் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். சிங்களப் படைகள்தான் இப்படுகொலைகளை தூண்டுவித்தார்கள் என நம்புவதற்கு ஆதாரங்கள் உண்டு என்று அழுத்தம் திருத்தமாக கருத்துத் தெரிவித்துள்ள புலிகள், உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் இக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன் சிங்களச் சிறைகளில் வாடும் மீதி தமிழர்களை விடுவிப்பதற்கான அழுத்தத்தை சிங்கள அரசு மீது ஏற்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

தமிழீழ - சிங்கள தேசங்களுக்கு இடையேயான தேசிய இனச்சிக்கல் பெரும் இனப்படுகொலைகளால் மேலும் கூர்மைப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய படுகொலைகள் மூலம் தமிழர்களை அச்சுறுத்தி அடக்கலாம் என சிங்கள இனவாத இயந்திரம் கணக்குப் போடுகையில், இப்படுகொலைகள் விடுதலைக்கான தேவையையும், தீவிரத்தையும் எமக்குள் அதிகரிக்கின்றது.

பண்டாரவளையில் வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களிற்கும், அவர்கள் உறவினர்களிற்கும் நீதி வழங்கப்பட வேண்டுமாயின் தமிழீழ விடுதலைப் போரை அதன் வெற்றிக்கு இட்டுச்செல்லும் வேட்கை எமக்குள் மேலும் ஆழமாகிட வேண்டும். மேலும் பலப்படுத்தப்பட்ட தமிழர் படைகளும், தமிழர் தேசிய தலைமையுமே படுகொலைகளிலிருந்தும், அச்சுறுத்தல்களில் இருந்தும் விடுபட்ட சுதந்திரமான வாழ்வை எம் மக்களுக்கு உறுதிப்படுத்துவார்கள். விடுதலைக்கான எமது பயணத்தை மேலும் துரிதப்படுத்துங்கள் என்பதே பண்டாரவளைப் படுகொலைகள் தந்த செய்தியாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அரசின் நம்பிக்கைகளையும் திட்ட சிதறடிக்கும் வகையில் ஓயாத அ

**- ஜெயராஜ்**

ஓயாத அலைகள்-04 26.09.2000 அன்று விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக் கப்பட்டமை சிறீலங்கா இராணுவத் தரப்பிற்கும், அரசியல் தலைமைக்கும் சற்று அதிர்ச்சிக் குரியதாகவே இருந்திருக்கும். ஏனெனில் அன்று காலையில் ரிவிகிரண-02 என்ற பெய ரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை இராணுவம் தென்மராட்சியின் வட மேற்கில் மேற்கொண் டிருக்கையில், தென்மராட்சியின் தென்கிழக் கில் அன்று பிற்பகலில் புலிகளின் இவ் ஓயாத அலைகள்-04 ஆரம்பிக்கப்பட்டது.

ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு முன்னர்- அதா வது பொதுத்தேர்தலுக்கு முன்பாக விடுத லைப் புலிகள் தாக்குதல் நடவடிக்கைகள் சில வற்றை மேற்கொள்ளலாம் என்ற பொதுவான தொரு எதிர்பார்க்கை சகல தரப்பிலும் இருந் திருப்பினும்- புலிகள் அவ்வாறு கூறவில்லை- இராணுவத்தின் ரிவிகிரண-02 நடவடிக்கை இடம்பெற்ற அன்றே இவ்வாறானதொரு நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்த் திருக்கவில்லை.

ஏனெனில் ரிவிகிரண நடவடிக்கைகள் அதாவது செப்டெம்பர் மாதம் 03,10,17, 26 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டமைக்கு புலிகளினால் புதிய நடவடிக்கைகள் எவை யும் ஆரம்பிக்கப் படக்கூடாது என்ற நோக் கினாலேயே ஆகும். அதாவது தேர்தலுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளாத வகையில் அவர் களைத் தற்காப்பு யுத்தத்திற்குள் தள்ளுவதே இராணுவத் தலைமைப் பீடத்தினதும், அரசி யற் தலைமையினதும் நோக்கமாகும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித் திருப்பதானது சிறீலங்கா இராணுவத் தரப்பை பொறுத்தும் ஆளும்கட்சித் தரப்பினரை பொறுத்தும் பெரும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றே ஆகும். இது ஒருபுறம் இருக்க ஓயாத அலைகள்-04 இன் ஆரம்பமானது விடுத லைப் புலிகளின் திட்டத்திற்கு ஏற்ற வகையில் நடந்தேறியிருப்பதும் இராணுவத் தரப்பிற்கு பலத்த பின்னடைவாகும்.

ஓயாத அலைகள்-4 நடவடிக்கையானது பல்வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். ஏனெனில் சிறீலங்கா இராணு வம் நல்லதொரு நிலையில் இருப்பதாகவும் புலிகளின் தாக்குதல் எவையும் முறியடிக்கப் படும் எனவும் ஆட்சியாளர் நம்பிக் கொண்டி ருக்கையில் ஓயாத அலைகள்-04 விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

சிறீலங்கா இராணுவம் ஓயாத அலைகள்-03இல் ஏற்பட்ட பாரிய தோல்வியின் பின்னர் மலைப்பூட்டும் வகையில் பலப்படுத்தப்பட்டி ருந்தது. எந்த நிலையிலும் யாழ் குடாநாட்டில் சிறிதளவேனும் பின்னடைவுகளைச் சந்திப் பதைத் தவிர்க்கும் வகையில் முன்னேற்பாடு கள் இருந்தன. வேறு விதமாகக் கூறுவதா னால் யாழில் சிறீலங்கா இராணுவத்தின் இருப்பிற்கு எத்தகைய தோல்வியும் ஏற்படக் கூடாது என்ற வகையில் ஏற்பாடுகள் இருந்தன.

சிறீலங்கா ஆயுதப் படைக்கு என்றுமில்லாத அளவிற்கு ஆயுத தளபாடங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. ஒருபுறம் ஆயுதப் படை யினர் கோரியயாவும் வழங்கப்பட்டிருந்தன என்றே கொள்ளலாம். ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா "தேவைக் கும் அதிகமாகவே போர்த்தளபாடங்கள் வழங் கப்பட்டுள்ளன" எனக் கூறும் அளவிற்கு ஆயுத தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டன.

சிறீலங்கா இராணுவத்தின் சுடுதிறனை அதிகரிக்கும் வகையில் "பல்குழல் எறிக ணைச் செலுத்திகள்" விமானப் படையின் தாக்குதல் திறனை அதிகரிக்கும் வகையி லான மிக்-27ரகத் தாக்குதல் விமானங்கள், கடற்படையின் வலுவை அதிகரிக்கும் வகையி லான ஏவுகணைகள் பொருத்தப்பட்ட ரோந் துக் கலங்கள் எனப் பலவகையிலும் ஆயுதப் படையினர் நவீனப்படுத்தப்பட்டனர்.

ஆயினும் ஓயாத அலைகள்-04இன் ஆரம்ப கட்டம் திட்டமிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டது. தென்மராட்சியின் கிழக்கு, தென் கிழக்குப் பகுதியில் இருந்த முன்னணிக் காவலரண்கள் அதாவது கிளாலியில் இருந்து நாகர்கோவில் வரையான- குறிப்பாக கிளாலிக் கரையோரத்தி லிருந்து தொண்டமானாறு கடல் நீரேரியின் மேற்குக்கரை வரையிலான- இராணுவ முன் னரங்க நிலைகள் யாவும் விடுதைலப் புலிக ளினால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. இதனைத் 'தந்திரோபாய ரீதியிலான பின்வாங்கல்' எனக் கூறி இராணுவத் தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் கண்டி வீதிக்கு அண்மை யாக முன்னரங்கக் காவலரண்கள் இருந்த முகமாலைப் பகுதியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எழுதுமட்டுவாள் வரையிலும் கிளாலியின் கரையோரமாக ஒரு கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் வரை யில் முன்னேறி கிளாலியின் மையப்பகுதிக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

 www.tamilarangam.net

அண்மை வரையிலும் ஓயாத அலைகள் நான்கு படையணிகள் சென்றுள்ளன. இதேவேளை முகமாலை முன்னரங்க நிலையினை உடைத்து முன்னேறிய படையணிகள் எழுதுமட்டுவாள் - நாகர்கோவில் பாதையையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளன.

இவற்றைத்தவிர சிறீலங்கா இராணுவத்தின் ஆளணியிலும் தாக்கத்தை விளைவித்துள்ளன. சுமார் 200 வரையிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 500க்கும் மேற்பட்டோர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இது ரிவிகிரண நடவடிக்கையின்போது இராணுவத்திற்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க ஆளணி சேதத்துடன் சேர்ந்து கொண்டுள்ளமையானது பாதிப்பை அதிகரித்ததாக்கியுள்ளதுமெனலாம்.

அத்தோடு, சிறீலங்கா இராணுவத் தலைமை - ஓயாத அலைகள்-03 நடவடிக்கைகளினால் பெரும் மனச்சோர்விற்கும், பாதிப்

# ங்களையும்
# லைகள்-04

பிற்கும் உள்ளாகியிருந்த படையினரின் மனோநிலையை நவீன ஆயுத தளபாடங்களின் வருகை மூலமும் பெரும் தயாரிப்புடன் சிறிய அளவிலான மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவதன் மூலமும் ஈட்டப்படும் அனுகூலங்களைக் கொண்டும் மேம்படுத்த முடியும் எனக்கருதியது.

ஆயினும் செப்டெம்பர் மூன்றில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பு இந் நோக்கத்தைப் பெருமளவு பாதிப்பதாக அமைந்ததெனினும், சாவகச்சேரி நகரினை ஆக்கிரமித்ததன் மூலம் சற்று நிவர்த்தித்துக் கொள்ள முனைந்தது. விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் திறனை இழந்துவிட்டார்கள் எனப்பேசத் தொடங்கியது. ஆனால் ஓயாத அலைகள்-04 இன் ஆரம்பமே இராணுவத் தலைமையின் இவ்வகைப் பிரச்சாரங்களை முறியடித்தது.

இந்த வகையில் ஓயாத அலைகள்-04 ஏற்படுத்தியுள்ள தாக்கமானது பின்வரும் வகைகளில் பாகுபடுத்தக் கூடியதாகும்.

1.தந்திரோபாய ரீதியிலான வெற்றி

2.இராணுவ ரீதியிலான இழப்பு

3.அரசியல் ரீதியிலான பின்னடைவு

தந்திரோபாய ரீதியிலான தோல்வி என்பது இருவகைப் பட்டதாக அமைகின்றது. ஒருபுறம் இராணுவத் தலைமையும், அரசியல் தலைமையும் விரும்பியது போன்று விடுதலைப் புலிகளை ஓர் தற்காப்பு போர் முறைக்குத் தள்ளும் முயற்சி தோல்வி கண்டது.

தேர்தலுக்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட




இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம்- விடுதலைப் புலிகளை தற்காப்பு யுத்தத்திற்குள் இழுத்துவிட அரசதரப்பு விரும்பியது. இதனால் வாராந்தம் ஒன்று என செப்டெம்பர் மாத்தில் நான்கு நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. ஆனால் விடுதலைப் புலிகள் அரசின் இத்தந்திரோபாயத்திற்குள் இழுபட்டுச் செல்லவில்லை. புதியதொரு தந்திரோபாயத்தின் அடிப்படையில் புலிகள் செயற்பட்டனர்.

இராணுவ நடவடிக்கைகளுக்கு பதில் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும்-சில இடங்களில் இருந்து பின்வாங்கவும் செய்தனர். இது எதிர்த்தாக்குதல் வலுவை அதிகரிக்க முடியாத நிலையினால் அல்ல. அரசின் பொறிக்குள் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்கும்- நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையிலானதாகவே இருந்தது. இதனை களமுனையில் இருந்த சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கூட உறுதி செய்தார். சாவகச்சேரியில் புலிகள் சண்டையிடும் படையணிகளைப் பெரியளவில் பயன்படுத்தவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

அடுத்ததாக இராணுவம் கைக்கொண்ட யுத்த தந்திரோபாயமும் பயனற்றதொன்றாகவே இருந்தது. அதாவது ரிவிகிரண 1,2 கட்டங்கள் மூலம் வலிகாமத்தின் தென்கிழக்கின் சிறு பகுதிகளையும், தென்மராட்சியின் வடமேற்குப் பகுதியையும் பிடித்தமையானது இராணுவ ரீதியில் எத்தகைய முக்கியத்துவம் மிக்கது என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஏனெனில் வலிகாமத்தின் தென்கிழக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள புலிகளை முற்றாக வெளியேற்றாத நிலையிலும், சாவகச்சேரியில் இருந்து பிரதான வீதி அரியாலை வரையாக ஏ-9 பாதை விடுதலைப் புலிகளிடமே தொடர்ந்தும் இருக்கையில் இந்நடவடிக்கைகள் தந்திரோபாய ரீதியில் என்ன பயனுள்ளவை என இராணுவ ஆய்வாளர் கேட்கின்றனர்.

அதாவது, இராணுவம் புலிகளை முறியடிப்பதற்கான நோக்கில் பயனேதும் உள்ளதாக இல்லை. கொழும்பிலுள்ள பிரபல இராணுவ ஆய்வாளர்கள்கூட இதனைச் சுட்டிக்காட்டுகின்றனர். தந்திரோபாய ரீதியில் இம் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றவை. தோல்வியில் முடிந்த முன்னைய தந்திரோபாயங்களின் பாற்பட்டவை என்றே அவர்கள் கூறுகின்றனர். சாவகச்சேரி நகரைக் கைப்பற்றியமைகூட இவ்வாறானதே என்பது பல இராணுவ ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும்.

அடுத்ததாக இராணுவரீதியிலான இழப்பு என்பது பலவகைப்பட்டதாக இருந்தது. ஒருபுறம் சிறீலங்கா இராணுவம் உயர்வலுக் கொண்டதாக மாறிய பின்னர் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முதலாவது வலிந்து தாக்குதல் இதுவாகும். ஏற்கனவே இராணுவத்தினர் மேற்கொண்ட வலிந்து தாக்குதல்களின் போது இராணுவத் தரப்பிற்கு பலத்த சேத்தை விளைவித்திருந்த விடுதலைப் புலிகள், ஓயாத அலைகள் 4 இன் மூலம் அதனை மீண்டும் நிலைநிறுத்தியதோடு தமது நிலமீட்புப் போர் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்பதையும் நிரூபணம் செய்தனர்.

இது நவீன ஆயுத தளபாடங்களினால் தமது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமாகமாட்டாது என்பதையும் இராணுவம் ஆளணி மற்றும் தளபாட இழப்புக்களைச் சந்திப்பதைத் தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்பதை புலிகள் உறுதி செய்வதாக இருந்தது.

இவ்வாறான தந்திரோபாய ரீதியிலான தோல்வி அரசியல் ரீதியிலான பின்னடைவுகளை சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஆட்சியாளருக்கு கொடுக்கும் என்பதில் கேள்விக்கே இடமில்லை. ஒருபுறம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் வரை யுத்தம் தொடரும் என்ற பிரகடனமும்- மறுபுறம் புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா விடுதலைப் புலிகளிடம் இழந்த பகுதிகளை ஒக்டோபர் 10ஆம் திகதிக்குள் பிடிப்போம், ஆனையிறவு மீட்கப்படும் எனச் சூளுரைத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால் ஓயாத அலைகள்-04இன் மூலம் விடுதலைப் புலிகளோ மேலும் தாயக மண்ணை மீட்டெடுக்கத் தொடங்கியுள்ளதோடு ஆனையிறவில் இருந்து மேலும் சில கிலோமீற்றர் தூரத்திற்கு இராணுவத்தினரைத் தள்ளியுள்ளனர்.

அதாவது அரசியல் ரீதியில் எதிர்கால நடவடிக்கைக்கும் தேர்தல் பிரச்சாரத்திற்கும் என யுத்தத்தையே ஆளும்கட்சி நம்பியிருக்கையில் ஓயாத அலைகள்-04 அரசின் திட்டங்களுக்கு பதிலடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலத்தால் ஒருதேசிய
# கட்டி எழுப்பும் பணியி



**தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை யொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் படையணி விடுத்த அறிக்கை.**

அன்பான தமிழீழ மக்களே, இன்று தமிழீழ பெண்களின் எழுச்சிநாள்.

2ஆம் லெப் மாலதி தன் உயிரை ஈகம் செய்து கொண்டதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழீழப் பெண்ணுக்கும் உள்ள உரிமையையும் அதற்கான தகமையையும் உலகத்தின் முன்னால் கம்பீரமாக நிலை நிறுத்திக்கொண்ட புனித நாள்.

எமது தேச விடுதலைப் போராட்டம் வெறுமனே மண்மீட்புப் போராட்டமாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமான தமிழீழ தேசத்தின் சமூக மாற்றத்தையும் இலக்காகக் கொண்டது. ஆகவேதான் போராட்டம் கட்டி வளர்க்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்திலேயே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் பெண்களும் அணி சேர்த்துக் கொள்ளப்பட்டனர். காலம் காலமாக பிற்போக்குத் தளைகளுள் சிக்குப்பட்டிருந்த எமது சமூகத்தின் அரைப்பங்கினரான பெண்கள் தம்மனவுலக இருட்டுக்குள் இருந்து வெளியே வரவும், தன் பலத்தை தானே உணரவும் தன் பலத்தின் மூலமாக ஒரு தேசிய இனத்தின் ஆன்மாவையே கட்டியெழுப்பும் பணியில் பங்கேற்கவும் வடிவமைக்கப்பட்டது.

உலகின் பல்வேறு திசைகளிலும் பல வேறுபட்ட காலப்பகுதிகளிலும் பல்வேறு காரணங்களுக்காகவும் போராட்டங்கள் நடந்தேறியுள்ளன. நடந்து கொண்டும் இருக்கின்றன. இவற்றில் பெண்களின் பங்களிப்புகள் அவர்களின் நிலைப்பாடுகள் எப்படி அமைந்தன என ஆராய்ந்தால் பெண்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களோ அல்லது பெண்கள் பங்கெடுத்த போராட்டங்களோ அல்லது பெண்களின் போராட்ட வரலாறுகளோ மிகவும் அரிதாகவேயுள்ளன. காலப் பெருவெளியில் கரைந்துபோன உண்மைகளாக இவ்வரலாறுகள் உருவழிந்து போயின. உணர்வுள்ள மனித உயிராக மதிக்கப்படாமல் மனிதனின் உடமைகளுள் ஒன்றாக மதிக்கப்பட்ட பெண் அந்தப் போர்களினால் கொடூரமாக பழிவாங்கப்பட்ட வரலாறுகள் மட்டுமே வரிவிபரிப்புகளுக்கு அப்பாற்பட்டவைகளாக எஞ்சி நிற்கின்றன.

அடக்குமுறை நெருக்கடிகளுக்குள் வாழ்கின்ற உயிரினம் நிச்சயமாக புரட்சிக்காய் கிளர்ந்தெழுகின்ற மனோபலம் பெறும். அவ்வாறே தமிழீழ பெண்ணும் ஏற்கனவே இருந்த சமூக அழுத்தங்களோடு இனவாத அடக்குமுறையையும் எதிர்கொள்ள வேண்டியவளானாள். சுயமாக முடிவெடுக்க முடியாது தங்கி வாழும் பிராணியைப்போலவே கருத்துரட்டப்பட்ட வெளியுலகம் புரியாத பெண் இனவாத வன்முறைகளால் தனது தங்கு நிலைகளும் பறிக்கப்பட்ட பொழுது வாழ்வின் சுமையை தனித்துச் சுமக்க முடியாமல் உடலும், உளமும் பாதிக்கப்பட்டு திக்கற்றவளானாள். இந்தச் சூழ்நிலைதான் போராட வேண்டிய தேவையை அவருக்கு உணர்த்தியது.

அதற்கான வாசலும் அகலத் திறந்து அவளை வரவேற்றது. ஆயினும் என் குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள்ளிருந்து வெளியேவருவதற்கே பெரும் போராட்டத்தை எதிர்கொள்ளவேண்டியவளானாள். ஒரு பெண் சாதாரணமாக வெளியே சென்று வருவதையே விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்த்த சமூகம் அவள் விடுதலைப் போராட்டத்துடன் முற்றுமுழுதாக இணைந்துகொள்வதை இலகுவில் எப்படி ஏற்றுக்கொள்ளும். பழைய கருத்துருவாக்கங்களுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் இடையே பலத்த முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. காலத்தின் வேகமான ஓட்டமும் அதன் சேவையும் மாற்றங்களை உள்வாங்கத் தயாரானது. மனித ஆளுமையின் தேவையும் அதன் வீச்சம் ஆண், பெண் என்ற பேதங்களை கீழே தள்ளிச் சாய்த்தது. அந்த வகையில்தான் பல படிமுறை வளர்ச்சிகளைத் தாண்டி நிமிர்ந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நிழலில் தமிழீழப் பெண்களின் வளர்ச்சியும் அசைக்க முடியாத தனியிடத்தைப் பெற்று உயர்ந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் களமுனைகளிலும் சமூகத்திலும் பெண்கள் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளனர். எந்தவொரு விடயத்திலும் கருத்துரட்டலே செயற்பாட்டைத் தீர்மானிக்கும் எனினும் தமிழீழப் பெண்கள் விடயத்தில் அவர்களின் செயற்பாடுகளே அவர்கள் பற்றிய சமூகத்தில் தவறான சில கருத்துரட்டல்களால் மாற்றியமைந்தன. அதிலும் குறிப்பாக பெண்களின் ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களின் களமுனைச் செயற்பாடுகள் முக்கிய பங்கு வகித்தன. தன்னம்பிக்கை தலைமைத்துவம், முடிவெடுத்தல் போன்ற பல ஆற்றல்களைப் போர்க்களம் அவர்களுக்குப் புகட்டியது. அது மட்டுமல்ல உலகின் விழிகளையும் அவர்கள் பால் திருப்பியது.

1984ஆம் ஆண்டு அடம்பன் தாக்குதல்களுக்குப் பின்பு இந்திய இராணுவத்துடனான போரில் பெண்போராளிகளும் பல மோதல்களை எதிர்கொண்டனர். தமிழீழப் பெண்களின் முதல் வீரவித்து 2ஆம் லெப் மாலதி அப்போதுதான் தன்னையும் விதையாக்கிக் கொண்டாள். தமிழீழப் பெண்களின் ஒட்டுமொத்தமான எழுச்சியின் குறியீடாக 2ஆம் லெப் மாலதியின் ஈகம் வரலாற்றில் இடம் பிடித்தது. இந்திய இராணுவக் காலங்களில் எமது போராட்டத்தை காத்து வளர்த்தெடுத்த எமது தேசியத் தலைவர் அவர்கள் பெண் போராளிகளை தனது நேரடியான கவனத்தில் நெறிப்படுத்தினார். அந்தக் காலப் பகுதியின் பெறுமதி இன்றைய மகளிர் படையணிகளின் ஒவ்வொரு கட்டமைப்பிலும் பிரதிபலிப்பதை அவதானிக்க முடியும்.

2ஆம் கட்ட ஈழப்போரில் பல வெற்றிச் சாதனைகளை நிலைநாட்டிய மகளிர் படையணிகளின் போரியல் வரலாறு 3ஆம் ஈழப்



ஓயாத அலைகள்- 03:- கனகராயன்குளம் பகுதியில் புலிகளின் மகளிர் படையணியினர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...னத்தின் ஆன்மாவை ... தமிழீழப் பெண்கள் !



போரின் ஆரம்பக் கட்டத்திலேயே புதிய பரிணாமத்தையும், விரிவாக்கத்தையும் கண்டது. பெரும் சமர்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு களமுனைகளில் தனி முத்திரைகளைப் பதிக்கத் தொடங்கியது. தனித்து முடிவெடுக்கும் ஆற்றல், நெருக்கடி மிகுந்த போர்க்களங்களில் அணிகளை வழி நடத்தும் ஆற்றல், களமுனைகளிலும் மக்கள் மத்தியிலும் திட்டமிட்டு நிர்வாகங்களை நடத்தும் ஆற்றல் இப்படி பல ஆற்றல்கள் அவர்களுக்குள்ளே உருவாகின. இதேவேளை சமூகத்திலும் மாற்றங்கள் மெல்ல மெல்ல முகிழ ஆரம்பித்தன. பெருமளவு பெண்கள் தம்மை போராட்டத்துடன் இணைத்துக்கொண்டனர். சமூகம் அதை இயல்பாக ஏற்றுக்கொண்டது. பல்கிப்பெருகிய பெண்போராளிகளின் வேகம் மகளிர் படையணிகளாக விரிவடைவதற்கு வழிவகுத்தது. சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்ச் சமர்களிலும் எமது மண்ணை மீட்டெடுத்து எதிரியை அழித்தொழிக்கும் சமர்களிலும் தேசியத் தலைவர்களின் நேரடி நெறிப்படுத்தலில் மகளிர் படையணிகள் களம் இறங்கினர்.

வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான எதிரியின் ஆக்கிரமிப்புப் போர்களில் குறிப்பாக ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கைச் சமர்க்களம் பெண் போராளிகளை மேலும் புடம்போட்ட களமாகும். சிறீலங்காவின் அதிவிசேட சிறப்பு அணிகளை எதிர்கொண்டு வெற்றிபெற்று பலரையும் வியப்பில் ஆழ்த்திய வரலாறுகள் இக்காலப்பகுதியில்தான் நடந்தேறின. நெருக்கடியான முன்னணிக் காவல் நிலைகளில் மாறி மாறி வரும் எல்லாக் காலநிலைகளையும் எதிர்கொண்டபடி தொடர்ச்சியான காத்திருப்புக்கள் இடையறாத தொடர் மோதல்கள் இவற்றினை அவர்கள் எதிர்கொண்ட விதம் உலகினில் இதுவரை வேறெந்தப் பெண்களாலும் நிகழ்த்தப்படாத சாதனை. பெண்களுக்கேயுரித்தான அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றையும் மிகுந்த சகிப்புணர்வுடன் தாக்குப்பிடித்தனர். இந்த இடர்பாடுகளை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு போரை எதிர்கொண்டு வெற்றி பெற்றமையானது எமது பெண்களின் ஆழமான மனவுறுதியை உலகுக்கு வெளிக்காட்டியது.



மண்மீட்புப் போரரங்குகளை விரித்த ஓயாத அலைகள் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் மகளிர் படையணிகள் கடலிலும், தரையிலும் தம் வீரத்தைப் பதித்துக்கொண்டனர். எதிரியை ஊடறுத்து, உள்நுழைந்து, நிலையமைத்து, மறித்துத்தாக்கி நூற்றுக்கணக்கான எதிரிகளை அழித்ததுடன் கரும்புலிகளாக எதிரியின் இதயத்திற்குள் புகுந்து அவர்களின் உயிர்க்கூட்டையே ஆட்டியசைத்து பலம் பொருந்திய ஆட்லறி நிலைகளையும் முக்கிய இலக்குகளையும் தகர்த்தழித்தனர். வரலாற்றுப் புகழ் பூத்த ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையில் பெரும் கடற்சமரையும் எதிர்கொண்டு எதிரியின் கோட்டைக்குள் தரையிறங்கி தமக்கான விநியோகப் பாதையையும் தாமே திறந்து கொண்ட வெற்றிச்சமரில் மகளிர் படையணிகளும் பெருமளவில் பங்கெடுத்திருந்தனர்.

சிறீலங்காவின் பேரினவாத இராணுவம் எம்மீது திணிக்கும் கொடூர யுத்தத்திற்கு முகம் கொடுத்து அதனை வெல்லுவதற்காக எமது தேசியத் தலைவர் அவர்களால் அறிமுகப்படுத்தப்படும் நவீன இராணுவத் தொழில்நுட்பம் சார்ந்த பல செயற்பாடுகளிலும் பெண்போராளிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அத்துடன் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையில் எதிரியுடனான மிக நெருங்கிய தூரத்தில் கையிலுள்ள ஆயுதத்தை இயக்க முடியாத நிலையில் கைகலப்புச் சமர்களிலும் ஈடுபட்டு வெற்றியைப் பெற்றனர். இந்த இராணுவச் சாதனைகளை நிலைநாட்டுவதற்காக அவர்கள் அடைந்த துன்பங்கள், சிந்திய இரத்தம், அர்ப்பணித்த உயிர்கள் விலைமதிக்க முடியாதவை. இந்த மனமுதிர்ச்சியும், போராற்றலும்தான் உலகத்திலேயே முதன் முதலாக இராணுவ உயர்நிலைப் பெண் தளபதிகளை தமிழீழம் உருவாக்க வழி சமைத்தது.

மருத்துவம், அரசியல், சட்டம் என இந்தத் தேசத்தின் அடிப்படைக் கட்டுமானங்களில் பெண்கள் முக்கிய இடங்களை வகிக்கின்றனர். தமிழீழத்தில் ஏற்பட்டுள்ள இந்த அக, புறநிலை மாற்றங்கள் சமூகப் பெண்களின் வாழ்விலும் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இதுவரை காலமும் குடும்பம் என்ற கட்டமைப்பிலிருந்து வெளியே வந்து போராட்டக்கட்டமைப்புக்குள் இணைந்த பெண்ணே சாதனைகளைச் செய்து வந்தாள். ஆனால் இப்பொழுது குடும்பத்துடன் வாழுகின்ற பெண் எல்லைப்படையாக களத்திற்கும் சென்று வருகிறாள். கிராமியப்படையாக பயிற்சி மைதானங்களில் அணிவகுத்து நிற்கின்றாள். எல்லையிலே கணவன் மாவீரன் ஆகிவிட குடும்பப் பொறுப்பை சுமந்து நிற்கின்றாள். தன்விதியைத் தானே எழுதத் தயாராகிவிட்ட தமிழீழ பெண்களின் ஆற்றலும், பலமும், அறிவு முதிர்ச்சியும் உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. எனவே 2ஆம் லெப். மாலதியின் நினைவுநாளும், தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளுமான இன்று தமிழீழப் பெண்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது தேச விடுதலைப் போராட்டம் இறுதி இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது. அந்தக் கட்டத்தில் நாம் பெரும் படையணியாக மாறி எதிரியைத் துரத்தியடிக்க வேண்டும். எமது எல்லைகளை மீட்டெடுக்க வேண்டும். விரைவில் தமிழீழ மண் விடுதலையை சாத்தியமாக்குவதன் மூலமே பெண் விடுதலையை சாத்தியமாக்க முடியும். ஆகவே அனைத்துத் தமிழீழப் பெண்களும் கிராமியப்படையாக, எல்லைப்படையாக, நிரந்தரப்படையாக இணைந்து எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அணையாத தீபங்கள்



லெப் கேணல் நாதன்



கப்டன் கஜன்

## லெப் கேணல் நாதன்

நினைவுப் பெருவெளியில் நிறைந்த விடுதலைப் போராளியின் நினைவுக் குறிப்பு.

கந்தையா பேரின்பநாதன் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அன்புக்குரிய நாதனாக, தாயக விடுதலைப் பணியில் இயந்திரமாக உழைத்தவன். 26.10.1996 அன்று பகற் பொழுதை விழுங்கிக் கொண்டிருந்த, ஒரு குளிரான மாலைப் பொழுதில் இனம் தெரியாத தேசத் துரோகிகளின் துப்பாக்கிக் குண்டுகள் கப்டன் கஜனோடு இணைந்து எங்கள் அன்பிற்கினிய நாதனையும் விழுங்கிக் கொண்டது. தாய்நிலத்திற்காக புலத்தினிலே உழைத்த இரு மலைகளையும் நாம் இழந்து 4 வருடங்கள் கடந்துதான் போனது.

தமிழீழம் அரியாலையில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நாதன் தாய்நிலம் பிரிந்து பிரான்ஸ் மண்ணில் கால் பதித்த நாள் முதலாய்... விதையாகி வீழும் வரையிலும் தேசவிடுதலைக்காய் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டவன். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகத்துடன் 1984களிலேயே இணைந்து கொண்ட நாதன் இயக்கத்தின் பல்துறைப் பணிகளிலேயும் முழுமூச்சுடன் ஈடுபட்டான். வெளிநாடுகளின் இயக்க வேலைத் திட்டங்களில் மிக முக்கியமான பணிகளான நிதிசேகரிப்பிலும், பரப்புரை மேற்கொள்ளுவதிலும் நாதன் புரிந்த சாதனைகளை எழுத்து வரிகளில் புலப்படுத்துவது கடினம்.

மற்றவர்களுடைய கஸ்ட துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்வதிலும், மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதிலும் நாதனுக்கு நிகர் நாதன்தான். அவனுடைய அந்த உயர்ந்த பண்புதான் அவனை வெளிநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் பெரு மதிப்பிற்குரியவனாக நம்பிக்கைக்கு உரியவனாக உயர வைத்தது.

பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியக அனைத்துச் செயற்பாடுகளிலும் முன்நின்று செயற்பட்டவன். நாதன் சக இயக்கப் பணியாளர்களுக்கெல்லாம் ஒரு தாயாக... தந்தையாக... உற்ற நண்பனாக இருந்து செயற்பட்டவன். அவனது குழந்தை போன்ற வெள்ளை மனசு எதிரியைக்கூட இலகுவில் ஈர்த்துக் கொள்ளவல்லது. மற்றவர்கள் மீதில் அவன் காட்டும் ஆழ்ந்த அக்கறையும் ஈடுபாடும் வியப்புக்குரியது.

நாதன் பிரெஞ்சுப் பணியகப் பணியாளனாக இருந்து, நிதிப் பொறுப்பாளனாக இருந்து, சர்வதேச நிதிப் பொறுப்பாளனாக மிகப் பழுவான பொறுப்பையெல்லாம் தலையில் சுமந்து கொண்டு, சர்வதேசமெங்கும் அலைந்து திரிந்து தேசமீட்புக்காய் உழைத்துக் கொண்டிருந்த போதிலும், எப்போதாகிலும் நாதனைக் காண நேருகிற போதில், குழந்தைச் சிரிப்புடன் வெள்ளை உள்ளம் கொண்ட நாதனாகத்தான் காணமுடிந்தது.

புலம்பெயர்ந்த மண்ணிலே இந்த வாழ்வுச் சகதிக்குள் இருந்து கொண்டு, 12 வருடங்களுக்கு மேலாக... குண்டு பட்டு வீழ்ந்த அந்தக் கணப்பொழுது வரையும் தாயக விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்தவன் நாதன்.

இறுதியாக தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நாதன் கல்லறை மீதில் வடித்த வரிகள்...நாதன் என்கிற போராளியின் மகத்துவத்தை என்றென்றும் வெளிப்படுத்தி நிற்குமெனலாம்.

"நாதன், எமது விடுதலை இயக்கத்தின் ஒரு மூத்த உறுப்பினர், நேர்மையும் கண்ணியமும் மிக்கவர். விடுதலை இலட்சியத்தில் அசையாத உறுதி கொண்டவர். நீண்டகாலமாக சர்வதேச நிதி திரட்டும் பொறுப்பைச் சுமந்து உலகெங்கும் அலைந்து அயராது உழைத்தவர். கடும் உழைப்பாலும் செயற்திறமையாலும் தமிழீழ விடுதலைப் போருக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது."



-நாகேஸ்

## கப்டன் கஜன்

"ஈழம் எங்கள் பூமி தம்பி
நாம் வளர்ந்த தேசம் தம்பி
நீ மறந்து தானே தம்பி-கண்
மூடியே துரோகம் செய்யாதே தம்பி"

1989ஆம் ஆண்டில் 'ஜீவராகங்கள்' என்ற ஒளியிழைநாடாவில் ஒலித்த அந்தப் பாடல் வரிகளின் சொந்தக்காரன் இப்போது எம்முடன் இல்லை. ஆனால் புலம்பெயர்ந்த அந்தப் போராளிக் கவிஞனின் பாடல் எம்மை பின்தொடர்ந்த வண்ணமே உள்ளது. எம்முடன் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றது. ஆம் அவன் புலம்பெயர்ந்த மண்ணிலேயே மாவீரனாகிவிட்ட கப்டன் கஜன்.

26.10.96 அன்று ஒரு தேசத்துரோகியின் துப்பாக்கிக் குண்டுகள் இந்த உன்னதமானவனை எம்மிடமிருந்து பிரித்தெடுத்தது. தாயக விடுதலைக்காக புலம்பெயர்ந்த மண்ணில் கஜன் ஆற்றிய பணிகள் அளப்பரியன. 17.04.1966 இல் பிறந்த கஜன் யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவனாவான். கல்லூரி நாட்களிலேயே எழுத்தார்வம் கொண்டவனாய் விளங்கினான்.

1987இல் பிரான்ஸ் நாட்டில் கால் பதித்த கஜன் மறு ஆண்டே விடுதலைப் புலிகள் பிரான்ஸ் கிளையின் ஒரு அங்கமாக இயங்கி வந்த கலை கலாச்சாரப் பிரிவுடன் தன்னை இணைத்துக் கொண்டு தனது தாயக விடுதலைப் பணியைத் தொடர்ந்தான். 1987 இல் மண்ணில் கால் பதித்த இந்திய இராணுவத்தால் எம் மக்கள் அனுபவித்த கொடிய துயரங்கள் கஜனின் மனதில் ஆழாத வடுக்களாய்ப் பதிந்து அவனது மெல்லிதயத்தைச் சுட்டது. அவன் தன் பாடல்களால் அதனைவெளிப்படுத்தி புலம் பெயர்ந்.த மக்களிடம் பங்களிப்புக்காய் மன்றாடினான்.

புலம்பெயர்ந்த மண்ணிலே 1988 தொடங்கிய கஜனின் விடுதலைப் பணி அவன் மரணித்து விதையாகி வீழும் வரையும் வீச்சுடனும் மூச்சுடனும் தொடர்ந்த வண்ணமேயிருந்தது.

கஜனின் தேச விடுதலைப் பணியை எழுத்துருவில் வடிப்பதென்பது மிகவும் சிரமமானது. பன்முகத் திறமையாகவும், ஆளுமையும் நிறைந்த ஒரு அற்புதமான விடுதலைப் பணியாளனை தமிழீழதேச மக்கள் இழந்து தவித்தனர்.

ஒரு பாடலாசிரியனாய்.., கவிஞனாய்..., விமர்சகனாய்.., ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியனாய்..., கலைஞனாய்..., எல்லாவற்றிற்கும் மேலாய் ஒரு நல்ல ரசிகனாய் எத்தனை ஆளுமை நிறைந்த முகங்கள் கஜனுக்கு.

பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி என எத்தனையோ நாடுகளின் வீதிகளிலெல்லாம் நிதி சேகரிக்க அலைந்தவன்.

எல்லாவற்றிலும் மேலாக 14.01.1995இல் ஈழமுரசு பத்திரிகையை கஜன் ஆரம்பித்த பின்னர், அவனது ஆற்றலும் ஆளுமையும் மேன்மேலும் அதிகரித்து புலம் பெயர்ந்த மண்ணிலேயே தேசவிடுதலைப் பணிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டதெனலாம். போராட்டத்திலிருந்து ஒதுங்கி நின்ற பலரும் கஜனது பண்பியல்பால் ஈர்க்கப்பட்டார்கள். சமூக அக்கறை கொண்ட ஆசைத்தம்பியின் அழகுமொழிநடையால் பலரும் ஈர்க்கப்பட்டார்கள். சமூகச் சீரழிவிற்கு எதிர்க்குரல் எழுப்பிய அபிநயனின் விமர்சனக் குரல் கண்டு பலரும் வியந்தனர். இளம் எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து " பாலம்" ஒன்றினையும் கட்டியெழுப்பினான். . களத்தில் போராளிகள் ஆயுதம் ஏந்தினர். புலத்தில் கஜன் பேனா ஏந்தினான். வீரர்கள் விதையாகலாம் ஆனாலும் இலட்சியம் வெல்லும். அவர்கள் கனவுகள் புதிய தேசத்தில் வாழும். இறுதியாக கப்டன் கஜனின் கவிதை வரிகளோடு

உயர் வற்றிய மனிதம்
விழிகளில் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி

தவம் செய்து கிடைக்கும்
மனிதத் தேடலில்
இந்த மரணங்கள்
மறுபடியும் உயிர்க்கும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "உண்மையின் குரல்வளை நசுக்கப்பட்டுள்ளது"

## தமிழர் மனிதர் உரிமை மையம்

பிரபல பத்திரிகையாளரான 38 வயதான மயில்வாகனம் நிமலராஜன் தமது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கின்றார். தமது அறையின் யன்னலின் அருகே இருந்தபடி செய்தி அறிக்கை ஒன்றினை தயார் செய்து கொண்டிருந்த வேளையில் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

நிமலராஜனின் தந்தையர் மயில்வாகனம்(வயது 65), தாயார் லில்லி மயில்வாகனம்(வயது 62) மற்றும் அவரது மருமகனான 11வயதுச் சிறுவன் பிரசன்னா ஆகியோரும் வீட்டினுள் வீசப்பட்ட கிரேனட் சிதறல்களால் கடும் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதிஸ்ட வசமாக அவரது மனைவியும் 3 பெண் குழந்தைகளும் தப்பியுள்ளனர்.

திரு. நிமலராஜன் அவர்கள் தாம் இறப்பதற்கு முதன் நாளும் தமது நண்பர்களிடத்து உரையாடிய வேளையில் கொலைப் பயமுறுத்தல் பல தமக்கு விடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். திரு. நிமலராஜனின் செய்தியறிக்கைகள் எப்பொழுதும் தமிழ் மக்கள் பிரதானமாக எதிர் கொள்ளும் யுத்த முனைப்புக்களுடான இடப்பெயர்வுகளையும் அதனால் தமிழ் மக்கள் படும் இன்னல்களை குறிப்பனவாகவே இருக்கும். அவர் அண்மையில் நடந்த தேர்தலில் அரங்கேறிய வாக்களிப்பு மோசடிகள், பித்தலாட்டங்கள், வன்முறைகள் குறித்தும் துணிகர மாக உண்மைச் செய்திகளை வழங்கியிருந்தார். இந்தத் தேர்தலிலே அரசதரப்பு ஆயுதக் குழுவொன்றும் போட்டியிட்டிருந்தது. இக்குழுவானது யாழ் குடாநாட்டில் சிறீலங்கா அரசபடைகள் செய்யும் மனித உரிமை மீறல்களுக்கு எல்லாம் துணைபுரிந்ததாகும். இதற்குப் பிரதியு பகாரமாகவே இராணுவம் இக்குழுவினருக்கு தேர்தலில் ஒத்தாசை புரிந்துள்ளதோடு, இக்குழுவினரின் வெற்றிக்காக இவர்கள் புரிந்த மக்கள் விரோதச் செயல்களுக்கு இராணுவமும் பாதுகாப்பு வழங்கியதையும் மிகவும் துணிகரமாகக் குறிப்பிட்ட நிமலராஜன் இக்குழுவின் செயலையும் கடுமையாக, பகிரங்கமாகக் கண்டித்துமிருந்தார்.

இவருடைய செயற்பாடுகள் நேரடியாக ஈபிடிபியினரை சுட்டுவதாக இருந்தமையால் கடுமையாக இவரின் மேல் வெறுப்படைந்திருந்தனர். அவருடைய நீதியான செய்தியறிக்கைகள் ஈபிடிபியை பெரிதும் கோபமூட்டச் செய்திருந்தது. இந்த அமைப்பினரே கடந்த ஆகஸ்ட் மாதம் 1999ஆம் ஆண்டு யாழிலிருந்து வெளிவரும் தினசரியான உதயன் மீது கைக்குண்டொன்றினை வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நிமலராஜனின் படுகொலையின் பின்னணியின் ஈபிடிபி உள்ளது என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது.

திரு. நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட செய்தியானது உலகெங்கிலும் உள்ள தமிழ் அமைப்புக்களுக்கும் மற்றும் சிறீலங்கா, நியூயோர்க், வியன்னா ஆகிய இடங்களைத் தளமாகக் கொண்டுள்ள பத்திரிகையாளர்களுக்கான உரிமைகளைப் பேணும் அமைப்புக்களுக் கும் பலத்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

சிறீலங்கா அரசு திட்டமிட்ட வகையில் செய்தித் தணிக்கையை அமுல்ப்படுத்தி வருகின்றது. இதன் காரணமாக தமிழ்ப்பகுதிகளில் இருந்து வெளிநாட்டு உள்நாட்டுச் செய்தியாளர்கள் வழங்கும் செய்திகளை வழங்கிவருவது தடுத்து வருவதும் தெரிந்ததே. இதனைப் பல வருடங் களாக பல்வேறு சர்வதேச அமைப்புகள் கண்டித்து வருவது தெரிந்ததே. திரு.நிமலராஜன் தம்மால் இயன்றளவு உண்மைச் செய்திகளை உள்ளூர் ஊடகங்களுக்கும், பல சர்வதேச ஊடகங்களுக்கும் வழங்கி வந்துள்ளார். அவரது நீதியான நடுநிலையான உண்மையான கடமைக்காகக் கொடுத்த விலை அவரது உயிராகும்.

கோழைத்தனமாக கொடூரமான முறையில் கொல்லப்பட்டது பத்திரிகையாளரின் உயிர் மாத்திரமல்ல உண்மையின் குரலும் ஆகும்.

19.10.2000 அன்று ஈ.பி.டி.பி கூலிக்குழுவினரால் பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும், இப்படுகொலை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட்டு உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு சந்திரிகா அரசு ஆவனசெய்வதற்கு சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும், ஆர்வலர்களும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கோரியும் தமிழர் மனிதர் உரிமை மையம்,கடந்த 23.10.2000 அன்று விடுத்த அவசர வேண்டுகை.

## ஒக்டோபர் மாதத்தில் தமிழர் விடுதலை வரலாற்றில் நடந்தேறியவை

### சிங்கள இராணுவத்தின் மீதான முதற்தாக்குதல்

15.10.1981 அன்று யாழ் காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்காத் தரைப்படை மீது முதன்முதலாக விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதல்

27.10.1982 அன்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் மீது மூத்த தளபதி லெப்.சீலன் தலைமையிலான விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இவ் வெற்றிகர பொலிஸ் நிலையத் தாக்குதலில் 3 சிங்களப் பொலிசார் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். 33 சுடுலன்களும் பெருந்தொகை வெடிபொருட்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### திருவிலில் தீயான பன்னிரு வேங்கைகள்



இந்திய-இலங்கை ஒப்பந் தத்தின் பிரகாரம் நிராயுதபாணி களாக தமிழீழத்தின் வடகடற் பிராந்தியத்தில் பயணம் செய்த யாழ் மாவட்டத் தளபதி லெப்.கேணல் குமரப்பா, திருமலை மாவட்டத் தளபதி லெப்.கேணல் புலேந்திரன், மேஜர் அப்துல்லா உட்பட 12 விடுதலைப் புலிகளை 03.10.1987 அன்று சிறீலங்காக் கடற்படை கோழைத்தனமான வகையில் கைது செய்தது. ஒப்பந்தத்திற்கு முரணாக சிங்கள அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு இவர்களை விசா ரணை செய்ய முற்பட்ட வேளையில் 5.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரகாவியம் படைத்தனர் இவ்வேங்கைகள்.

### இந்திய-புலிகள் போர்

தமது ஆதிக்க நலன்களுக்காக ராஜீவ்காந்தி தலைமையிலான இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழீழ த்தினை ஆக்கிரமித்த இந்தியப் படைகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் 10.10.1987 அன்று தாக்குதலைத் தொடு த்தனர்.

### யாழ் போதனா வைத்தியசாலைப் படுகொலை

1987.10.21, 22 ஆகிய தினங்களில் அமைதி காக்கவென வந்த பாரதப் படைகளால் யாழ் போதனா வைத்தியசாலையில் இனப் படு கொலை ஒன்று அரங்கேறியது. கேணல் பிரர் தலைமையிலான இந்தியச் சிப்பாய்களின் வெறி த்தனத்தினால் நோயாளிகள், ஊழியர்கள் உட்பட 68 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### ரிவிரச நடவடிக்கை ஆரம்பம்

17.10.1995 அன்று யாழ் நகரைக் கைப் பற்றும் நோக்கிலான சந்திரிகா அரசின் ரிவிரச-1 இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. 60000 படையினர் திரண்டு 10 கிலோமீற்றர் தூரத்தை 50 நாட்களில் கடந்து சிங்களம் யாழ் நகரை வந்தடைந்தது. இதன்போது விடுதலைப் புலி களால் மேற்கொள்ளப்பட்ட வழிமறிப்புத் தாக்கு தல்களில் பல நூறு படையினர் கொல்லப்பட்டு. 4000மேற்பட்ட படையினர் போரரங்கிலிருந்து அகற்றப்பட்டனர்.


### மாணவி கிருசாந்தி படுகொலை

7.10.1996 அன்று யாழ் குடாநாட்டை ஆக்கி ரமித்து நின்ற சிங்களப் படைகளால் கைதடிக் காவலரணில் வைத்து உயர்தர மாணவியான குமாரசாமி கிருசாந்தி பாலியல் துன்புறுத்தலு க்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். கிருசாந்தி பற்றி விசாரிக்கவெனச் சென்ற அவரது தாயார், சகோதரர் மற்றும் அயலவரும் சிங்களப் படை களால் செம்மணி வெளியில் கொன்று புதைக்கப் பட்டனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிலையற்ற ஆட்சியை நோக்கிச் செல்லும் சிறீலங்கா ‘ஜனநாயக ஆட்சி’

சிறீலங்காவின் 11 வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் எதிர்பார்த்த மாதிரியே வன்முறை, மோசடி, ஆளும் கட்சியின் வெற்றி என்பனவற்றுடன் முடிவடைந்துள்ளது. ஆனால், இத் தேர்தலானது சிறீலங்காவின் இரு பிரதான கட்சிகளான ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்பார்த்த வகையில் முடிவுகளைக் கொண்டுள்ளதாக முடிவடைந்துள்ளது எனக் கூறுவதற்கில்லை.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெளிப்படையான கோரிக்கையானது மூன்றில் இரண்டு பெரும் பான்மையை மக்கள் தமக்கு வழங்க வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் குறைந்த பட்சம் அறுதிப் பெரும்பான்மையை வென்றெடுப்பது என்பது அடிப்படை நோக்கமாகும்.

ஆனால் தேர்தல் முடிவுகளின்படி 107 ஆசனங்கள் மட்டுமே அதற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இது அறுதிப் பெரும்பான்மைக்கு ஆறு ஆசனங்கள் குறைவானதாகும். அத்தோடு சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் அரசாங்கத்தை அமைப்பதற்கென புதியவர்களையும் அரசாங்கத்திற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணியுள்ளது.

ஈ.பி.டி.பி, தேசிய ஐக்கிய முன்னணி- முஸ்லீம் காங்கிரசின் இணைக்கட்சி என்பன பெற்றுள்ள எட்டு ஆசனங்கள், பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைப்பதற்கு உதவக் கூடியனவாயினும் பொ.ஐ.முன்னணி மேலும் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே உள்ளது எனலாம்.

இந்தவகையில் பார்க்கையில் பொ.ஐ. முன்னணிக்கு ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றாலும் அது இத் தேர்தலில் பலவீனப்பட்டுப் போயுள்ளது என்ற கருத்து நிராகரிப்பதற்கில்லை. அதாவது தம்மால் இயன்ற அனைத்து வழிமுறைகளினையும் பயன்படுத்தியும் தனித்துவமாக பொ.ஐ.முன்னணியால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாது போய்விட்டது.

ஈ.பி.டி.பி ஏற்கனவே சந்திரிகா சார்பு ஆயுதக்குழுவே எனினும்- கடந்த முறை அரசாங்கத்தில் அது பங்கேற்கவில்லை. இம்முறை அக்குழுவையும் சந்திரிகா தமது அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார். இதற்கென ஒரு சில அமைச்சுப் பதவிகளையும் பகிரவேண்டிய நிர்ப்பந்தங்களும் உருவாகியுள்ளது.

இதேவேளை ஐ.தே.கட்சியே இத்தேர்தலில் அரசாங்கத்தைத் தம்மால் கைப்பற்ற முடியும் என நம்பிக்கை கொண்டிருந்தது. குறைந்தபட்சம் அறுதிப் பெரும்பான்மைக்குரிய 113 ஆசனங்களாவது தமக்கு கிடைக்கும் என அது கருதியது. அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரசிங்கா தமது கட்சிக்கு 113 ஆசனங்கள் கிடைக்கும் என ஏற்கனவே நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆனால் தேர்தலில் ஐ.தே.க விற்கு 89 ஆசனங்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றது. இது ஐ.தே.க முன்னரைவிடப் பின்னடைவைச் சந்திக்கவில்லை என்பதை வெளிக்காட்டி நிற்பினும் முன்னேற்றகரமான நிலையில் இருப்பதாக அர்த்தப்படுவதற்கு இல்லை. இந்தவகையில் பார்க்கையில் ஐ.தே.க விற்கும் இத்தேர்தல் ஏமாற்றம் அளித்துள்ளதாகவே நிச்சயம் இருக்க முடியும்.

இதேசமயம் இத்தேர்தலில் எதிர்பார்க்கை நிறைவு செய்யப்பட்ட ஒரே கட்சியாக இருப்பது ஜே.வி.பி யே ஆகும். மொத்தம் 10 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ள இக் கட்சியானது தொகுதிவாரியாக ஒரு ஆசனத்தில் கூட வெற்றி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும் தற்பொழுது ஜே.வி.பி பெற்றுக் கொண்ட ஆசனங்களில் பெரும்பாலானவை சுமார் ஏழு ஆசனங்கள் பொ.ஐ.முன்னணியிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளது என்றே கூறலாம். அதாவது தற்போதைய நிலையில் பொ.ஐ.முன்னணியைப் பாதிப்பதாகவே இது இருந்துள்ளது.

இதேசமயம் இப்பத்து ஆசனங்களும் சிறீலங்கா அரசியலில் ஜே.வி.பியை மூன்றாவது சக்தியாகத் தெளிவாகவே உறுதி செய்துள்ளது எனலாம். இது எதிர் காலத்தில் சிறீலங்கா அரசியலைப் பெருமளவில் தீர்மானிக்கும் ஒரு சக்தியாகவே இருக்கும் எனவும் உறுதியாக கூறுதல் முடியும்.

இவற்றைத் தவிர தமிழ்க் குழுக்களும், சிஹல உறுமயவும் சுயேட்சை ஒன்றும் 19 ஆசனங்களைப் பங்கு போட்டுக் கொண்டுள்ளன. இந்நிலையில் ஜே.வி.பி இரு பிரதான கட்சிகளுக்கும் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்ற நிலையிலும் பொ.ஐ. முன்னணி மீண்டும் ஆட்சி அமைத்துள்ளது.

ஆயினும், இப்போதுத் தேர்தலானது சிறீலங்கா அரசியலின் எதிர்காலம் பற்றி பல விடயங்களை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம். அதாவது பிரதான கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாமல் போயுள்ளமையும், மூன்றாவது சக்தியொன்று உறுதி செய்யப்பட்டுள்ளமையும், ஆட்சி அமைப்பதாயின் சிறிய கட்சிகளின் ஆதரவு அவசியமானது என்பனவும் இதில் முக்கியமானவையாகும்.

ஏற்கனவே இரண்டு பிரதான கட்சிகளும் சிறிய கட்சிகளுடனும் ஆயுதக் குழுக்களுடனும் இணைந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டுள்ளன. அதாவது பொ.ஐ முன்னணி சில இடதுசாரிகளையும், முஸ்லிம் காங்கிரஸையும், இலங்கைத் தொழிலாளர்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ய நோக்கிச்
# வின்
# முறை !



காங்கிரசையும் இணைத்துக் கொண்டே தேர்தலில் போட்டியிட்டு வருகின்றது.

ஐ.தே.கட்சியும் கூட உடைந்த சிறிய கட்சிகள் சிலவற்றின் உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டே தேர்தலில் போட்டியிட்டுள்ளது. இதற்கு இ.தொ.க வில் இருந்து பிரிந்தவர்களை ஐ.தே.க சேர்த்துக் கொண்டதனை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும்.

இந்த நிலையில் தேர்தலின் பின்பும் சிறிய கட்சிகளை பிரதான கட்சிகள் தேடிச் செல்ல வேண்டிய நிலையே உள்ளது. ஆனால் இச்சிறிய கட்சிகள் அநேகமானவை சிறுபான்மை இனத்தவர்களைப் பிரதிநிதித்துவம் செய்ததன் காரணமாக பிரதான கட்சிகள் தீவிர பௌத்த-சிங்கள அடிப்படைவாதக் கட்சிகளின் பலமான எதிர்ப்பிற்கும் கண்டனத்திற்கும் உள்ளாக வேண்டியும் உள்ளது. அத்தோடு இதன் விளைவாக தீவிர அடிப்படைவாத கட்சிகளும் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்தவகையில் உருவாகியுள்ளதே சிஹல உறுமய போன்ற கட்சிகளாகும். இத்தேர்தலில் அக்கட்சியும் தேசியப் பட்டியல் மூலம் ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டமை சிறீலங்கா அரசியலில் மேலும் குழப்பங்களையும்- அதே சமயம் பிரதானமான கட்சிகள் பலவீனம் அடைந்துபோவதற்கும் காரணமாகின்றன.




சிறீலங்காவைப் பொறுத்து இரண்டு பிரதான கட்சிகள் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை இழந்து விட்டமை தேர்தல் முடிவாக வெளிப்படுத்தும் இரு அம்சங்கள் மூலம் வெளிப்படுபவையாக உள்ளன. இதில் ஒன்று எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையையும் பெற முடியாமல் போயுள்ளமையும், இரண்டாவது, மூன்றாவது சக்தியின் திடீர் வளர்ச்சியும் ஆகும்.

இந்நிலைமையானது எதிர்காலத்திலும் மாற்றம் காணப் போவதில்லை ஏனெனில் தற்போதைய தேர்தல் முடிவுகளின்படி அரசாங்கத்தினால் நாட்டின் அரசியலில் பெரும் மாற்றங்கள் எதையும் செய்துவிட முடியாது. எடுத்துக் காட்டாகக் கூறுவதானால், இனங்களின் நெருக்கடிக்கும் காரணமாக இருக்கும் இனப்பிரச்சனைக்கு ஓர் தீர்வை இவ் ஆட்சியாளர்களினால் காணமுடியாது.

அதாவது யுத்தம் இறுதி வரை தொடரும் எனக் கூறி ஆட்சிக்கு வருபவர்களினால் யுத்தத்தில் வெற்றி பெறவோ, அரசியல் ரீதியில் தீர்வு காணப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வருபவர்களினால் அரசியல் யாப்பில் பெரும் மாற்றத்தினை கொண்டு வந்து இனப்பிரச்சனைக்கு ஓர் அரசியற் தீர்வையோ அவர்களினால் கொண்டு வரமுடியாது.

ஏனெனில் அவர்களிடம் அதற்கான அரசியற்பலம் இருக்கமாட்டாது. அதாவது அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கே முடியாத நிலையில் அரசியற் கட்சிகள் பலவீனப் பட்டுக் கொண்டிருக்கையில் எவ்வாறு அரசியல் தீர்வை உள்ளடக்கியதாக- அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய அரசியல் யாப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்ததாக இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாக மாட்டாது என்பது வெளிப்படையான ஒன்றே. அதிலும் ஆளும் கட்சி யுத்தத்திற்கு முனைகையில் எதிர்த்தரப்பு அதனைப் பலமாக விமர்சிக்கும் பட்சத்தில் பலவீனமான நிலையில் இருக்கும் அரசுகளினால் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியுமா? என்பதும் கேள்விக்குரியதொன்றே ஆகும்.

இதே சமயம் மூன்றாவது சக்தியின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கானது பிரதான கட்சிகளை மேலும் சிறியகட்சிகளிடம் தாங்கு நிலையை அதிகரிப்பதாகவே இருக்கும். தற்பொழுதுகூட முஸ்லிம் காங்கிரசைப் போன்ற கட்சிகளின் தாங்கு நிலையிலேயே பொ.ஐ.முன்னணி அரசாங்கம் உள்ளமை சுட்டிக்காட்டத் தக்கதாகும். இந்நிலை எதிர்காலத்தில் மேலும் மேலும் தீவிரமடைந்து செல்லும் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

இந்நிலையானது சிறீலங்கா அரசியலை மேலும் உறுதியற்ற தன்மைக்கு இட்டுச் செல்வதாகவே இருக்கும். அதாவது அடுத்தடுத்த தேர்தல்களில் அறுதிப் பெரும்பான்மை என்பதே கேள்விக்குரியதாகிவிடலாம். ஏனெனில் ஜே.வி.பி அடுத்த தடவை இன்னமும் பத்து ஆசனங்களைப் பெறும் அதேசமயம் தற்போதைய நிலைப்பாட்டையே அதாவது பிரதான கட்சிகள் எதற்கும் ஆதரவு அளிக்கப் போவதில்லை- என்ற நிலைப்பாட்டையே கொள்ளுமாயின் நிலையான ஆட்சி அமைப்பதென்பதே பெரும் கேள்விக்குரியதாகி விடும். அதாவது தொங்கு பாராளுமன்றம் ஒன்றோ அன்றி சிறுபான்மை அரசாங்கம் ஒன்றோ அமைவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

இந்நிலையால் எதிர்காலத்தில் சிறீலங்கா பாராளுமன்றத்தில் உருப்படியான எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாததொரு நிலை தோன்றுவது தவிர்க்க இயலாததாகவே இருக்கும். அதாவது ஆட்சித் தலைவர்கள் கட்சிகள் முக்கிய பிரச்சனைகளில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருப்பினும் பாராளுமன்றத்தில் அவை நிறைவேற்றப்படுதல் என்பது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கும். இந்நிலையானது இலங்கையின் அரசியல் எதிர்காலத்தையே கேள்விக்குரியதாக்கி விடும் என்பது உறுதியாகும்.

**-ஜெயராஜ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எல்லை

## சுடரேற்றும் மழலைகள்

எங்கும் ஜெகஜோதியாய் சுடர்விடும் பந்தங்கள், மெல்லியதாய் மிகமிக மெல்லியதாய் விசும்பல் ஒலிகள். காதோரம் வருடிச்செல்லும் உயிர் உருகும் பாடல், நடப்பது போல... இல்லை பறப்பது போல் எதுவோ ஒன்று, ஆனால் சுற்றிச் சுற்றி வருகிறேன்.

நாலு மழலைகள் கைகளில் விளக்குகளுடன், பக்கத்தில் கண்ணீர் அருவியோடு ஒரு இளம் தாய். அவளும் விளக்குடன்...

என்ன கனவிது? நிச்சயமாய் இது கனவில்லை. நேற்றைய நினைவுகளின் பாதிப்பு.

நவநீதனின் மனைவியை, குழந்தைகளைச் சந்தித்து உரையாடி, கவலைகளை, பெருமிதத்தைப் பகிர்ந்து கொண்ட நினைவின் தொடர்.

இந்த மண்ணின் விடுதலைக்காக கணவனை தியாகம் செய்துவிட்டு நான்கு மழலைகளோடு தனியே வாழத் தயாராகிவிட்ட ராஜலக்சுமியின் நினைவிலேயே உறங்கிய தன் விளைவு...

"இந்த முறை மாவீரர் துயிலும் இல்லக் காட்சிகள் வித்தியாசமாய் இருக்கும். பல நினைவுக் கற்களின் முன் நான்கு, ஐந்து, ஆறு என குழந்தைகள் நின்று சுடரேற்றும்" என பக்கத்தில் வந்த நண்பி சொன்ன வாசகப் பதிவின் விம்பம்.

"கிபிர் அடிச்சும் சாவு வரும். நான் சாமானாவது ஏற்றிக் குடுத்திட்டு வாறன்" நவநீதன் தன் மனைவியிடம் சொன்ன வார்த்தைகள், இந்த மண்ணில் இருக்கும் அனைவருக்கும் பொருந்தக்கூடியதுதான்.

யாருக்கு, எங்கே, எப்போது சாவுவரும் என்று ஆரூடம் சொல்ல முடியாத தேசம் இது. ஏன் என்று கேள்விகூடக் கேட்காத வெறும் அப்பாவிகளான ஐம்பதினாயிரம் பேரை சிங்களம் கொன்று குவித்த மண் இது.

நீதிகேட்டுப் போராடி, போராட்டத்திற்கு நெருங்கிய துணையாக நின்று வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட மாவீரரின் தொகை, அப்பாவிகளாக கொல்லப்பட்டவர்களின் தொகையில் மூன்றில் ஒரு பங்குதான் என்பது அனைவரும் அறிந்ததுதானே?

"அப்பாவைத் தாட்டாச்சு. ஒரு அலவாங்கு வைச்சிருந்தா கிண்டிக் கொண்டு இந்நேரம் வந்திருப்பார்" எனும் சாவின் பொருளறியாத மழலையின், "காதலித்து திருமணம் செய்து நான்கு குழந்தைகளையும் பெற்றுவிட்டு இப்படி என்னை தனிய விட்டிட்டு போய் விட்டாரே" என வெதும்பும் மனைவியின், இடங்களில் நின்று பார்க்கும்போது ஒரு குடும்பத்தின் இழப்பென்ற ரீதியில் நவநீதனின் சாவு வேதனைக்குரியதுதான். எனினும் ஏனைய அவலச் சாவுகளுடன் ஒப்பிடுமிடத்து அவனது சாவு எத்தனை உன்னதமானது, உயர்வானது.

எல்லை, சிறப்பெல்லைப் படைகளின் உருவாக்கத்தினைத் தொடர்ந்து ஓயாது சுழன்றடிக்கும் ஓயாத அலைகள் மூன்றின் வெற்றிகள் இல்லையெனில், இந்த மண் இன்னும் எத்தனையோ உயிர் விலைகளை அநியாயமாக கொடுத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். அத்தகைய பேரவலத்தைத் தவிர்த்து இந்த மண் நிமிர்ந்து நிற்க தூண்களாகி விட்ட எல்லைப்படை மாவீரர்களில் தனது கணவனும் இணைந்து கொண்டுவிட்டது, ராஜலக்சுமிக்கு எதிர்பாராத அதிர்வே எனினும் தன் ஆசிரியப் பணியினைத் தொடர்ந்து தனது குடும்பத்தைக் கொண்டு நடத்த அவர் தயாராகி நிற்பதைப் பார்க்கும் போதும், கண்களில் நீர்வழிய தன் கணவனை நினைவு கூர்ந்தாலும் தன் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணி தன்னை தேற்றிக் கொள்ளும் போதும், தமிழீழப் பெண்ணின் தன்னம்பிக்கை தழைத்து செழிப்பது கம்பீரமாய் எம் பார்வைக்குள் விரிகிறது.

## தந்தையே மகளாகி

"உங்களுக்கு வேற வேலை இல்லையா?

மினக்கெட்டு பூக்கண்டு நடுறதும் தண்ணி இறைக்கிறதும்தான் தொழில்"

"மரங்கள் வளர என்ர பிள்ளையளை விட்டுப் படம் எடுப்பன். படம் பார்க்கிறவைக் கெல்லாம் எங்கட வீட்டுப் பூக்கண்டுகள் வடிவா இருக்கா என்று ஏதாவது கதை அப்ப தெரியும்."

தன் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய வண்ணக் கனவுகள் ஒரு தந்தையின் மனதில் இப்படித்தான் ஆரம்பிக்குமா? பிறந்தேயிராத இனிமேல்தான் பிறக்கப்போகிற குழந்தைகளைப் படம் எடுப்பதற்குப் பூக்கன்று தேடி நட்டு, வளர்வதற்காய் நீரூற்றிப் பேணிய அந்த தந்தைக்குள் இன்னும் என்னென்ன ஆசைகள், எதிர்பார்ப்புகள் இருந்திருக்கும்.

நினைத்ததற்கு மாறாக, மேலதிக சந்தோசமாக ஒன்றுக்கு இரண்டாக இரட்டைக் குழந்தைகளை மனைவி பெற்றெடுத்தபோது எப்படியெல்லாம் கனவுகள் விரிந்திருக்கும். ஆனால் அதனையெல்லாம் செய்து முடிப்பதற்கு மட்டுமல்ல, சொல்வதற்குக்கூட அந்த தந்தை இப்போது இல்லை.

இருபத்தியொரு வயதே நிரம்பிய கௌரிமாலாவும் சுவேந்திரனும் (குட்டி) விரும்பித் திருமணம் செய்து கொண்டவர்கள். மனைவி கருவுற்றிருந்தபோதும் எங்களுக்கும் கடமை இருக்கு என்பதாய் சிறப்பெல்லைப் படையில் இணைந்து அடிக்கடி களத்துக்குச் சென்று வந்தவர் குட்டி. பிறக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காக்கும் இல்லங்கள்

தமிழவள்

கப்போகும் குழந்தைக்கான ஏற்பாடுகளையும் செய்யத் தவறவில்லை. தன் இளம் மனைவியின் தேவைகளையும் கவனித்து, வீட்டைச் சீரமைத்து, பூமரங்கள் தேடி வளர்த்து...

எதிர்பார்த்த அந்த நாள் புலர்ந்து கௌரிமாலா ஆண்-பெண் என இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தபோது குட்டியின் மகிழ்ச்சி எல்லை கடந்திருந்தது. சொந்த வாழ்வின் சந்தோசங்களில் மூழ்கியிருந்தபோதும் தேசம், அதன் விடுதலையில் தனது பணி என்பவற்றில் இருந்தும் கவனம் விலகாத குட்டிக்கு எதிர்பாராமல் ஒரு சண்டைக் களத்திற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. கூட இருந்தவர்கள் “குழந்தைகள் பிறந்து 3 நாள்தான், நீ வந்தால் அவவிற்கு கஸ்ரம்” என்ற போதும் “இல்லை இந்தச் சண்டைக்கு வரத்தான் வேணும்” என்று வெளிக்கிட்ட குட்டி...,

மனைவியிடம் “நான் வந்து பிள்ளைகளுக்கு பெயர் வைக்கிறன்” என்று போன குட்டி... களத்தில் இருந்து திரும்பி வந்தது துயிலும் இல்லத்திற்குத்தான்.



வைத்தியசாலையில் இருந்து நேரே துயிலும்இல்லம் சென்று தன் கணவனுக்கு இறுதிவிடை கொடுத்துவிட்டு வந்த கௌரிமாலா, தன் கணவனை மட்டுமல்ல, இரட்டைக் குழந்தைகளில் ஆண் குழந்தையையும் நோயின் கைகளில் இழந்துபோய் இருளில் மூழ்கி முக்குளித்தாலும் தன் கணவனின் சாவு சாதாரணமானதில்லை எனும் நிமிர்வோடு... பெயர்கூட வைக்காது போய்விட்ட கணவனின் பெயரையே மகளுக்குச் சூட்டி, சுவேந்தினியின் செல்லச் சிரிப்பில் தன்னை மறந்தபடி...

இன்னும் என்னென்ன தியாகங்களை இந்த மண் சந்திக்கக் காத்திருக்கு? விடை தெரியாத கேள்வி இதுவெனினும் விரைவில் விடியும் என்ற நம்பிக்கை மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

## ஊர்போகும் கனவில்...

“வறுமை”

இப்படித்தான் இருக்கும் என்பதை அந்த வீட்டைப் பார்த்தவுடனேயே புரிந்துபோகும். இவர்கள் கஸ்ரப்பட்டவர்கள் என்பதை எவரும் சொல்ல வேண்டிய தேவையே இல்லை. அந்தத் தாய், ஐந்து குழந்தைகள், அந்த வீடு எல்லாமே போனவுடன் சொல்லாமல் சொல்வதும் அதைத்தான்.

உழைக்காமல், தேடாமல் வறுமைப்பட்ட குடும்பம் அல்ல. செழிப்பாக வாழ்ந்த குடும்பம்தான். செழிப்பெல்லாம் பிறந்த ஊரோடு போய்விட இடம்மாறி அலைந்து, குடிசை போட்டு இடப்பெயர்வு வாழ்வின் பத்து வருட அனுபவமும் அவலமும் வறுமை வடிவில் தன்னை இனங்காட்டியது.

காங்கேசன்துறை ஊரணியில் இருந்து வெளியேறி, ஆக்கிரமிப்பாளரின் ஒவ்வொரு படை நடவடிக்கைகளின் போதும் இடம்மாறி, நிரந்தரத் தொழில் இன்றித் துயரப்பட்டு, இனியும் முடியாது என்றுதான் எல்லைக்குப் போய்ப் போராட்டப் பணிசெய்ய முடிவெடுத்தாரோ சிவலோகநாதன்?

எல்லோரும் இணைந்து நாட்டை மீட்டு, அவலங்கள் தந்தவரை அடித்துக் கலைத்துவிட்டு, நிம்மதியாய் உழைத்து சந்தோசமாய் வாழலாம் என்றுதான் முடிவெடுத்தாரோ? பதில் சொல்ல இன்று அவர் இல்லை, எனினும் உண்மை அதுதான். ஊர் போகும் கனவு எவருக்குத்தான் இல்லை?

விஜயராணிக்கு முப்பத்தியொரு வயது. எட்டு, ஏழு, ஐந்து, இரண்டரை வயதுகளிலும் கையிலுமாக ஐந்து குழந்தைகள். கடைசிக் குழந்தை பிறந்து 9ஆவது நாள் கணவன் களமுனைக்குச் சாரதியாகச் சென்றபோது சந்தோசமாகத்தான் அனுப்பிவைத்தார். வழமைபோலவே தனது பணியை முடித்து விட்டு திரும்பி வந்துவிடுவார் என்றுதான் அனுப்பிவைத்தார். போராட்டத்துடன் நெருங்கிய உறவிருந்ததால் விடுதலைக்கான பணியில் என்றுமே பின்நிற்காத அந்த இளம் மனைவி, விடிந்துவிடும் என்ற நம்பிக்கையோடுதான் வழியனுப்பினார். ஊர் விட்டு ஓடிவந்த துயரங்கள் நினைவில்வர வழியனுப்பிய கணவன் வித்துடலாகி மீண்ட போது...

இப்போது ஐந்து குழந்தைகளின், குடும்பத்தின் பொறுப்பு முழுமையும் விஜயராணியின் கைகளில்.

பொருட்களின் விலை உயர்வும் பொருளாதார வசதியின் அடிநிலையும் ஆளை மிரட்டினாலும் எதிர்நீச்சலிட்டேனும் எதிர் காலத்தைச் சந்திக்கத் தயாராகி நிற்கும் விஜயராணி தனிப் பெண்ணல்ல; தமிழீழத்தின் இன்றைய பெண்களின் பிரதிநிதியும்கூட.

மழலைகளின் எதிர்காலம், சொந்த ஊர் போகும் கனவு, கணவனின் சாவு வீணானதில்லை என்ற பெருமிதம் என அனைத்து உணர்ச்சிகளையும் கண்களில் தேக்கி பெரும்பாலும் மௌனமாகவே அமர்ந்திருக்கும் விஜயராணி எங்குள் ஒருத்தி என்ற பெருமை எங்களுக்குள் மிதந்தாலும் இந்தப் புதிய வரலாற்றின் போக்கு நீடிக்க வேண்டுமா எனும் கேள்வி எம்முன் எழாமல் இல்லை.

வலிமையும் வளமுமாக இளைய தலைமுறை ஒன்று புதியவேகத்தோடும் எழுச்சியோடும் சாதிக்கவேண்டியதை, குடும்பத் தலைவர்கள்கூட பொறுப்பேற்க வேண்டியிருப்பதைப் பற்றி இளையவர்களே! கொஞ்சம் சிந்தியுங்களேன். போராட்டப் பணி எல்லோருக்கும் பொதுவானதே எனினும் இளைய தலைமுறை முன்னின்று போராட்டச் சுமையேற்கும் காலம் இதுவென்பதை சொல்லித்தான் புரியவைக்க வேண்டுமா?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல் வல்லுறவு:
# எங்கே தவறிழைத்தோம்...?

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை அடக்குமுறையின் ஒரு கொடூரவடிவமாக இருப்பது பாலியல் வல்லுறவு. தனது அறிவை, தேடல்களை, தேவைகளை மூலதனமாக வைத்து காட்டுமிராண்டித்தனமான வாழ் நிலையிலிருந்து நாகரீக வாழ்நிலைக்குத் தாவிய மானிட சமூகம் இந்த விடயத்தில் மட்டும் மாறிக்கொள்ளவில்லை. இயற்கையின் புதிர்களுக்கு அறிவியல் ரீதியில் விளக்கம் கொடுத்து அதற்கு மாற்று வழிகளையும் கண்டுபிடிக்கும் மனிதகுலம் இந்தப் புதிருக்கு மட்டும் தீர்வு காணமுடியவில்லை. மனித சமூகம் தமக்குள் முரண்பட்டு ஒன்றையொன்று அழித்துக்கொண்ட புராதன காலங்களிலும் சரி அல்லது மனித ஆக்கிரமிப்பிலிருந்து மண் ஆக்கிரமிப்பு நிலைக்கு தாவிய இன்றைய காலங்களிலும் சரி ஆக்கிரமிப்பின் முதல் இலக்காகிப்போவது பெண்கள் இனம்தான். இந்தப் பூமியின் சுழற்சி ஆண் பெண் என்ற இரு சக்கரங்களின் இணைப்பில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை துல்லியமாக உணர்ந்துகொண்ட பின்னரும்கூட இந்தக் கொடூர வன்முறை பற்றிப் பேசிய இலக்கியங்கள் மிகக் குறைவு. அதிலும் உளவியல் நோக்கில் இதை ஆராயப் புகுந்தவர்களும்கூட பெரியளவில் இதில் கவனம் செலுத்தவில்லை. மனிதநேயம், மனித உரிமை என்று ஒருபுறம் எழும்பிக்கொண்டிருக்கும் கோஷங்களை எள்ளி நகையாடுவது போன்று இன்றைய செய்தி ஊடகங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பவற்றில் பெரும்பாலானவை பாலியல் வல்லுறவு சார்ந்த செய்திகளாகவே இருக்கின்றன.

## கருத்து நிலையின் தோற்றம்.

பாலியல் வல்லுறவு என்றால் என்ன என்ற வினாவிற்கு ஒரு வாக்கியத்திலேயே பதில் கூறிவிடலாம். "ஒரு பெண்ணின் விருப்பத்திற்கெதிராக அவளுடன் உடலுறவு கொள்ளுதல் பாலியல் வல்லுறவு எனப்படுகிறது." ஆனாலும் இந்த வரைவிலக்கணமானது சட்டரீதியானதொரு வரைவிலக்கணமாக புராதன சமூகங்களில் ஒருபோதுமே இருந்திருக்கவில்லை. பாலியல் வல்லுறவு என்பது ஆணின் ஆற்றலை எடுத்துக்காட்டும் ஒரு செயற்பாடாக புராதன குடிமுதல்வர்களால் கருதப்பட்ட ஒரு நிலையில் அது எவ்வாறு பெண்ணுக்கு இழைக்கப்படும் குற்றமாகப் பார்க்கப்பட்டிருக்க முடியும்?

புராதன குடிமுதல்வர்களைப் பொறுத்து பெண்கள் வெறும் பாவனைப் பொருட்களேயன்றி தனித்து இயங்கக்கூடிய ஜீவன்கள் அல்ல. பாலியல் வல்லுறவு என்பது பெண்ணின் விருப்பு வெறுப்பு என்ற ரீதியில் பார்க்கப்படவோ அல்லது தன் உடலைக் காத்துக் கொள்ள முனையும் பெண்ணின் உரிமையை விளங்கிக்கொள்கின்ற ஆண் பெண் புரிந்துணர்வின் அடிப்படையில் ஆண்களால் ஏற்றுக்கொள்ளப்படவோ இல்லை. ஒரு ஆண் இன்னொரு ஆணுக்கு எதிராக மேற்கொண்ட சொத்து ரீதியான குற்றமாகவே அன்றைய காலங்களில் இது கருதப்பட்டது.

புராதன சமூகம் ஒன்று "பழிக்குப் பழி" என்ற சட்டமுறையை எப்போது பின்பற்றத் தொடங்கியதோ அன்றிலிருந்தே சட்டத்தின் முன் பெண்களின் சம அந்தஸ்து பறிபோய்விட்டது. பிறப்புறுப்புகளின் அடிப்படையில் ஆண் சூறையாடுபவன், பெண் அவனது இரை. ஆணைப் போன்று பெண்ணும் பழிக்குப்பழி என்ற அடிப்படையில் ஆணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முடியாது என்பதுடன் பெண் மீது மேற்கொள்ளப்படும் இக் கொடூர வன்முறையானது மரணத்திற்கோ, படுகாயத்திற்கோ இட்டுச்செல்வது மட்டுமன்றி இதனால் உருவாகும் கர்ப்பமும், பிறக்கும் குழந்தையும்கூட கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

## மனித இனம் மட்டும் ஏன் இப்படி...?

விவிலங்குகள் உலகில்கூட பெண் விலங்குகள் பாலுறவுக்கு தயார் என்பதற்கான சில சமிக்ஞைகளை வெளிப்படுத்திய பின்னரே ஆண் விலங்குகள் அதில் ஆர்வம் காட்டுகின்றன. விலங்குகளின் நடத்தைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட லியோனாட் வில்லியம் என்ற மாணவர்கூட குரங்குகள் உலகில் பாலியல் வல்லுறவு, விபச்சாரம், பலாத்காரம் போன்றவை இல்லை என்றும் பெண் குரங்கின் அழைப்பும், விருப்பமுமின்றி ஆண்குரங்கு அதனுடன் உறவு கொள்ள முடியாது என குறிப்பிடுகின்றார். விலங்குகளின் இனப்பெருக்க செயற்பாட்டுக்கு ஏற்பவே பாலுறவில் அதன் ஆர்வம் வெளிப்படுகிறது. இதேபோல் கர்ப்பகாலத்தில் அவை இனச்சேர்க்கையில் ஈடுபடுவதும் கிடையாது.

ஆனால் மனித இனத்திலோ வருடத்தின் 365 நாட்களும்கூட கலவிக்கான தயார் நிலை காணப்படுகிறது. விலங்குகளைப் போன்று சமிக்ஞைகள் மூலம் இங்கு பாலுறவுக்கான தயார்நிலை வெளிப்படுத்தப்படுவதில்லை. உளவியல் ரீதியான குறியீடுகளோ பாலுறவுக்கான அவாவோ அல்லது அதனால் ஏற்படும் மகிழ்ச்சியை அனுபவிக்கும் முறையோ வெளியில் தெரியாதளவிற்கு சிக்கல் வாய்ந்த முறையினை மனித இனம் கொண்டுள்ளது. பாலுறவுக்கான மனிதனின் விருப்பம் மூளையுடன் தொடர்புடையதொன்று. விலங்குகள் ஒன்றுடன் ஒன்று கூடுவதற்கென சில பருவங்கள் இருப்பது போன்று மனிதனுக்கு இல்லை. அவன் தான் விரும்பும் எந்த நேரத்திலும் பெண் மீது பாலியல் ஆர்வத்தை மேற்கொள்ள முடிவதுடன் அவனது உளவியல் தூண்டுதலானது விலங்குகளைப் போன்று உடலின் தயார் நிலையில் தங்கியிருப்பதில்லை.

## யதார்த்தம் கசப்பானது

பாலியல் வல்லுறவுக்கான வாய்ப்பை அளிக்கும் ஆணின் உடலியல் கட்டமைப்பும் அதனால் பெண் பாதிக்கப்படும் தன்மையும் இருபாலாருடைய உடற்தொழிலியல் சார்ந்ததொன்றே. இந்த உயிரியல் கட்டமைப்பை இயற்கை வழங்காதிருந்திருந்தால் பாலுறவோ, பாலியல் வல்லுறவோ இருப்பதற்கான வாய்ப்பே இருந்திருக்காது என்கிறார் அமெரிக்காவின் தொலைக்காட்சி செய்தியாளரும் "எங்கள் விருப்புக்கு மாறாக" (Against our will) என்ற நூலின் ஆசியருமான சுசன் பிறவுண் மில்லர்.

மனித உடற்கூற்றியல் சார்ந்து நோக்குமிடத்து பலாத்கார உடலுறவுக்கான சாத்தியப்பாடு உறுதியான வகையில் நிலைத்திருக்கும் உண்மையை எவருமே மறுக்க முடியாது. இந்த ஒரு காரணிமட்டுமே பாலியல் வல்லுறவு என்ற ஆணின் சிந்தனை உருவாக்கத்திற்கு காரணமாயிருந்திருக்கக்கூடும். பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த தன்னால் முடியும் என்று கண்டவுடனேயே ஆண்கள் அதைத் தொடர்ந்து மேற்கொண்டனர். ஒரு பெண்ணின் மறுப்புக்குக் காரணமாக எதிர்பாராத விதமான அவளது எதிர்ப்போராட்டத்தின் மத்தியில் முதல் தடவையாக பாலியல் வல்லுறவு நிகழ்ந்திருக்குமேயானால் இரண்டாவது தடவை இது மிகக் கவனமான முறையில் திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்கிறார் சுசன் பிறவுண் மில்லர். உண்மையில் பெண் அடிமைத்தனத்தின் ஆரம்பவடிவம் கொள்ளைக் கும்பல் ஒன்றினால் பெண் ஒருத்தி குழு ரீதியான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருத்தலாகவே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்திருக்கவேண்டும். இது ஆணுக்குரிய சிறப்பம்சமாக மட்டுமின்றி பெண்ணுக்கு எதிரான ஆற்றல் மிகுந்த ஆயுதமாகவும் மாறியது. பெண்ணின் பௌதீக எதிர்ப்பாற்றல், போராட்டம் என்பவற்றையும் மீறி அவளது உடலுக்குள் பலவந்தமாக நுழைந்தமையானது, பெண்ணை தன்னுடமையாக்கிக் கொள்ளவும், தனது பலத்தை பரிசோதிக்கவும், ஆண்மையின் வெற்றியாக அதைக் கருதவும் ஆணுக்கு வாய்ப்பளித்தது.

## பெண் அடிமை நிலையின் தோற்றம்

ஒரு பெண்ணின் உடலுக்கு உரிமை எடுத்தவுடனேயே அதை தனக்குரிய பாலியல் வசதியாக, உடல் ரீதியாக பெண்ணைவிடவும் தான் மேம்பட்டவன் என்பதற்குரிய அத்தாட்சியாக ஆண் எடுத்துக் கொண்டான். தனக்கு உரிமையான பெண்ணை ஏனைய ஆண் எதிரிகளிடமிருந்து காத்துக்கொள்ளவேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டது. தமது பெண்ணை பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறையாக அவன் பின்பற்றியது அடுத்தவருக்கு உரிமையான பெண்களை பலாத்காரப்படுத்தி அவர்களை பீதியுறச்செய்ய வேண்டியிருந்தது. அடுத்தவர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து பெண்களை பாதுகாப்பதுற்கு அவன் செலுத்திய இந்த விலை மிகவும் அநியாயமான தொன்று. ஒரு ஆணிடமிருந்து பெண்ணை பாதுகாப்பதற்கு இன்னொரு ஆணுக்கு செலுத்திய விலைதான் கற்புடமையும் ஒருதார மணமுமாகும். ஒரு பெண்ணின் உடலுக்கு விளைவிக்கப்படும் தீங்கு அவளை உரிமையாக்கிக் கொண்ட ஆணின் சொத்துக்களுக்கு இழைக்கப்படும் குற்றமாக மாறியது.

இன்று நாம் திருமணம் என அழைக்கப்படும் மண உறவின் ஆரம்பவைபவங்களை பலாத்காரமாக கடத்திச் செல்லுதல் அல்லது பாலியல் வல்லுறவுக்குட்படுத்தல் என்பதாகும். பெண்களை அடைவதற்கான சரியான அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழியாக இது கருதப்பட்டது. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்கூட இது இங்கிலாந்தில் வழக்கில் இருந்தது. மணமகளை கவருதல் பிலிப்பைன்சின் மலைக்காடுகளிலும், சிசிலியின் கிராமப் பகுதிகளிலும், ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளிலும் இன்றும் நிலை கொண்டிருக்கிறது.

## முதலாவது சூத்திரதாரி...?

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் மனித சமூகத்தினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள்தான் பாலியல் வல்லுறவு சமூகத்தில் வேரோடிப்போக துணை புரிந்தமையை சான்றுகள் காட்டுகின்றன. குலக்குழுக்களின் ஆட்சியும், தனியுரிமையுடைய நகர அரசுகள் என அழைக்கப்படும் நிரந்தர குடியிருப்புகளும் தோன்றி பல நூற்றாண்டு கழிந்த பின்னர்தான் சட்டங்கள் எழுத்துருவில் தொகுக்கப்பட்டன. அவ்வாறு எழுத்துருவில் எமக்கு கிடைக்கும் புராதன சட்டமாக கருதப்படுவது பலகைகளில் செதுக்கப்பட்ட தொகுக்கப்பட்ட புராதன பபிலோனிய மோசஸ் சட்டமாகும். அடிமை நிலை, தனியார் சொத்துடமை, பெண் அடிமை நிலை என்பன அன்றைய குலக்குழுக்களின் அன்றாட வாழ்க்கையாக இருந்ததை இச்சட்டங்கள் எடுத்தியம்புகின்றன. பெண்களை சிறைப்பிடித்தல் என்பது யுத்தம் தரும் உடனடிப் பரிசாக குலக்குழுக்களினால் பூரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேசமயம் தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களை கவரும் செயற்பாடு சமூக ஒழுங்கை குலைக்கக்கூடியது என்ற கருத்துநிலை காணப்பட்டது. ஒரு ஆண் தனக்கென ஒரு மனைவியை பெற்றுக் கொள்வதற்கான மிகவும் நாகரிகமான, அபாயம் குறைந்தவழியாக கருதப்பட்டது, அவளை பணம் கொடுத்து விலைக்கு வாங்குதலாகும். 50 வெள்ளி நாணயங்களுக்கு ஒரு பெண் மனைவியாக விற்கப்பட்டாள். இத்தகைய ஒரு கொடூரமான வழிமுறையூடாகவே பாலியல் வல்லுறவு என்ற கூத்து நிலையின் ஆரம்ப வடிவம் சட்டத்திற்குள் திருட்டுத்தனமாக நுழைந்தது என்கிறார் "பாலியல் வல்லுறவு" என்ற விடயத்தை ஆய்வு செய்த சுசன் பிறவுண் மில்லர். பாலியல் வல்லுறவுக் குற்றம் என்பது தந்தை வழிச் சமூகத்தின் பார்வையில் பெண் வியாபாரத்தின் புதியதொரு வழிமுறையை குழப்பும் செயற்பாடாகவே கருதப்பட்டது. கன்னிமைத்தன்மையை களவாடுதல் என்பது சந்தையில் தன் மகளுக்கு வைக்கப்படும் விலையை களவாடுவதாகவே பார்க்கப்பட்டது.

## இன்றுவரை தொடரும் அவலம்...?

தனது பிறப்புறுப்பு அச்சத்தை தோற்றுவிக்கும் ஒரு ஆயுதமாக பயன்படமுடியும் என்ற மனிதனின் கண்டுபிடிப்பானது வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களின் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்டு பிடிப்புகளில் ஒன்றாக வைத்து எண்ணக்கூடியது. அன்று தொடங்கி இன்று வரை அது சமூகத்தில் அனைத்து மட்டங்களிலும் வேரோடிப் போய் இருக்கிறது. உலகம் முழுவதிலுமே இன்று அன்றாட நிகழ்வாகிப்போய்விட்ட இவ்விடயமானது பொதுவாக குற்றவியல் நீதித் துறைக்கு வராத குற்றங்களாக இருப்பதற்கு பிரதான காரணம் பாலியல் வல்லுறவுக் குட்பட்ட பெண்ணுக்கு சட்டத்தின் ஆதரவை விடவும் சமூகத்தின் புறக்கணிப்பே கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மகளிர் எழுச்சி அமைப்புகளின் போராட்டங்களால் அண்மைக் காலங்களில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. ஆச்சிரமம் நடத்துகிறேன் என்ற போர்வையில் பல பெண்களை பாலியல் துஷ்பியோகம் செய்த சுவாமி பிரேமானாந்தா, பத்மினி பாலியல் வல்லுறவில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டமையும் பாலியல் வல்லுறவால் ஏற்பட்ட வேண்டாத கர்ப்பத்தை கலைப்பதற்கான உரிமையை நீதிமன்றங்கள் வழங்கியிருப்பதும் மனதிற்கு தெம்புதரும் விடயங்களாக இருக்க, எங்களுக்கு என்ன பதில் கூறப்போகின்றீர்கள் என்று கிருசாந்திகளும், சாரதாம்பாள்களும், கோணேஸ்வரிகளும் நகைப்பது போலவும் தெரிகிறது.



- அர்த்தனாரீ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவத்தின், மினிமுகாம்கள், பாதுகாப்பு நிலைகள், சோதனைச் சாவடிகள் உள்ள பகுதியில் அதிலும் ஊரடங்கு நேரத்தில் இப்படுகொலைச் சம்பவம் நடத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையில் யாழ்சென்று திரும்பிய பி.பி.சி செய்திமுகவரிடம் தொண்டர் நிறுவனப் பிரதிநிதியொருவர் தெரிவித்தது போல், உலகிலேயே மிகப் பெரிதான திறந்தவெளிச் சிறைச்சாலையான யாழ் குடாநாட்டில் இருந்து, சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பிடிக்குள்ளும், கூலிக் குழுக்களின் அதிகார மிரட்டல்களுக்கும் மத்தியில் இருந்து கொண்டு, உலகத்திற்கு யாழ் குடாச் செய்திகளை வழங்கிய துணிகரமான செய்தியாளர் யார் என்றால் அது நிமலராஜனாகத்தானிருக்கும்.

# குருதிவடிக்கும் பேனா

## சனநாயகம் கண்ணீர் வடிக்கின்றது

இனிமையான மெலிந்த குரல், ஆனால், வலிந்த எண்ணங்களும் வைராக்கியமும் மனமுமாக அது சதா ஆற்றிய செய்திப்பணி, கூலிக்கும்பல் ஒன்றின் கொடிய கரம் பட்டு, பலாத்காரமாக அதேவேளை நிரந்தரமாகவே நிறுத்தப்பட்டது.

19ம் திகதி, சிறீலங்கா இராணுவத்தின் நாகர்கோவில் படைத்தளத்தின் முன்னரங்க நிலைகள் தாக்கப்பட்ட செய்தியையும், எம்.ஐ-24ரக உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தியையும் பி.பி.சி. தமிழோசையினூடாக உலகமெலாம் பரவி வாழும் தமிழ் மக்களுக்கு செய்தியை வழங்கிவிட்டு, தனது அன்றைய இரவுப் பணிகளில் ஆழ்ந்திருந்த 38வயதே நிரம்பிய யாழ் செய்தியாளர் நிமலராஜனின் வீட்டு வளாகத்தினுள் இருட்டு மனிதர்களின் நிழல்கள் படிந்தன.

வசதியாக ஊரடங்குச் சட்டம். மக்கள் நடமாட்டம் இல்லாத இரவு நேரம் ஆக்கிரமிப்பாளர்களையும், அதன் கூலிக்கும்பலையும் தவிர, பொதுமக்களுக்கு அந்நியப்படப்போகும் தெருக்களின்வழியே, அந்த இருட்டு மனிதர்கள், நிமலராஜனின் இல்லம் நோக்கி.

சற்று முன்தான், சமன் இந்திரஜித் என்ற சிங்களச் செய்தியாளர், நாகர்கோவில் படைத்தளத் தாக்குதல் குறித்த தான் அறிந்த செய்திகளை, நிமலராஜனிடம் உறுதிப்படுத்த தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அவருடன் உரையாடியிருந்தார். செய்தியாளனாக இறுதியாக அவர் உரையாடிய நபர் தானாகவே இருக்கும் என, இந்திரஜித் அந்த நினைவுகளை துயர்தோய தெரிவிக்கின்றார்.

ஊர் உறங்கும் நேரத்தில், யாழ் சுண்டிக்குழியில் இருக்கும் நிமலராஜனின் வீட்டுக்குள் நுழைந்த, இராணுவத்தின் கூலிக் குழுவான ஈ.பி.டி.பி. கும்பல், எதிர்ப்பட்ட நிமலராஜனின் தந்தையை, கத்தியால் வெட்டிச் சரித்தது. அல்லோல கல்லோலப்பட்டுப்போன அந்தச் சூழ்நிழலையில், நிமலராஜனின் தாயாருக்கும் வெட்டுக் காயம். குண்டடிபட்டு நிமலராஜன் துடிதுடித்துச் சரிய, கைக்குண்டொன்றை வீசிவிட்டு, தமது காரியம் வெற்றிபெற்றுவிட்டதான மமதையில், அக்கூலிக்கும்பல், அவசரமின்றி நிதானமாகவே அவ்விடம் விட்டகன்றது.

இந்தக் கூலிகளின் தாக்குதலில் இருந்து, சிறியவயதினரான அவரது மூன்று பெண்பிள்ளைகளும் அவரது மனைவியும் மயிரிழையில் தப்பித்துள்ளனர்.

பி.பி.சி. சந்தேசிய, தமிழோசை ஆகியவற்றிற்கும், வீரகேசரி, ராவய, மற்றும் சிங்கள தமிழ்ப் பத்திரிகைகளுக்கும், தனியார் வானொலிகளுக்கும் அவர், செய்தியாளராகப் பணியாற்றிவந்திருக்கின்றார்.

எதிரியால் சூழப்பட்ட சூழ்நிலையில் இருந்துகொண்டு, எதிரியால் எக்கணமும் வேட்டையாடப்படலாம் என்றுணர்ந்தும் எதுவித அச்சஉணர்வின்றி, ஒரு போர் வீரனுக்குரிய மனோதிடத்துடன் துணிவுடன், அவர் செய்திப்போர் நடத்திவந்திருக்கின்றார். சிங்களத்தின் பொய்யான தகவல்களை முறியடிக்கும் ஒரு தர்மயுத்தமாகவும் இதனைக் கருதமுடியும்.

யாழ்க்குடாவில் நடத்த தேர்தல் முறைகேடுகள் குறித்து, அவர் செய்தி வெளியிட்டமையே அவரது உயிருக்கு எமனாக வந்துள்ளதாக எல்லோராரும் தெரிவிக்கப்படுகின்றது. ஈ.பி.டி.பி.யின் வாக்குமோசடிகள், முறைகேடுகள் வன்முறைகள் குறித்து, அவர் காரசாரமாக செய்திகள் வெளியிட்டமை, ஈ.பி.டி.பி.யை சினப்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சில தினங்களுக்கு முன்னராகவும் அவர், ஈ.பி.டி.பி.யினரால் எச்சரிக்கப்பட்டிருந்தார் என, அவரது பத்திரிகை நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரது நண்பர்களில் ஒருவரான ராவய பத்திரிகையின் ஆசிரியரான விக்ரர் ஐவான், நிமலராஜன் ஈ.பி.டி.பி.யின் கொலை மிரட்டலுக்கு ஆளாகியிருந்தார் எனத் தெரிவிக்கின்றார்.

டக்கிளஸ் தேவானந்தா, வடக்கு புனரமைப்பு அமைச்சராக பொறுப்பேற்ற சில மணிநேரங்களில், இப்படுகொலை நிகழ்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டும் விக்ரர் ஐவான், ஈ.பி.டி.பி.யின் ஆதரவு, ஆளும் கட்சிக்கு தேவைப்படுகின்ற நிலையில், இப்படுகொலைக்கு விசாரணைகள் நடைபெற்று, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவர் என்பது எதிர்பார்க்கமுடியாதது எனத் தெரிவிக்கின்றார்.

நிமலராஜனின் படுகொலை நடவடிக்கை, தமிழீழ மக்களை மட்டுமல்ல

# ...ாக்கள்

-சுப்பு-

நியாய சிந்தையுள்ள சிங்களச் செய்தியாளர்களையும் அது வெகுவாகப் பாதித்திருக்கின்றது. இதுமட்டுமல்லாமல், இப்படுகொலை நிகழ்ச்சி, உலக ஊடகவியலாளர் அமைப்புக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சந்திரிகா அரசிற்கு அவை தொடர்ச்சியான கண்டனங்களை அனுப்பிவருகின்றன.

பாரிசைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் எல்லைகள் கடந்த ஊடகவியலாளர் அமைப்பு, சந்திரிகாவிற்கு அனுப்பிவைத்துள்ள கண்டனக் கடிதத்தில், சிறீலங்காவில் 1988ம் ஆண்டிற்குப் பின்னர் 31 செய்தியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

சிறீலங்காவில் செய்தியாளர்கள் மீதான அரச அடக்குமுறை வடிவங்கள், பொய் வழக்குகளாகவும், கைதுகளாகவும், காரணமற்ற சிறைவைப்புகளாகவும், பின்னர் படுகொலைகளாகவும் உச்சம் பெறுகின்றது.

நிமலராஜனின் மரணச் சடங்கில் கலந்துகொள்ள கொழும்புப் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்காமல், தனது ஆதரவுக்கட்சியான ஈ.பி.டி.பி. யை செய்தியாளர்களின் கண்டனக்கணைகளில் இருந்து தப்பிக்கவைக்க சந்திரிகா முயன்றிருக்கின்றார். படுகொலை நடைபெற்ற நாளுக்கு மறுநாள், கொழும்பில் இருந்து, யாழ் செல்ல நான்கு பத்திரிகையாளர்களுக்கு சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் அனுமதியளித்திருந்தது. எனினும் சந்திரிகாவின் தலையீட்டையடுத்து, அடுத்த சில மணிநேரத்தில், பத்திரிகையாளர்களின் யாழ் பயணத்திற்கான அனுமதி காரணம் தெரிவிக்கப்படாமலேயே மறுக்கப்பட்டது. இந்த நாட்டில் எந்த சுதந்திரமும் இல்லை என தெரிவிக்கும் ராவய பத்திரிகையாளர் ஜெயசிறீ ஜெயசேகரா, ஒரு மரணச் சடங்கில் கலந்துகொள்ளக் கூட இங்கு தடையிருக்கின்றது என்பதையே இது காட்டுகின்றது எனத் தெரிவிக்கின்றார்.

தனது சக பத்திரிகைத் தோழனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளமுடியாத ஆற்றாமை மேலிட, அரசின் நடவடிக்கையை கண்டிக்கும் அவர், வடக்கு தெற்கு மக்களிடையேயான இடைவெளி தகர்வதை இந்த அரசு விரும்பவில்லை எனத் தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்த போதும், பின்னர் இந்திய அமைதிப்படை தமிழீழ மண்ணை ஆக்கிரமித்திருந்த போதும், பின்னர் சிறீலங்கா ஆக்கிரமிப்புப்படை யாழ்மண்ணை விழுங்கி நின்ற போதும், யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு செய்தியாளராக நிமலராஜன் செயற்பட்டிருக்கின்றார்.

இந்தியப்படை நமது மண்ணை ஆக்கிரமித்தபோது, 1987ம் ஆண்டு, அது வந்தவேகத்தில், ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைக் காரியாலயங்களை குண்டுவைத்துத்தகர்த்தது.

ஆக்கிரமிப்பாளனுக்கு பத்திரிகைகளைக் கண்டால் எப்போதும் பயம். செய்தியாளர்களைக் கண்டால் எரிச்சல். மக்கள் உண்மைச் செய்திகளை அறிந்து விடக் கூடா தென்பதில், ஆக்கிரமிப் பாளர்களும், அக்கிரமக்காரர்களும் மிகுந்த கவனம் செலுத்துவர். ஈழமுரசு முரசொலியை குண்டு வைத்துத் தகர்த்து, மக்களின் சனநாயக உரிமைக்கு வேட்டு வைத்த இந்திய அமைதிப்படை காலத்தில் கூட ஒருவாறு தப்பிப் பிழைத்த நிமலராஜன், சந்திரிகாவின் ஆக்கிரமிப்புக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.




25.10.00 அன்று வவுனியாவில் நடைபெற்ற நிமலராஜன் படுகொலைக் கண்டன ஊர்வலம்.

எதிர்காலத்தில் இந்தக் கும்பலால் நடத்தப்படப்போகின்ற படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் வெளியுலகிற்கு தெரியக்கூடாது என்பதற்காகவே இப்படுகொலை நடாத்தப்பட்டிருப்பதாக சுதந்திர மாணவர் முன்னணி தனது கண்டன அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படும் அவர்களின் சனநாயக உரிமையை நசுக்கவே, இந்தப்படுகொலை என, வவுனியா பத்திரிகையாளர் சங்கம் தெரிவிக்கின்றது.

கூட்டணி உட்பட தமிழ் அரசியல் கட்சிகள், ஈ.பி.டி.பி.யின் இந்த மிலேச்சத்தனமான படுகொலை, அதன் தேர்தல் முறைகேடுகளை அம்பலப்படுத்தியமைக்காக செய்யப்பட்டது என்கின்றன.

இப்படுகொலையைக் கண்டித்து, ஊர்வலங்கள், பகிஸ்கரிப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குமாறு கோரி சந்திரிகாவிற்கு மகஜர்கள் அனுப்பப்படுகின்றன.

ஈ.பி.டி.பி. உறுப்பினராக இருந்த போதும், அதன் போக்கிலிருந்து மெல்லச் சற்று விலகி அரசை கடுமையாக விமர்சிக்கத்தலைப்பட்ட தினமுரசு ஆசிரியர் அற்புதன் கொழும்பில், கடந்த ஆண்டு இதேகாலப்பகுதியில், சுட்டுப்படுகொலை செய்யப்பட்டபோதும் கண்டனங்கள் எழத்தவறவில்லை.

ஆனால், அரசும் ஈ.பி.டி.பி.யும் பரஸ்பரம் இந்தப்படுகொலைகள் மூலம் லாபம் சம்பாதித்திருக்கின்றனர். கண்டனங்கள் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. மகஜர்கள் சந்திரிகாவின் குப்பைக்கூடைகளை நிரப்பும் வேலையைத்தான் செய்யும்.

ஒன்று மாத்திரம் உண்மை. தமிழீழ மண்ணை முழுமையாக மீட்கத்துடிக்கும் ஓயாத அலைகளின் எழுச்சிப்பிரவாகம், தாயகமண்ணின் முழுமையையும் எப்போது தொடுமோ அப்போதுதான் விடுதலையும் விமோசனமும். இந்த அழிவுகளுக்கும் அவலத்திற்கும் துயரிற்கும் துன்பத்திற்கும் அப்போதுதான் விடுதலை கிடைக்கும். நமது புண்ணிய பூமியைப் பீடித்துள்ள கொடிய நோய்கள் அப்போது தான் பூண்டோடு அழிவுபடும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருளாதார ரீதியில் ஒரு இனத்தை நெருக் கடிக்குள்ளாக்குவதன் மூலம் பட்டினி யாலும், நோய்களாலும் சிறுவர்களை உயி ருடன் வதைத்து அவ்வினத்தின் எதிர்காலச் சிற்பிகளை நலிவடையச் செய்வது, இவை யெல்லாவற்றிற்கும் மேலாக கருவில் வைத்தே சிறுவர்களை அழித்துவிடுவதென ஆக்கிரமிப்பாளர்களின் படுகொலைத்திட் டங்கள் விரியும். இதேபோன்றே தமிழின அழிப்பில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பேரின வாத அரசும் தமிழ்ச் சிறுவர் வாழ்வை ஏப் பம் விட்டுவருகின்றது.

தமிழ் மக்களை தனது பிரஜைகளாக வெளியுலகிற்குக் காட்டிக்கொள்ளும் சிங்

# சிறுவரின் போராதார

களம், இங்கோ இறுக்கமான பொருளாதார முற்றுகைக்குள் தமிழ்ப் பிரதேசங்களை வைத்திருக்கிறது. தமிழ்ப் மக்களுக்காக அபி விருத்தி, புனர்வாழ்வு என்ற போர்வையில் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் படும் நிதியுதவிகள் எல்லாம் தமிழர்களின் எச்சசொச்சமாயிருக்கும் சுயபொருளாதாரத் தையும், வாழ்வையும் அழிக்கும் குண்டு களாகவே இங்கு வந்துசேர்கின்றன. எமது மக்களின் வாழ்வில் அவலங்களெல்லாம் அரசின் பிரச்சாரக் கருப்பொருளாகி அவர் களை மேலும் மேலும் வருத்தும் போருக்கு நிதியைத் திரட்டுவதற்காகவே சிங்களத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவை குண்டுகளாகவே தமிழர்களின் தலைகளில் போடப்பட்டுவருகிறது, ஏதுமறியாக் குழந் தைகளைக்கூட அவை பலிகொண்டு விடு கின்றன, அல்லது பெற்றவர்களை, பாது காவலர்களைப் பலிகொண்டு சிறுவர்களை நடைபிணங்களாக்கி விடுகின்றன.

ஒன்றுக்குப் பலதடவைகள் சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்படும் மக்கள் பொருளாதார பலமற்றவர்களாக மாறிவிட் டார்கள், இந்நிலையில் பொருளாதாரத் தடைகள் மூலம் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத நிலைக்கு நுகர்வுப் பொருட் களின் விலைவாசிகள் உயர்த்தப்பட்டி ருக்கின்றன. எமது மக்கள் மீது

சிறுவர் வாழ்வு புனிதமானது, எத்த கைய கொடூர உள்ளங்களையும் இளகச் செய்யும் சக்தி படைத்தது, வளர்ந்து விருட்சமாகி மனித குலத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஜீவன்கள் இந்தச் சிறுவர் கள்தான். அதனால்தான், ஒரு சமுதாயத் தின் உயிர்நாடியாக இந்தச் சிறுவர்கள் கரு தப்படுகிறார்கள். இந்த பாலகப் பருவத் தைக் கருகவிடாது பண்படுத்தி வளர்ப்பது என்பது ஒரு அரசின் தலையாய கடமை யாகின்றது.

'தாய்மை நிலையும் குழந்தைப் பருவ மும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன, சகல குழந்தைகளும், அவை திருமண உறவினுட் பிறந்தவையா யினுஞ்சரி, அத்தகைய உறவின்றிப் பிறந் தவையாயினுஞ்சரி, சமமான சமூகப் பாது காப்பினைத் துய்க்கும் உரிமையுடையன' என்கிறது ஐ.நா.சபையின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்.

இவை இப்படி இருந்தபோதும் ஆக்கிர மிப்பாளர்களினதும், இன அழிப்பாளர்களி னதும் பிரதான குறியிலக்காக சிறுவர்களே இருந்து வருகிறார்கள், அத்தகைய அரசு களின் விசேட கவனிப்பு என்பது ஆக்கிர மிக்கப்படும் அல்லது ஒடுக்கப்படும் தேசத் தின் சிறுவர்களை அழிப்பது என்பதாகவே அமைந்துவிடுகின்றது. அதற்காகவே திட்ட மிடப்பட்ட அழிப்புமுறைகள் அந்த குறிப் பிட்ட இனத்தின் மீது சுமத்தப்படுகின்றது. இனக்கலப்பு என்பதன் மூலம் ஒரு இனத் தின் அடையாளங்களை அழித்துவிடுவது,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வாதாரத்தைப்
# மாக ஆக்கும் அரசு

- அ.தீபன் -

சிங்களத்தால் திட்டமிட்ட முறையில் சுமத்தப்படும் வாழ்வியற் சுமை, ஏதுமறியா சிறுவர்கள் வாழ்வில் அவலங்களைச் சுமத்து கிறது, அதுவும், சிங்களத்தால் திட்டமிட்ட முறையில் கொல்லப்படும் கணவர்களை, உழைப்பாளர்களை இழந்து அரசால் நட்டாந்தெரு வில் கைவிடப்படும் குடும்பங்களுடைய குழந்தைகளின் நிலையோ மோசமானதாகிறது. இப்படியான ஒரு அவலம் நிறைந்த வாழ் வுக்குத்தான் எங்கள் மண்ணின் சிறுவர்களுக்கு வழி விட்டுவைத் திருக்கிறது சிங்களம். இவற்றையெல்லாம் 'சமாதானத்திற்கான பலிகள்' ஆகவும் அர்த்தப்படுத்திவிட முடியுமா? இவற்றிற்கு சிங்களம் கூறும் நியாயப்பாடுகளை எந்தவரையறைகளின் கீழ் சரியென ஏற்றுக்கொண்டு மனித உரிமை அமைப்புகள், சிறுவர் நலன் பேணும் அமைப்புகள் தமது கண்களையும், வாய்களையும் மூடிக்கொண்டுவிட முடியும்.

'ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டுவசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தம தும், தமது குடும்பத்தினரதும் உடனலத்திற்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்திற்கு உரிமையுடையவராவர், அத் துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரண மாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாடிற்கு அப்பாற்பட்ட பிறசூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பிற்கும் உரிமையுடையவராவர்' என் கின்ற ஐ.நா.சபையின் அனைத்துலக மனித உரிமைகள் பிரக டனம், அதன் உறுப்பு நாடான இலங்கையில், தமிழ் மக்களின் வாழ்வில் மட்டும் மதிக்கப்படவில்லையே?!

தென்னிலங்கையில் வசதி படைத்த சிங்கள மக்களுக்குச் செய்யப்படும் அடிப்படை வசதிகள்கூட தமிழ் மக்கள் விடயத்தில் செய்யப்படுவதில்லை. சிங்கள மக்களின் பொருளாதார முன் னேற்றங்களுக்காக விதம் விதமான திட்டங்களை முன்வைக்கும் அரசு, போர்க்களமாக்கப்பட்டுவிட்ட தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பாக இன்று போர் மையங்கொண்டிருக்கும் வன்னிப்பகுதி யில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பற்றி அக்கறை கொள்ள வில்லை. நிவாரணத்தை மட்டுமே நம்பியிருந்த பல்லாயிரக்கணக் கான மக்களுக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது, அடிப்படை மருத் துவ வசதிகள்கூட தடுக்கப்படுகிறது, இவையெல்லாம் தமிழினத் தின் எதிர்காலச் சந்ததிகளாகிய குழந்தைகளை நலிவுறச்செய்யும் திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகளாகவே கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில், குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள் போன்றவர் களுக்கான சிறப்புக் கவனிப்புக்கள்கூட இங்கே மறுக்கப்பட்டி ருக்கிறது, இதுவும் சிறீலங்கா அரசு சொல்வது போல் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவுகிறதா?

'தமிழ் மக்கள் எங்களுடைய மக்கள்' என போலிக் குரலெ ழுப்பும் சிங்கள அரசு எங்கள் சிறுவர்களைக் காப்பாற்றும் என்று எமது மக்கள் எதிர்பார்க்கவில்லை. சிறுவர்களின் நலன்களையும், உரிமைகளையும் கவனிப்பதற்கென்றே சர்வதேச ரீதியில் அமைக் கப்பட்டிருக்கும் அமைப்புகள்கூட எமது சிறுவர்கள் விடயத்தில் உருப்படியாக எதையும் செய்யாதது கவலைக்குரியது. இத்தகைய சூழலில் சர்வதேச தமிழ்ச் சமூகத்தின் ஆதரவுடன் தமிழர் புனர் வாழ்வுக் கழகமும் அதன் துணை அமைப்புகளும் வன்னிப்பகுதி யில் தற்போது செய்துவரும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எமது சிறுவர்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையளிக்க முனைகிறது.

1999ம் ஆண்டை சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஒரு வயது முதல் ஐந்து வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. 'வன்னிச் சிறுவர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டினிச்சாவு தவிர்ப்பு' திட்டத்திற்காக வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம் இருந்து வழங்கப்பட்டிருக்கும் நிதியுதவியின் மூலம் 75இற்கும் மேற்பட்ட நிலையங் களில் இதுவரை 15,000இற்கும் மேற்பட்ட குழந்தைகளும் 4,000இற்கும் மேற்பட்ட கர்ப்பவதிகளும் தினமும் ஒரு நேர சத்துணவைப் பெற்றுவருகின்றார்கள், மோசமான பகுதிகளைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளில் சிறுவர் களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் திட்டமும் நடை முறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றைவிட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் ஏற்கனவே வன்னிப்பகு தியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாதுகாப்புத் திட்டங்கள் எமது சிறுவர்களைப் பட்டினிச்சாவு என்பத திலிருந்து மீட்பது என்பதற்கும் அப்பால் அவர்களுக்கு கல்வியறிவூட்டி ஒழுக்க சீலர்களாக வளர்ப்பதுவரை உதவிவருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் அமைக்கப் பட்டிருக்கும் சிறப்பு சிறுவர் போசாக்கு நிலையங்களின் கீழ் ஆபத்தான போசாக்குக் குறைபாட்டிற்கு உள்ளாகி இருக்கும் குழந்தைகளையும், தாய்மார்களையும் காப்ப தற்காக வைத்திய வசதிகளுடன்கூடிய இரண்டு நிலை யங்களும், சாதாரண போசாக்குக் குறைபாட்டால் பாதிக் கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்காக ஒன்பது போசாக்கு நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பராமரிக்கப்பட்டு காப்பாற்றப்படுகின்றார்கள்.

இதேபோன்று, ஆறு சிறுவர் போசாக்குப் பூங்காக் களில், வறுமையால் வாடும் ஆயிரக் கணக்கான சிறுவர் கள் நாளாந்தம் பராமரிக்கப்படுவதோடு, சிங்களப் படை களின் தாக்குதல்களால் தந்தையையோ, தாயையோ இழந்து பராமரிப்பற்றிருக்கும் ஆதரவற்ற சிறுவர்களின் பாதுகாப்பிற்காக சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் ஏழு அமைக்கப்பட்டு அவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்விவசதியுடன் கூடிய முழுநேரப் பராமரிப் பிற்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய திட்டங்கள் மூலம், ஐந்து வயதிற்கு உட்பட்ட முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களைக் கொண்ட வன்னிப் பகுதியில் கணிசமான சிறுவர்களின் நலன் பேணலை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் துணை நிறுவனங்களும் செய்து வருகின்றன. சிறுவர்களின் வாழ்வுக் கான எந்தவொரு சூழலையும் அனுமதிக் காத சிங்களப் பேரினவாதத்தின் படுகொலைக் குறியிலக்கிற்குட்பட்டிருக்கும் எமது மக் களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இச்செயற்பாடுகள் எதிர்காலம் மீதான நம் பிக்கையைக் கொடுக்க முனைகின்றன.





தமது ஒடுக்குமுறையாளர்களிடமிருந்து ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் எதையும் எதிர் பார்க்க முடியாத சூழலில், சர்வதேச சட்டங் களையும் உடன்பாடுகளையும் அத்துமீறி இன அழிப்பில் ஈடுபட்டிருக்கும் சிறீலங்கா அரசின் செயற்பாட்டை உலக சமாதானம் பேணும் அமைப்போ, சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ, சிறுவர் நலன் பேணும் அமைப்போ இது விடயத்தில் அக் கறை எடுக்காத நிலை, எம்மக்களுக்கு எம்மை நாமே ஆளக்கூடிய சுதந்திர ஆட்சி மீதான கொள்கைப் பற்றையும், விடுதலை உணர்வையுமே மேலும் மேலும் வற் புறுத்தி நிற்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்ப்பாடல்



அம்மா!
ஈரவிறகுக்குள் மூசி முனைந்து தீ வளர்த்து
திணறடிக்கும் அடுப்புப்புகை நடுவே
தினமும் சட்டிக்கரி முகத்தோடு
போர் எடுக்கும் தாயே - உன் புதல்வன்
போர்க்களத்தில் - வெடிகுண்டுப்
புகை நடுவே நின்று பாடுகிறேன்!

அதிகாலை யன்னல் வழியாக
கட்டிக் கொஞ்சும் நீள்கதிர் நான்தானம்மா
நீ எனக்கு விளைநிலமாகி ஈந்த முலைப்பாலில்
எதைக் கலந்தாய்?

எதிர்க்குப் பின்வாங்க மறுக்கின்றேன் நான்.
மடிச்சூடு மாறாத முதுகோடு
போர்க்களத்தில் உன் புதல்வன் - என நினைத்து
மடி நிறைய நெருப்புக்கட்டி
பெருமூச்சால் வீசி இறகெரிந்து
நீ இறந்து போவாயோ? அம்மா!

மடிஅளைந்து முற்றத்தில் தவழ்ந்து தடுக்கி
விழுந்தெழுந்து ஒரு புன்னகையால்
உனைவீழ்த்தி மகிழ்ந்த நாட்கள்
தொலைந்தது...
இதை நினைத்து ஏங்க எனக்கேது நேரம்?

வானத்தில் முகில்த்துண்டொன்றெடுத்து
உன்மார்பில் பொன்னாடையாக்கி,
சூரியன் வீழ்ந்த மேற்கைக்கிழித்து
கம்பளமாய் நான் விரித்து
ஒருநாள் சுதந்திரமாய் ஈழத்தில் வருவோம்,
வெகுநாளில்லை.

அதுவரையில் உன்புதல்வன்
போர்க்களத்தில் பகைவனின் புகைநடுவே
சந்திரனாய் அசைகின்றேன் தோழரோடு.
வளர்பிறையில் உன் புதல்வன் உயிர்ப்பான் நம்பு.
அம்மா! உன்னோடு உன்புதல்வனிருக்க உனக்காசை
ஆனாலும் என்னோடு என் அம்மா வருவாயாகில்
வானம் தாழ்பணியும்! வருவாயா நீ?
அடுப்புப்புகை நடுவே திணறும் உனக்கிந்த
போர்க்களத்துப் புகைமூட்டம் பெரிதேதுமில்லை
வாருவாயாம்மா?

- முல்லையூரான்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மூடிக்கிடக்கும் மாயத்திரைகளை
விலக்கி போரரங்கை ஒளியாக்குவோம்"




# ஈழத்தமிழர் இனி ஆற்ற வேண்டியது என்ன?



**கே.பி.றெஜி**

1994இல் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ. முன்னணி அரசு இதுவரை காலமும் ஐ.தே.க அரசின் ஆட்சிக்கு முடிவு கட்டவேண்டும் எனவும் அவர்களது ஜனநாயக ஆட்சி நாட்டினை பாதாளத்திற்கே கொண்டு சென்றிருக்கிறது எனவும் தனக்கு ஒரு சந்தர்ப்பம் தந்தால் யுத்தத்தினை நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் நடாத்தி யுத்தத்திற்கு செலவழிக்கின்ற நிதியினை அபிவிருத்திக்காக பயன்படுத்துவேன் எனவும் மக்களிடம் கூறினார். மக்களும் "புதிய கூட்டு மாறு நன்றாகக் கூட்டும்" (New broom Sweeps well) என்ற முதுமொழிக்கமைய அம்மையாரை நம்பி வாக்களித்தனர். (விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் நடைபெறவில்லை)

தேர்தலில் ஜனாதிபதி அவர்கள் வெற்றியும் பெற்றார். வெற்றிபெற்ற கையோடு ஆயுதங்களை சுமந்து வந்தது கப்பல். அதனை இறக்கவிடாது தடுப்பதாக அரசியல் நாடகம் நடாத்திக்கொண்டே பேரினவாதச் செயற்பாடுகளில் மறைமுகமாக ஈடுபடவே போர் வெடித்தது.

போர் வெடித்த கையோடு விடுதலைப் புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு. விடுதலைப் புலிகளிற்கு தேவையானது பயங்கரவாதம். மக்களிற்குத் தேவை அபிவிருத்தி என இனவாத செயற்பாடுகளிற்கு ஏற்ப தரம்பிரிக்கத் தொடங்கினார் ஜனாதிபதி அவர்கள்.

சமாதானம் ஏற்படுவதற்கும் அதன் மூலம் தமிழ் மக்களிற்கு அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கும் விடுதலைப் புலிகள் தடையாக இருக்கின்றனர். எனவே அந்தத் தடைகளை அகற்றுவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்ற பேரினவாதத்தின் கிடப்பில் இருக்கும் தந்திரோபாயத்தினை புதிய கண்டுபிடிப்பாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்து, ஆக்கிரமிப்புப் போருக்கு ஆதரவுகளை திரட்டினார். ஆனால் உண்மை என்னவெனில், தமிழ்மக்களுக்கு விடுதலைப் புலிகள் பாதுகாப்புக் கவசமாக இருக்கும்வரை பேரினவாதம் தான் நினைக்கும் எதனையும் ஆயுத ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ செய்ய முடியாது என்பதே ஆகும். எனவேதான் சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசத்தை உடைப்பதாகவும் அதன் பின்னர் மக்களுக்கு தாம் நினைத்ததை செய்யலாம் எனவும் தீர்மானித்தது சந்திரிகா அரசு.

இந்த தந்திரோபாயத்தினையே பொ.ஐ.மு அரசிற்கு முந்திய அரசான ஐ.தே.க. அரசாங்கமும் செய்து தோற்றுப்போனதொன்றாக இருந்தது. அதனையே அம்மையார் புதிய வடிவத்தில் தொடங்கினார்.

விடுதலைப் புலிகளின் பலத்தினை உடைப்பது என்பது யாழ் குடாநாட்டில் இருந்து அவர்களை வெளியேற்றினாலே சாத்தியமாகும் என்றும், அதே நேரம் குடாநாட்டில் 07 இலட்சம் வரையான மக்கள் இருப்பதனால் அவர்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும், பின் தமது நகர்வுகளை அம்மக்கள் ஊடாக செய்வதன் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் கருத்தாக அதனை உலகிற்கு தெரியப்படுத்துவதும் சந்திரிகாவின் திட்டமாக இருந்தது.

இதன்படியே குடாநாட்டை கைப்பற்றும் நடவடிக்கையினை பொ.ஐ.மு அரசு ஆரம்பித்தது. ரிவரச இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட வரையிலும் யாழ் குடாநாட்டு மக்களும், விடுதலை புலிகளும் போர் நட



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடிக்கையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

குடாநாட்டில் ஏழு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வசித்து வந்தனர். அதுமட்டுமன்றி தென்தமிழீழம் மற்றும் தமிழர் வாழ் பிரதேசங்களில் தமிழ் மக்களை சிங்களப் பேரினவாதம் கொடுமைப்படுத்தும் வேளையில் அவர்கள் பாதுகாப்புத்தேடி ஓடிவருவதும் ஒதுங்கிக் கொள்வதும் வடதமிழீழத்தில்தான். மேலும் அவர்களின் சுமைகளை ஓரளவு தீர்க்கும் இடமாகவும், ஜனநாயகரீதியாக மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான பாதுபாப்பான இடமாகவும் குடாநாடு காணப்பட்டது.

மிகப்பெரிய மக்கள்சக்தி, பொருளாதார பலம் இவற்றை முற்றுமுழுதாக ஆயுதப்போர் மயப்படுத்தாது. அம்மக்களே தமது அரசியல் ரீதியான வெளிப்பாடுகளையும் தாயகக் கோட்பாட்டிற்கான செயற்பாடுகளையும் வெகுஜன போராட்டத்தின் மூலமாக சிங்களப் பேரினவாதத்திற்கும், உலகிற்கும் நாள் தோறும் எடுத்து இயம்பிக்கொண்டிருப்பதற்கான சூழலை விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் என்பதே உண்மை. அது ஒரு ஜனநாயக செயற்பாடும்கூட.


மக்கள் அழிவுகளையும், துன்பங்களையும், பொருள் இழப்புக்களையும் விடுதலைப் புலிகள் கருத்தில் எடுக்காது சிங்கள அரசு போல் மிகப் பெரிய கொடிய யுத்தத்தினை செய்வதற்கு அவர்கள் தீர்மானித்திருந்தால் குடாநாட்டில் முழு சக்தியையும் வளங்களையும், யுத்த முனைக்கு திருப்பி விடுதலைப் புலிகளால் சமர் செய்ய முடிந்திருக்கும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யப்புகவில்லை. எனினும் சிங்களப் பேரினவாதம் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும் போர் வெறியர் என்றும் பட்டம்சூட்டி செயற்பட்டது. அதற்குக் காரணம் தமது இனக்குரோத செயற்பாட்டினை நியாயப் படுத்துவதற்காகவே என்பது அனைவருக்கும் புரிந்தவிடயம்.

பல்வேறு இராணுவ நடவடிக்கைகளாலும் துன்பப்பட்ட மக்கள் ஜனநாயக எழுச்சியான போராட்டங்களை நடாத்தினர். ஆனால் அம்மக்களின் அவலக்குரல்களையும், அழுகுரல்களையும் வேதனை பொதிந்த கதறல்களையும் செவிமடுப்பதற்கு மனிதாபிமானம் கொண்டவர்களாகக் கூறப்படுபவரின் காதுகளின் கதவுகளும் தெரிந்தோ தெரியாமலோ மூடப்பட்டமை துரதிஸ்டம்.

தமிழ் மக்களின் 45 வருடத்திற்கு முன்பாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தில் இருந்து 1985 வரையான ஜனநாயகப் போராட்டங்களிற்கு சிங்கள அரசு செவிமடுக்காதது மட்டுமல்ல, அப்போராட்டத்திற்கும், தமிழ் மக்களின் அகிம்சை ரீதியான பண்பான உணர்விற்கும் மதிப்புக் கொடுக்காது அதனை இம்சித்தது. மேலும் அத்தகைய மென்போக்குடைய செயற்பாட்டிற்கு பாதுகாப்பைக் கூட வழங்காது நிராயுதபாணிகள் மீது அரசு ஆயுதபாணிகளை ஏவிவிட்டு குதறி எறிந்தது வரலாறு.

அகிம்சை ரீதியான போராட்டத்திற்கு அரசு பாதுகாப்பு வழங்காதபோது தமிழர்கள் தம்மை பாதுகாத்துக் கொண்டே தமது கருத்தினை ஜனநாயகரீதியாக தெரியப்படுத்த முடிவெடுத்தனர். இது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு பயங்கரவாதமாக தோற்றம் அளித்தது. அல்லது அவ்வாறு திட்டமிட்டு உருவகப்படுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் தமது தாயகக் கோட்பாட்டை வெளிப்படுத்தியதும் அதனை அடையமுடியாமைக்கு காரணமாக இருந்ததும் அவர்களிற்கு உறுதியான பாதுகாப்புக் கவசம் இல்லாமையே. தமிழ் மக்கள் வாக்குகளால் அந்தக் கவசத்தை ஏற்படுத்த முடியும் என அரசியல்வாதிகளின் கூற்றை நம்பி ஏமாந்ததுக்கும் வரலாறுகள் உண்டு. அமெரிக்க மெய்யியலாளர் சிட்னி டைக் என்பவர் கூறிகின்




றார், "ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு தேர்தல் தொகுதிதான் மக்களுடைய சுதந்திரத்தில் இறுதிக்காவலன்" ஆனால் அந்தச் செயற்பாட்டிற்கு பேரினவாதிகள் மதிப்பளிக்கவில்லை.

எனவே வாக்குகளாலும், ஒப்பந்தங்களாலும், நிறைவேறாத பாதுகாப்பை, சிங்களப் பேரினவாதத்தின் வன்முறையை எதிர்த்து ஆயுதப்போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களிற்கு ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது அரசியல் அபிலாசைகளை தளம்பலின்றி பெற்றுக் கொடுக்க புறப்பட்டவர் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

பொ.ஐ.மு அரசு யாழ் குடாநாட்டை கட்டுப்பாட்டில் வைத்திருந்து சுதந்திரமாக மக்களை உள்வாங்கி அபிவிருத்தி எனும் போர்வையில் தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அம்மையார் தமிழ் மக்களை தனது தூய அடிமைகளாக வரும்வரை யாழ் குடாநாட்டு மக்களை திறந்த வெளிச்சிறைசாலை வடிவில் நடாத்தி வந்தார், வருகின்றார்.

சுமார் இருபது வருடங்களிற்கு முன்பு ஜனநாயக ரீதியாக தேர்தலில் தமது உரிமைகளைக் கேட்ட மக்களை அடித்து, உதைத்து, இற்றைவரை 60,000ற்கு மேற்பட்ட மக்களை கொன்று குவித்து 15 இலட்சம் மக்களை அவர்களது சொந்த இடத்தில் இருந்து அடித்துத் துரத்திய பின்னர் மீண்டும் ஜனநாயகம் என்று கூறுவதில் அர்த்தம் எதுவும் இருக்கப் போவதில்லை.

குடாநாட்டில் குறிப்பிட்ட மக்கள் தொகையினர் அம்மையாரின் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தனர். அதே நேரம் வன்னியில் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தனர். இவ்வேளை சந்திரிகா அவர்கள் குடாநாட்டு மக்களிற்கு அபிவிருத்தி, வன்னி மக்களுக்கு யுத்தம் என்ற வகையில் தனது செயற்பாட்டினை முடுக்கிவிட்டிருந்தார்.

இதன் அர்த்தம் என்னவெனில், அடிமைகளாகவே வாழ்வோம் என சரணடைந்தால் அபிவிருத்தி, அவ்வாறு இல்லையேல் யுத்தம் என்பதே ஆகும். பேரினவாத வரலாற்றில் இருந்து மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்று.

மேற்கூறிய விடயமும் பேரினவாதிகளைப் பொறுத்தவரை தற்காலிகமானதே. அதாவது அவர்களின் செயற்பாடானது நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் யுத்தமும் (அடக்குமுறை) குறுகிய கால செயற்பாடாக சமாதானம், அபிவிருத்தி ஆகியவும் இருக்கின்றன.

சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள்வரும் வேளை சரணடைந்தவர்கள், அடையாதவர்கள் என்ற பேதம் இன்றி இனக்குரோத செயற்பாட்டிற்குள் உள்வாங்கப்படுவதும் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருப்பதும் கண்முன் சாட்சியாக உள்ளது.

எடுத்துக்காட்டாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பல இனப்படுகொலைகள் அவ்வாறு நடந்துள்ளன. பொ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் இவை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக கொழும்பில் தமிழர் கைதுகள் தொடக்கம் ஓயாத அலைகள் போர் நடவடிக்கைகளில் தமது கட்டுப்பாட்டில் இருந்த மக்களை தமது பாதுகாப்பிற்காக யுத்தத்தில் பயன்படுத்தப்படுவது வரை இது குறிப்பிடத்தக்கது.

வன்னியில் கடந்த ஐந்து வருட காலமாக தமிழ் மக்கள் உறுதியாக நின்று சிங்களப் பேரினவாதத்திற்கெதிராக விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடியதால் பெற்ற, பெறுகின்ற பயன் என்ன? குடாநாட்டில் ஐந்து வருடங்களாக அம்மையாரின் ஆட்சிக்குள் இருந்த மக்கள் பெற்ற, பெறுகின்ற விளைவுகள் என்ன? என்பவற்றினை பகுத்தாய்வு செய்வதன்மூலம் மக்கள் தொடர்ந்து என்ன செய்ய வேண்டும் என்பதனை தீர்மானிக்க வேண்டும். அதன் விளைவே தாயக விடுதலைப் போரில் மக்கள் படைக்கட்டுமானத்தின் வளர்ச்சியாக அமைகிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 30.10.1995
# "மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பு"



**5 வருடங்களுக்கு முன் (1995) வரலாற்றுப் பதிவாகிவிட்ட மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வு.**

**தமிழீழ மக்களின் சமூக, கலாச்சார பொருளாதார மையமாகவும், தளராத கோட்டையாகவும் பொங்கிப் பிரவாகிக்கும் விடுதலைத்தீயின் பிறப்பிடமாகவும் இருந்த யாழ்ப்பாணத்தில், மண்ணும் மக்களும் எனப் பிணைந்து போயிருந்த உறவின் தொப்புள்க்கொடியறுத்து, ஐந்தரை இலட்சம் மக்களை ஒரிரு இரவில் குடிபெயரவைத்தது சிங்களத்தின் "சூரியக்கதிர்."**

**-மொறிஸ் தர்மபாலன்**

நல்லைக்கந்தன் முற்றத்திலிருந்து, செம்மணி வெளிநிறைந்து... நாவற்குழிப் பாலம் நிரம்பி இறுக்கி, முட்டி மோதியது மனிதத் தலைகள். ஒரு காலடி எடுத்துவைத்து மறு காலடி எடுத்துவைக்க குறைந்தது 30 நிமிடங்கள் பிடித்தது. இது மிகையல்ல. நிஜம். ஏனெனில் இம் மக்கள் வெள்ளத்தில் நானும் ஒருவன்.

மழை பெய்து கொண்டிருந்தது. "ஆட்லறி" எறிகணைகள் மக்களைக் கடந்து சென்று அருகில் விழுந்து வெடித்துக்கொண்டிருக்க, மேலே எதிரியின் "புக்காரா" குண்டு வீச்சு விமானம் வட்டமடித்து, எந் நேரத்திலும் குண்டுகளை வீசக்கூடியதாக பறந்து கொண்டிருந்தது. வயோதிபர்கள் சிலர் அந்த இடங்களிலேயே விழுந்து இறந்து கிடக்க, பிரசவங்களும் அவ்விடத்திலேயே நிகழ்ந்தேறின. பிறந்த குழந்தையும் உப்புநீரில் குளித்து, மழை நீரைக் குடித்து பாலம் கடந்தது, தமிழ் மானம் உயர்ந்தது. இது எனது அனுபவத்தினூடான மனப்பதிவின் சில துளிகள் மட்டுமே. இன்னும் எத்தனையோ சொல்லொணாத் துன்பங்கள் அனுபவித்து தமது நிலபுல சொத்து சுகங்களைக் கைவிட்டு உடுத்த உடுப்புடன் கையில் எடுத்த பொருட்களுடன், எதிரியின் எண்ணத்துக்கு வேட்டு வைத்து, தம் மண்ணைவிட்டு வெளியேறி விடுதலைக்கு உரம் சேர்த்தனர் எம் மக்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூட அந்த வரலாற்று இடப்பெயர்வு குறித்து கூறும்போது, "இது எம் மக்கள் அளித்த ஒரு உயர்ந்த பட்ச பங்களிப்பு. அது எங்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஐந்து லட்சம் மக்களும் செய்த ஒரு பெரிய பங்களிப்பு" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப்போகிறோம். அவர்களுக்கு விமோசனமளிக்கப்போகிறோம், அவர்கள் விடுதலைப் புலிகளின் பிடிக்குள் இருந்து கஸ்ரப்படுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதே எமது பணி" எனக் கூறிக்கொண்டு 40.000 படைகளை களத்தில் இறக்கி, பன்மடங்காக ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு "சூரியக் கதிர்" படைநடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியது. இருந்தும் என்ன பயன்? சிறீலங்கா அரசின் 2000 ஆண்டு கால வரலாற்றில் முதன்முதலாக ஜனசஞ்சாரமற்ற, சுடுகாடுபோல காட்சியளித்த வெறும் நிலப் பரப்பை மட்டுமே பிடிக்க முடிந்தது. "நாம் சுதந்திரத்துக்காக போராடுகின்ற மக்கள் சோத்துக்காக வாழ்பவர்களல்ல" என சிறீலங்கா அரசுக்கு பறைசாற்றிய எம் மக்கள் புலிகளை ஆதரித்து அவர்கள் பின்னே சென்றனர். முகத்தில் கரி பூசிக்கொண்டது சிங்கள அரசு. விடுதலைப் புலிகளும் மக்களும் ஒன்றே என்றும், தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள அரசை வெறுக்கின்றார்கள், விடுதலைப் புலிகளையே தமது தலைமையாக ஏற்றுக்கொண்டு செயற்படுகிறார்கள் என்பதையும் முழு உலகிற்குமே தெரியப்படுத்தியது இந்த மாபெரும் வரலாற்று இடப்பெயர்வு.

யாழ் குடாவில் இன்றுவரை ஆயிரக்கணக்கான மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து வருகின்றனரே என சிலர் நினைக்கக்கூடும். ஆனால் அன்றைய தினத்தில் தரைவழியாக ஒரு ஒற்றையடிப் பாதையாகிலும் அம் மக்களுக்குக் கிடைத்திருக்குமாயின்... இன்று வரை யாழ்ப்பாணத்தில் இராணுவம் "இலையான்" தான் கலைத்துக் கொண்டிருந்திருக்கும் என்பது அவர்கள் அறியவேண்டிய உண்மையாகும். ஒரு வேளை அப்படி நடைபெற்று இராணுவம் மட்டுமே யாழ் குடாவில் இருந்திருக்குமாயின், எப்பொழுதோ இலகுவாக, எந்தச் சிக்குலுமின்றி, விடுதலைப் புலிகள் யாழ் குடாவை மீட்டிருப்பார்கள் என்பது உறுதி.

இப்படை நடவடிக்கையானது சிங்கள அரசின் அரசியல், தந்திரோபாயத்துக்கும், நோக்கத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி என்பதை உலக நாடுகளே சுட்டிக்காட்டியிருந்தன. தம்மிடம் இருந்த மிகப் பெரிய பலமான ஆட்பலத்தை வைத்துக் கொண்டு, ஆயுத பலத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகளை வலிந்து சண்டைக்கிழுத்து அவர்களைப் பலவீனப்படுத்தி விடுவதென்று சமரை ஆரம்பித்த சிங்களப் படைத்தலைமை, சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை, யாழ்ப்பாணத்தைவிட்டு புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கி விடுவார்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









கள் என்று. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இந்த 5 வருட காலப்பகுதியில் பேரினவாத அரசால் எதனைச் சாதிக்கமுடிந்தது ஒன்றுமே இல்லை.

யாழ் குடாவை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் 1995இல் தனது மாவீரர்நாள் உரையின்போது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூறிய விடயமொன்றை இங்கு குறிப்பிடுவது இன்றைய காலத்துக்கு மிகவும் பொருத்தமாக அமைவதுடன், அவரது நுட்பமான திட்டமிடலுக்கும், தீர்க்கதரிசனத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பது திண்ணம். அது யாதெனில் "பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பது தான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது" என்பதே.

இவரது ஐந்து வருடத்திற்கு முந்தைய கூற்று, இன்று செயல் வடிவம் பெற்று, பெரு வெற்றி கண்டு வருவதானது "புலிகள் சொன்னதைச் செய்வர்கள்" என்பதனை கட்டியங் கூறி நிற்கிறது.

நிலங்களை இழப்பதும், பின் அவற்றை மீட்பதும் உலக விடுதலைப் போராட்டங்கள் அனைத்துமே சந்தித்த, சந்திக்கின்ற ஒரு பொதுவான நிகழ்வுதான். 1943இல் "மா வோ சேதுங்"கின் "செஞ்சேனைப்" படைகள் "யேனான்" எனும் பகுதியைவிட்டுப் பின் வாங்கிப் பின் அதை மீட்டெடுத்த வரலாற்று வெற்றி, 1974இல் எரித்திரிய விடுதலை இயக்கம் "அஸ்மாறா" எனும் தனது தலைநகரை இழந்து, சில வருடங்களின் பின் மீண்டும் அதை மீட்ட வரலாறு. வியட்நாம் விடுதலைப் போரில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்பு, நில மீட்புச் சம்பவங்கள் போன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள் இதற்கு உதாரணம்.

இந்த உதாரணங்களின் அடிப்படையில் இன்று யாழ் மண்ணை புலிகளின் ஓயாத அலைகள் மீட்டெடுத்து வருவதானது, 5 வருடங்களுக்கு முன்பு தமது மண்ணுடனான உறவின் தொப்புள்க்கொடியறுந்து, இன்றுவரை நெஞ்சில் வலிசுமந்து வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு மட்டுமன்றி, முழு ஈழத்தமிழனுக்குமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொடுக்கின்ற இனிப்பான செய்தி மட்டுமல்ல, உடுத்த உடுப்புடன், எங்கே செல்வது, எங்கே தங்குவது, எதை உண்பது என்று எதுவுமே தெரியாத நிலையிலும், விடுதலைப் புலிகளின் சொல் கேட்டு அவர்களின் பின்னே சென்று போராட்டத்துக்கு வலுச்சேர்த்த மக்களுக்கு, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தன் நெஞ்சு நிறைந்து கொடுக்கின்ற பரிசாகவும் அமையும்.

இந்தப் பரிசுகளில் ஒன்றுதான் தமிழீழத்தின் தொண்டைக்குள் சிக்கிய "முள்" ஆக இருந்த ஆனையிறவு, இன்று பகைவனின் உச்சியில் அறைகின்ற ஆணியாக மாறியிருப்பதும் ஆகும்.

யாழ் மண்ணை ஆக்கிரமித்து, விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்திவிடலாம் எனப் பகற்கனவு கண்ட சிங்கள அரசுக்கும், அதன் படைகளுக்கும், இன்று அந்த மக்களின் துணையுடனேயே பிரபாகரனின் சேனைகள் சென்று புதைகுழி அமைத்து வருவது உலக வரலாற்றில் பதியப்படவேண்டிய இன்னொரு அத்தியாயமாகும். தமிழ் மக்களை மீட்கவென வந்திறங்கிய சிங்களப் படைகள், இன்று மீண்டு செல்ல முடியாது விழிபிதுங்கி நிற்பதானது இன்று உலகறிந்த பரிதாபம்.

தமிழ் மக்களின் நீண்ட விடுதலைப் பயணமானது பல தடைகளைத் தாண்டி இன்று வெற்றிப் படிகளில் முன்னேறி வருகிறது. எதிரி ஆக்கிரமித்திருந்த பெரும் பிரதேசங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய வரலாற்று இடப்பெயர்வை நினைவு கூர்ந்து நிற்கின்ற நாம், இவ் வேளையில் ஒன்றைமட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

"ஈழத் தமிழனுக்கு இனிமேலும் குடிப்பெயர்வு என்பதே இல்லை; எல்லாமே குடிபுகும் விழாக்கள்தான்."



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலைக்களம்

—வியாசன்—

முன்னொரு காலத்தில்
பாசிபடர்ந்த பாழும் கிணறாய்
தூசிபடிந்த தூண்டாமணி விளக்காய்
பெருவிதியிதுவெனப் பேசாதிருந்தது எம்தேசம்.
கைகட்டி, வாய்ம்பொத்தி,
மெய்யுமொடுங்கிக் கிடந்தது எம்மண்.
வருவோரெவரெனினும் வரிசையில் நின்று
வாழ்த்துப்பாடியது எம்வாசல்.
வெள்ளைக்காரனுக்கு வெள்ளாடைவிரித்து
கல்லொழுங்கைகளெல்லாம் கைகுலுக்கிக்கொண்டன.
சிங்களவரிடம் எம்தேசம் கைமாறியபோதும்
அங்கிருந்து வந்த அனைவருக்கும் ஆராத்தி சுற்றியது.
தலைப்பாகை கட்டிய தலைவர்கள் எல்லோருக்கும்
நிலபாவாடை விரித்தது எம்நிலம்.
நேற்று; காண்டை பரவிய கருவேலங்காடு என்றவனே
இன்று; நோண்டிப்பார் தெரியும் முள்ளேறும் நோவு.

எங்கள் கங்கை.
இது விடுதலை அவாவிய வேகநதி.
எம் தாயகம் கிட்டும்போதே இனித்தணியும்.
சங்கமிக்கச் சம்மதிக்கும்
அதுவரையும் பாயும் அடங்காது,
யாரும் தடுத்து அணைபோட நினைத்தால்
அணையை மட்டுமல்ல
அணைபோட நினைக்கும் 'எஞ்சினியர்களையும்'
அள்ளிச்செல்லும்.
இத்தனை வேகம் ஏன் வந்தது?
புரண்டோடும் கங்கையின் நதிமூலம் என்ன?
தருவதைத் தாருங்கள் எடுத்துக் கொள்வோமென
ஐம்பதில் கேட்டது எம்மண்.
சேனநாயக்காவுக்குக் குதிரையேறிய செருக்கு
காதில் விழவில்லை.
ஒரு நாடு இரு ஆட்சி இது போதுமென
அறுபதில் கேட்டது எம்தேசம்.
பண்டாரநாயக்காவுக்கும் கண்டியத்திமிர்
காதில் விழவில்லை.
எல்லாப் பாவங்களையும் தலையிற் சுமந்தபடி
தள்ளுவண்டியிற் சஞ்சரித்திருந்த சிறிமாவிடமும்
சேர்ந்துவாழ முடியுமென்றே சொன்னது எம்தேசம்.
இளமை மிடுக்காலும், இதிகாசப் பெருமையாலும்
ஆச்சிக்கும் அன்று காதில் விழவில்லை.
சண்டைக்குத்தயாரா? என்று வந்தார் ஜே.ஆர்.

## எரிமலை வாசலில் இ
## என்றுநீ அறியாமல் சி

தூங்கித்தான் கிடந்ததெம் தேசம்.
துணிவின்றித்தான் இருந்ததெம் தோள்கள்.
ஏழில் செவ்வாய், ஏழரைச்சனியன்,
குருபார்வை வக்கிரமெனக் குறிப்பெழுதிய மண்ணை
நெருப்பென நிமிரவைத்தது ஒரு கைவிளக்கு.
சாவுப்பயத்தில் சன்னியே பிடித்திருந்த தேசத்துக்கு
பள்ளியெழுச்சி பாடினரெம் பிள்ளைகள்.
புழுதி விளைச்சலெனக் கிடந்த தெருவை
எழுது புதுவிதியென எழுப்பினர் புலிகள்.
மலையென எழுந்தது எம்மண்.
பாம்படிக்கக்கூட பக்கத்து வீட்டாரைக் கூப்பிட்டதேசம்,
கோழிதிருடக் கூலிக்கு ஆட்பிடித்தகுலம்,
முட்டைபாவம், முருக்கங்காய் மச்சம்,
மட்டத்தேள் கூட மரியாதைக்குரிய உயிரென
பயத்துக்குப் பவ்வியமாகக் காரணங்களைக் கூறி
வியர்த்துக் கிடந்த தேசம்தான் இன்று
விழித்துக்கொண்டது.
எமக்குள்ளே ஆயிரம் பிரிவுகள்,
எமக்குள்ளே ஆயிரம் பேதங்கள்,
ஒன்றாகமுடியாதவாறு உருவகித்த கற்பிதங்கள்.
இன்று எல்லாமே இற்று விழுந்தன.
காலத்துக்கொவ்வாதன கரையொதுங்க
நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பாய்கிறது

இன்றுவரை நீளும் சமருக்கு
இவர்தான் பதியம் போட்டவர்.
இவருக்கு மூக்குமட்டும் மூன்றடி.
காதுகளைக் கணக்கிலெடுக்க வில்லை.
பின்னர் பிரேமதாசா.
இன்று சந்திரிகா.
கையேந்திய போதே தந்திருந்தால்
ஈழத்தமிழன் இன்றும் நன்றியுடனிருந்திருப்பான்.
எல்லோருக்கும் தமிழனென்றால் இளக்காரம்.
சிங்களத்துத் திமிர்,
ஆளுவோரென்ற மமதை.
தமிழன் சாக்கடை அள்ளவந்தோனென்ற எகத்தாளம்.
பயந்தவன் தமிழனெனும் படிமம்.
கொழுப்புப் பிடித்து கொழும்பு குதிக்கத் தொடங்கியதும்
எமக்குள்ளும் விழிப்புக்கொண்டது விடுதலையுணர்வு.
நாலுபேருடன் வந்து உன்னாலன்று
யாழ்ப்பாணத்தையே எரித்துப் போக முடிந்தது.
நாற்பதினாயிரமாய் வந்து வன்னியில் நிற்கிறாய்.
உள்ளேவர உன்னால் முடியவில்லையே.
இன்றுதான் தமிழர் தமிழராயினர்
இன்றுதான் தமிழர் புலிகளாயினர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்



# இருக்கின்றாய்
# ரிக்கின்றாய்

நேற்றுவரை நிவாரண விரிசையிலும்
காட்டுமரத்தின் கீழும்
போட்டது போட்டபடி கிடந்த தமிழனை
போருக்கெழவைத்த புண்ணியவதி.
அடுப்பிலும் நெருப்பிலும் வெந்து
உரலும் உலக்கையுமாக இருந்த தமிழிச்சியை
ஆயுதமேந்தச் செய்த அம்மை.
வேட்டைத்துவக்குக்கே வெருண்டடித்த தமிழரை
"ஏகே நாற்பத்தேழு" ஏந்தவைத்த பெருமாட்டி.
ஆயிரமாயிரம் வருடங்களுக்குப் பின்னர்
மீண்டுமொரு குருசேத்திரம்.
இழந்ததை மீட்கும் யுத்தம்.
தர்மப்போருக்கு வன்னி தயாராகிவிட்டது.
ஊரெங்கும் உலைமுகங்கள் மூட்டி
அங்கெல்லாம் ஆயுதங்களின் அணிவகுப்பு.
வேறு வடிவில், வேறு பெயரில் தருமன்.
வேறு வடிவிலும், வேறு பெயரிலும்
பெரு வாரியான தளகர்த்தர்கள்.
மகாரதர்களுக்குப் பின்னே மக்கள் சேனை.

அஸ்திரப்பயிற்சி முடிந்ததும் அணிவகுப்பு.
காதல் மொழிகள் வழக்கொழிந்து போக
களமொழிகளே இப்போது காதில் விழுகிறது.
கணவன் மனைவியின் கட்டில் மொழியேகூட
போரின் மொழியானது எம் பூமியில்.
சாதி மறந்தார், மதம் மறந்தார்.
சாத்திரம் கோத்திரம் யாவும் மறந்தார்.
ஆணா? பெண்ணா? எல்லோரும் ஒரு நிறை.
ஏழையா? பணக்காரனா?
எல்லோரும் ஒரு விலை.
அலையடிக்கும் கடலாய் ஆர்ப்பரிக்கிறது
தமிழர் படை.
"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ தென்பது இழுக்கு".
வன்னிக்கானது இந்த வள்ளுவவாக்கு.
பீறிட்டெழும் பூகம்பவாசலென்றறியாது
எரிமலைச் சிகரமேறி எக்காள மிட்டபடி
அகலக்கால் பரத்தி நிற்கிறது ஆணவம்.
சுற்றி வேலியிட்டேன் என்ற இறுமாப்பில்
துருதுருக்கிறது ஆதிக்கம்.
விரைவில்
வெடித்துப் பிளம்பாகி வெளிவரும் நெருப்புக் குழம்பு.
இடியும் மழையுமாகப் பொழியுமெம் மேகம்.
வாரியடித்துப் போகும் வல்லமை வெள்ளத்தில்
பாறிச்சரிந்து விழும் பசைச்சேனை.
"மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு"
பாடி நகரும் புலிச்சேனை.
காலிற் துகள்படும் சருகாய்
மிதிபட்டழியும் முள்வேலி.

www.tamilarangam.net

**சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட கிளிநொச்சியில் மீட்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் எலும்புக்கூடுகளும் மதிவெடிகளும் பயங்கரத்தின் விஸ்வரூபத்தைக் காட்டுகின்றன. 1996 ஜூலையிலிருந்து 1998 செப்ரெம்பர் வரையான 26 மாதங்களில் இலட்சக்கணக்கான கண்ணிவெடி களையும் மிதிவெடிகளையும் சிங்கள இராணுவம் விதைத்திருக்கிறது. இக்காலப் பகுதியில் படையினரால் பிடிக்கப்பட்டவர்கள் 234 பேர். 184 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். இவர்களில் இதுவரையில் 60க்கும் மேற்பட்டோர் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டுள்ளனர்.**



# ஒரு நக

தி. தவபாலன் - கருணாகரன்

நீங்கள் கிளிநொச்சிக் காவல்துறைப் பணிமனையில் குவிக் கப்பட்டிருக்கின்ற எலும்புக்கூடுகளைப் பார்த்தீர்களென்றால் அதிர்ந்து போய்விடுவீர்கள். எவ்வளவு மனிதர்கள் வெறுமனே எலும்புக்கூடுகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்ன? இவ்வளவு மனிதர்களா இப்படியானார்கள் என்று திகைத்து விடுகிறீர்களல்லவா!

யாரிவர்கள்? எங்களுடைய மனிதர்களுக்கு என்ன நடந்தது? ஏனிப்படி நிகழ்ந்தது? இவையெல்லாம் எங்கேயிருந்து கொண்டு வரப்பட்டிருக்கின்றன? என்றா கேட்கிறீர்கள்.

இவர்கள் கொல்லப்பட்டவர்கள். இரக்கமின்றி, மிருகத்தனமாக வதைக்கப்பட்டபின், மலக்கிடங்குகளிலும் கிணறுகளிலும் உயிருடன் போடப்பட்டு இறந்தவர்கள். அனாதைகளாகச் சுடப்பட்டு பற்றைகளில் எறியப்பட்டவர்கள். பூட்டப்பட்ட அறைகளில் கட்டப்பட்ட கைகளுட னும், கால்களுடனும் சாகடிக்கப்பட்டவர்கள்.

இதற்கெல்லாம் ஒரே காரணம் இவர்கள் தமிழர் என்பதுதான். தமிழர் என்றால் இப்படியா செய்வது?

இப்படித்தானே எப்போதும் நடந்துவருகின்றது? இப்போது கிளி நொச்சியில் இது நிகழ்ந்திருக்கிறது.

உங்களுக்கு ஞாபகமிருக்கும்! முன்பு கிளிநொச்சியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருந்தபோது பல சந்தர்ப்பங்களில் பலர் காணாமற்போயிருந்தார்கள்.

இராணுவம் நகரை ஆக்கிரமித்த வேளையில் எல்லோருமே வெளியேறியிருந்தார்கள். ஆனாலும் துரத்தப்பட்ட மக்கள் என்ன செய்வார்கள்? எங்கே செல்வார்கள்?

அலைதல் பெருந்துயரம்; மாபெருந்துயரம். அகதி வாழ்வின் அலைவு மிகக்கொடியது. ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட மக்கள், இரா ணுவ வலயத்துக்கு அப்பாலான சிறு கிராமங்களில் அழுத்தும் பெருஞ்சுமையோடு வாழமுடியாமல் தவித்தனர்.

அகதி மக்கள் வேறு வழியேதுமின்றி, தாங்கள் குடியிருந்த தங்களுடைய வீடுகளைப் பார்த்துவரச் சென்றிருந்தார்கள். பசியால் துவண்டிருக்கும் தங்கள் பிள்ளைகளின் துக்கத்தைப் பார்க்கத் திராணியற்று, தங்களின் வளவுகளிலிருந்த, தாங்கள் வளர்த்த மரங் களிலிருந்து எதையாவது எடுத்து வரலாம் என்று போயிருந்தார்கள். ஒரு குடிசையைத்தானும் போடமுடியாதபோது தாங்களிருந்த வீட்டிலிருந்து நாலு தடியைக்கொண்டு வந்து எதையாவது செய்து விடலாம் என்ற நம்பிக்கையோடு சென்றிருந்தார்கள்.

அவர்களுக்குத் தெரியும், தாங்கள் போகுமிடம் மரணத்தின் பொறிகள் நிறைந்த மையமென்றும், அது பேயுலாவும் பிரதேசமென்றும் அவர்கள் அறிவார்கள்.

ஆனாலும் இந்த மனிதருக்கு வேறுவழிகள் ஏதுமிருக்கவில்லை, போனார்கள்.

போனவர்களில் பலர் மீளவில்லை.

கிளிநொச்சியை அழித்துவிட்டு

ஊர்மக்களைத் துரத்திவிட்டு

நகரத்தையே ஆக்கிரமித்திருந்த சிங்கள இராணுவம் இவர்களைப் பிடித்தது.

இராணுவ வலயத்திற்கு அப்பால், உயிரைக் கையில் பிடித்தபடி, தீராத பீதியுடன், பசித்தவயிற்றுடன், வீட்டில் எதிர்பார்த்த படியிருக்கும் குழந்தைகளின் முகத்தை நெஞ்சிலே சுமந்தபடி, வீட்டின் வறுமையை நினைத்தபடி போனவர்கள்...

மிரண்ட விழிகளுடன் நாலாதிசையும் பார்த்தபடி, தங்கள் வீட்டில் கால்வைக்கவே பயப்படும் விதியை நொந்தபடி, எல்லாத் தெய்வங்களையும் நேர்ந்தபடி சென்றவர்கள்...

கடவுளே!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிடிக்கப்பட்டனர். சகலரும் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களை துப்பாக்கியால் சுட்டனர் சிங்களச் சிங்கங்கள். சுட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். இதில் மயிலாண்டி அந்த இடத்திலேயே மாண்டார். ஏனையோர் உயிர்தப்பினர்.

உருத்திரபுரத்தில் இருவரைப் பிடித்து துப்பாக்கியால் சுட்டு மலக்குழி ஒன்றினுள் படையினர் போட்டனர். இதில் கனகலிங்கம் திருச்செல்வம் மலக்குழியிலேயே மாண்டார். இவருடன் போடப்பட்ட மற்றையவர் மயக்க நிலையிலிருந்து மீண்டு மலக்குழிமூடியை திறந்து தப்பிவந்தார். (இது உண்மைச்சம்பவம் மிகையல்ல. அக்கராயன் மருத்துவமனையில் இவரை நாம் சந்தித்திருந்தோம்) உருத்திரபுரம் டி-7 பகுதியில் உபதபாலதிபர் ஒருவருடன் மூவரைப்பிடித்து வீதி ஒன்றினுள் வைத்துப் படையினர் தாக்கி விசாரித்தனர். தபாலதிபர் சிங்களம் தெரிந்தவர். தான் அரச உத்தியோகஸ்தர் எனக்கூறினார். கடும் விசாரணையின் பின் அவர் விடுவிக்கப்பட்டார். திரும்பிப்பாராமல் செல்ல அவர் பணிக்கப்பட்டார். புதுமுறிப்பு அணையில் அவர் ஏற உருத்திரபுரத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. ஏனைய இருவரும் படையினரால் கொல்லப்பட்ட ஒலி அது. அவர்கள் கிருஸ்ணமூர்த்தி, சண்முகசுந்தரம் என்பவர்களாவர். புதுமுறிப்புக்குளத்திற்கும் மாவீரர் துயிலுமில்லத்துக்கும் இடையே சிறாருக்கு அடைக்கலம் தரும் தென்னிந்திய திருச்சபையின் பகல்ப்பராமரிப்பு நிலையம் இருந்தது. அப்பொழுது அது இயங்காதபோதும் அதனைப் பார்க்கவென (திருச்சபைபோதகர்) இன்னாசி அருள்பாலன் தனது உதவியாளர் மிரிண்டா யோசப், யோசப் சுரேந்திரன் ஆகியோருடன் சென்றார். சென்றவர்கள்

# ...ரத்தின் கதை

## பயங்கரங்களின் ஆழ்கிடங்காக மாற்றப்பட்டிருக்கும்
## கிளிநொச்சியின் இன்றைய நிலவரம்

என்ன கொடுமை?

ஏழை மனிதரை, சொந்த நிலத்தின் உரித்தாளரை, பசித்த வயிற்றுடன் வந்தவரை ஏன் இந்தப்பாதகம் சூழ்ந்திருக்கியது?

இதுதான் இனவாதத்தின் பரிசு! எப்போதும் சிங்களப் பேரினவாதம் இப்படித்தான் தமிழருக்குத் தீர்ப்பளிக்கிறது.

கிளிநொச்சியில், அரணுக்குவெளியே ரோந்தில் ஈடுபட்ட சிங்களப்படைகள் இம்மக்களைப் பிடித்துச்சென்று வதைத்தனர்; படுகொலை செய்தனர்; தம்முகாம்களில் அடைத்தனர். 1996முதல் 1998 வரை படையினரின் பிடியுள் சிக்கியவர்கள் இருநூற்று முப்பத்திநான்கு பேர். இவர்களில் எட்டுப்பேர் அந்த இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டார்கள். கிருஸ்ணபுரப்பகுதியில் ஆண்டியப்பன் மயிலாண்டி தன் அயலாருடனும் சிறு மகளுடனும் தனது வளவுக்குச் சென்றபோது படையினரால் பிடிக்கப்பட்டார். அயலாரும் மீளவில்லை. அவர்களின் உடல்கள் படையினரால் குதறிக்கொல்லப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இவர்கள் தவிர, தம் உயிர்வாழ்வுக்காக தம் கிராமங்களுக்குச் சென்ற 184 பேர் படையினரால் பிடிக்கப்பட்டு காணாமல் போயுள்ளனர். அன்றாட சீவியத்துக்காக சென்ற அந்த ஏழைகளில் இருவர் பெண்கள். இறுதிவரை இவர்கள் காணாமல் போனவர்களாகவே இருக்க, 1998இல் கிளி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நொச்சிநகர் விடுதலைப் புலிகளால் மீட்கப் பட்டதன் பின்னர் பரந்தனும், ஆனையிறவும் மீட்கப்பட காணாமல்போனோர் எலும்புக் கூடுகளாக கைகள் கட்டப்பட்ட நிலையிலும், எலும்புகள் சிதையுண்டும், மலக்குழியிலி ருந்தும், கிணறுகளிலிருந்தும், ஆற்றுப்படுகை களிலும் கட்டிட இடிபாடுகளில் இருந்தும் மீட்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். இதுவரையில் மீட்ட எலும்புக்கூடுகள் அறு பதை எட்டுகின்றன. சந்திரிகாவின் ஆட்சி தந்த பரிசின் ஆதாரமாக 184 மக்களும் எலும்புக்கூடுகளாக மீட்கப்படும் அவலம் நிகழ்ந்தேறுகின்றது.

கணாமல்போனவர்கள் எலும்புக்கூடு களாக மீட்கப்படுகையில் அவற்றின் உற வினர்களின் மனநிலை எப்படியிருக்கும்? "இதுதான் மகளே உன்னுடைய அப்பா" என்று கதறியபடி ஒரு இளந்தாய் தன் மெலிந்த அந்தச் சிறிய பிள்ளைக்கு ஒரு எலும்புக்கூட்டைக் காட்டியபடி கதறிக் கொண்டிருந்தாள்.

அந்தத்தந்தை அவர்களுடைய வீட் டில் தேங்காய் பிடுங்கிவரச் சென்றிருந்தான். இப்போது இப்படி எலும்புக்கூடாக மிஞ்சி யிருக்கிறான். அவன் இறுதியாக அணிந்து சென்ற ஆடையின் எஞ்சிய துண்டுகளிலிருந்து அவன் அடையாளங் காணப்பட்டான்.

இப்படி இன்னும் எத்தனையோ கதை கள். அடையாளம் கண்டும் காணாமலும் துயரத்தைப் பெருக்கியபடி கோபத்தை எங்கள் நெஞ்சில் மூட்டியபடி எத்தனை எத்தனையோ மனித எச்சங்கள்... மனிதக் கூடுகள்.

எங்களின் மனிதர்கள் எப்படியெல்லாம் அழிக்கப்பட்டார்கள்.

கொக்கட்டிச்சோலையில் எரிக்கப்பட்டு, குமுதினிப்படகில் வெட்டிச் சரிக்கப்பட்டு, வல்வெட்டித்துறையில் குண்டு வைத்துச் சிதறடிக்கப்பட்டு, ஒதியமலையில் சுட்டெறி யப்பட்டு, கிளாலியிலும், பூவரசங்குளத் திலும் வழிமறித்துச் சுடப்பட்டு, நவாலியி லும் நாகர்கோவிலிலும் குண்டுவீசிச் சித றடிக்கப்பட்டு, செம்மணியில் நூற்றுக் கணக்கில் உயிருடன் புதைக்கப்பட்டு, சுதந் திரபுரத்திலும் மந்துவிலிலும் மக்களின் வீடுகளின் மீது தாக்குதல் தொடுக்கப் பட்டு... இப்படி இப்படி எத்தனை கொலைகள்...

கொலைகளிலும் எத்தனை வகைகள்? எத்தனை முறைகள்? எத்தனை தரங்கள்?

கொலை செய்பவன் யார்? கொலை காரன் தானே! சந்திரிகாவின் ஆட்சிக் காலத் தில் மட்டும் எத்தனை கொலைகள் சிங்களப் படையால் எம் மண்ணில் நிகழ்த்தப்பட்டி ருக்கின்றன? எத்தனை உயிர்கள் பறிக்கப் பட்டிருக்கின்றன?

ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்களே! நூற்றுக்கணக் கில் காணாமல் போயுள்ளார்களே! சந்திரிகா யார்? கொலை வழிமுறையை தொடரும் சாத்தானின் தோழிதானே!

ருவாண்டா, கம்போடியா(கம்பூச்சியா), பொஸ்னியா, சேர்பியா போன்ற நாடுகளில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளைக் கண்டு உல கம் அதிர்ந்தது; கண்ணீர்விட்டது. அறிக்கைக ளையும் கண்டனங்களையும் விட்டு மனிதாபி மானத்தை நிலைநாட்டிக் கொண்டது.



ஓயாத அலைகள்–2 இல் மீட்கப்பட்ட கிளிநொச்சி

"எலும்புக்கூடுகள் பற்றிய தகவல் கிடைத்தவுடன் காவல்துறையினருடன் ஸ்தலத்துக்கு விரைவோம். இதுவரை யில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் சகல வற்றின்போதும் உடனிருந்திருக்கிறேன். மலக்குழிகள், கிணறுகள், ஆற்றுப்படுக் கைகளில் என்றெல்லாம் இந்த மனிதர் கள் கொல்லப்பட்டுப் போடப்பட்டுள்ளார் கள். இரண்டு வருடங்களுக்குள் இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதால் இவற்றில் பலவற்றை அடையாளம் காணக் கூடயதாக இருக்கிறது. எலும்புக்கூடு களில் மிஞ்சியிருந்த உடைகள், உள் ளாடைகள், கழுத்தில் கட்டப்பட்டிருந்த குருசு, வெள்ளிமோதிரம், அவர்கள் வைத் திருந்த வெற்றிலைப்பை, அதற்குள் சுண் ணாம்பு வைத்திருந்த சித்தாலேம் குப்பி போன்றவற்றை ஆதாரமாக வைத்து உற வினர்கள் அடையாளம் கண்டார்கள்.

இங்கே ஒரு மறக்கமுடியாத அனுப வத்தைக் கூறவேண்டும். தகவல் கிடைத் தவுடன் ஒரு இடத்திற்குப்போன போது மூன்று எலும்புக்கூடுகள் ஒரு வேலியில் தொங்கியபடி கிடக்கக்கண்டோம். இரா ணுவத்தின் முன்னரண் பகுதியில் மறைந் திருந்த இராணுவம் அயற்கிராமங்க ளிலுள்ள தங்களுடைய வீடுகளில் எதை யாவது எடுத்துச்செல்லலாம் என்று வந்த வர்களை கண்டு சுட்டபோது அவர்கள் தப்புவதற்காக ஓடி வேலியைத்தாண்டு கையில் மரணமடைந்திருக்கிறார்கள். மூன்று எலும்புக்கூடுகளும் இருந்த நிலை அவற்றின் அக்கணநேரத்தின் பரிதவிப்பை அந்தரிப்பை உணர்த்திய காட்சி என்றும் மறக்கமுடியாதது.

ந. கிருஷ்ணகுமார்
"புலிகளின் குரல்" செய்தியாளர்"





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட அஞ்சல் நிலையக் கட்டிடம்.

ஆனால், எங்கள் மண்ணில், இத்தனை அனர்த்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன; இத்தனை கொடுமைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. புதை குழியென்றும், கொலையென்றும், காணாமற் போதல் என்றும் எலும்புக்கூடுகள் என்றும் தொடரும் இந்த வன்வழிமுறைக்கு என்ன பதில்?

உலகம் என்ன சொல்லப்போகிறது? மனிதாபிமானிகள் ஏது செய்யவுள்ளார்கள்? வெறுமனே புல்லும் பூண்டும் முளைத்து எல்லாவற்றையும் மூடிவிடுமா?

கொல்லப்பட்ட இந்த மனிதர்களெல்லாம் யார்? என்ன குற்றமிழைத்தனர் இவர்கள்?

சாதாரண பொதுமக்கள் என்று தெரிந்திருந்தும் இவர்கள் கொல்லப்பட்டார்கள். எந்த ஆயுதத்தையும் இவர்கள் வைத்திருக்கவில்லை. எனவே இராணுவச் சட்டங்களின் படியும் விதிமுறைகளின்படியும் வேண்டுமானால் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம்; வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் நடந்தது என்ன? கொலைதான். கொலையைச் செய்தவர் யார்?

சிறீலங்கா அரசுதான்.

சர்வதேசச் சட்ட விதிமுறைகளில் இந்தக் கொலைகளுக்கு என்ன பதில்? இவை எந்த விதிகளிலும் சட்டங்களிலும் அங்கீகரிக்கப்படுகின்றன?

சமாதானம் பற்றியும் தீர்வுப்பொதிகள் பற்றியும் பேசிக்கொண்டிருப்பவர்களின் மேசையில் இந்த எலும்புக்கூடுகளையும், அவை தந்த கண்ணீரையும் வைப்போம்.

அதன் பின்பு பேசட்டும், தங்கள் கண்ணியத்தைப் பற்றியும் அவர்கள் சமாதானத்தைப் பற்றியும்.

யாராவது வாய்திறப்பார்களா?

உலகம் இதற்கு எந்தப்பதிலும் தரப்போவதில்லை. பதிலற்ற கேள்விகளால் இன்று அது கட்டுண்டு வருகிறது.

எனவே, எவரும் பதிலளிக்கப்போவதில்லை.

கிளிநொச்சியில் தமிழர்கள் எலும்புக்கூடுகள் ஆக்கப்பட்ட கதை ஒரு பக்கத்தில்




"மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பதற்காகவும் மாவட்ட வைத்தியசாலைக்கு வரும். அநேகமாக நடுத்தர வயது ஆண்களுடையவையே அதிகமாக இருக்கின்றன. தலையில் தாக்கப்பட்ட காயம் உட்பட ஆயுதங்களால் தாக்கப்பட்ட பிற உடற்காயங்கள் வரையும் அவற்றில் காணப்படுகின்றன. சிலவற்றை உறவினர்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். அனேகமாக எல்லோரும் வறியமக்களே. தங்களின் ஏழ்மை நிலை காரணமாக தங்களின் வீடுகளுக்குச் சென்று பொருட்களையும் பயன்களையும் பெற்றுவரச் சென்றவர்கள்தான் இப்படி ஆகியிருக்கிறார்கள். சில எலும்புக்கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் இருந்தன. இவற்றை நாம் சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு கொண்டுவரவேண்டும். அதற்கான வழி முறைகளுக்கு நாம் முயற்சிக்கவேண்டும்.

Dr.ச. விக்னேஸ்வரன்
மாவட்ட வைத்திய அதிகாரி
கிளிநொச்சி."

"பொதுமக்களின் மூலம் தகவல் கிடைத்தவுடன் நாம் அந்த இடத்துக்குச்செல்வோம். இதுவரையில் 60 வரையிலான எலும்புக்கூடுகளை மீட்டுள்ளோம். சில சிதைந்த நிலையில் மீட்கப்பட்டவை. மலக்குழிகளில், கிணறுகளில், ஆற்றுப் பக்கங்களில் வளவுகளில் புதைக்கப்பட்டு என இவை கிடந்திருக்கின்றன. மலக்குழியினுள் ஆட்களைப்போட்டுவிட்டு "கிரனைட்டை" வெடிக்கப்போட்டிருக்கிறார்கள். அதனால் சில சிதைந்து போயுள்ளன. ஒரு குழியில் மட்டும் ஒன்பது எலும்புக்கூடுகளை ஒன்றாக மீட்டோம். மீடகப்படும் எலும்புக்கூடுகளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புவோம். அங்கே பரிசோதனை முடிந்தபின் பொதுமக்களால் அடையாளம் கண்டபின் அவற்றையும் காணாதவற்றையும் குறிப்பிட்ட நாளின் பிறகு எங்கள் பணிமனையில் வைத்திருக்கின்றோம். அங்கும் வந்து அடையாளம் காணலாம். அடையாளம் கண்டவர்கள் படும்துயரத்தை விபரிக்கமுடியாது. அந்தளவுக்கு அது சகித்துக் கொள்ள முடியாத மாபெரும் துயரமாக இருக்கிறது.

ப. அருள்ஜோதீஸ்வரன்
காவல்துறை பரிசோதகர்
தமிழீழ காவல்துறை"



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்க, மறுபக்கத்தில் அந்த நகரம் முழுவதும் இராணுவம் விதைத்துவிட்டிருக்கின்ற கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் பயங்கரங்களை வளர்த்துச் செல்கின்றது.

கிளிநொச்சி ஒரு விவசாய நிலப்பகுதி, இங்கே பயிர்களுக்காகத்தான் விதையை விதைப்பார்கள். ஆனால் உயிர்களுக்காக விதைக்கப்பட்டிருக்கிறது கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும். சிறிலங்கா அரசு தன்னுடைய இராணுவத்தைக் கொண்டு இந்த விதைப்பைச் செய்திருக்கிறது.

"போர் நடக்கும்போதையைவிட அதன் பின்னரான உயிரழிவு பன்மடங்காகும்" என்பது நவீன போர்மொழி. இது கிளிநொச்சியில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

சிங்கள அரசின் திட்டமிட்ட செயலாக வன்னியின் உணவு உற்பத்தி ஆதாரமான கிளிநொச்சியை அழித்து மக்களை அகதிகளாக்கியும் கொன்றொழித்தும்விட்டு இனியும் பாரிய அழிவை ஏற்படுத்தும் முறைகளை செயற்படுத்திவிட்டுள்ளன சிங்களப்படைகள்.

கிளிநொச்சிநகர் படையினரால் வெடிபொருள்மையமாக்கப்பட்டுள்ளது. முன்னரண் பகுதிகள் மட்டுமல்லாது மக்கள் வாழ் வீடுகள், பயன்தருமரங்களின்கீழ் எங்கணும் வெடிபொருட்கள் வெடிக்கும் நிலையில் படையினரால் வைத்துச் செல்லப்பட்டுள்ளன. சராசரியாக மீற்றருக்கு மூன்று மிதிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன.(அனைத்தும் பாகிஸ்தான் தயாரிப்பு) மீற்றருக்கு ஒரு 120mm மோட்டார் எறிகணை 3 மிதிவெடிகளுடன் அதிர்வு கடத்திகள் மூலம் இணைத்து வைக்கப்பட்டுள்ளன. மிதிவெடியில் கால்வைப்பவர் உயிரழிய வேண்டும் என்பது இதன் நோக்கம். 120mm மோட்டார் எறிகணை, 81mm எறிகணை, 60mm எறிகணை, வானிலிருந்து தாக்கப் பயன்படுத்தும் றொக்கட் எறிகணை, பிளாஸ்டிக் கலன்களில் வெடிகுண்டுகள், கைக்குண்டுகள், கிளைமோர்கள், கண்ணிவெடிகள் என கிளிநொச்சி முதல் பரந்தன் வரையான குறுகிய பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன. பொறிவெடிகள், மிதிவெடிகள் மூலம் ஒரு மனிதனை கொல்லத்தக்கதாக கிளைமோர்கள் வாகனக் கண்ணிவெடிகள் கூட படையினரால் பொருத்தப்பட்டுள்ளன. 40mm எறிகணைகள், கைக்குண்டுகள், அழகிய பிளாஸ்டிக் டப்பாக்களில் மக்களைக் கவரக்கூடிய வகையில் வெடிக்கும் நிலையில் போடப்பட்டுள்ளன. 1998இன் பின் இவற்றில் சிக்கி 40ற்கும் அதிகமான மக்கள் தம்கால்களை இழந்துள்ளனர். 30பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இப்போது வெண்புறாவின் மிதிவெடி அகற்றப் பயிற்சிபெற்ற எல்லைப்படைவீரர்கள் மிகக்குறுகிய காலத்தில் மட்டும் 45 ஆயிரத்துக்கும் அதிகமான வெடிபொருட்களை அகற்றியுள்ளார்கள்.

உலகில் மிதிவெடிகள், மற்றும் வெடிபொருட்களால் மக்கள் அழிவுக்குட்படும் இடங்களில் கிளிநொச்சி முதன்மையான இடத்தைப்பெறுகின்றது. சிங்கள அரசின் நீண்டகால நோக்கிலான இலக்கு கிளிநொச்சியை சிங்களப் படைகள் ஆக்கிரமித்தபோதும் ஆக்கிரமித்த பின்னும் அதனை படைகளிடமிருந்து மீட்ட பின்னுமாக நீள்கின்றது.



மீட்கப்பட்ட கிளிநொச்சிப் பகுதியில் மலசலகூடக் குழியொன்றில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள்

சிங்கள அரசின் தமிழ்மக்கள் மீதான கொடூரமுகத்தின் சாயல், அழிக்கப்பட்ட கிளிநொச்சிநகரில் தமிழர்களின் எலும்புக்கூடுகளாகவும் சிதையுண்ட நகர அமைப்பாலும் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களாலும் மிக வெளிப்படையாகவே தெரிகின்றது.

மீட்கப்படும் நகரங்கள் பயங்கரங்களின் ஆழ்கிடங்காக இருக்கின்றன. சிதைவுகளும் அழிவுகளும் புதைக்கப்பட்ட வெடிபொருட்களுமாக எம் நகரங்களை மாற்றிவிட்டிருக்கும் சிங்கள அரசு இனியும் இதைத்தான் செய்யப் போகிறது.

நாம் இதனை அனுமதிக்கலாமா?

"அரணுக்கு வெளியே இருந்த கிராமங்கள் உருத்திரபுரம், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், விவேகானந்தபுரம், செல்வாநகர், ஆனந்தபுரம், திருவையாறு, கனகாம்பிகைக்குளம், ஊத்துப்புலம், சிவநகர், புதுமுறிப்பு. அன்றாடம் கூலித் தொழில் செய்து வாழ்நாளை ஓட்டிய மக்கள் கூலித்தொழில் கிடைக்காது, இடம் பெயர்ந்தோர் நிவாரணமும் கிடைக்காது (சத்ஜெய நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு அரசு நிவாரணத்தை மறுத்தது) ஒரு நேர உணவைக்கூட உண்ண முடியாது பட்டினியால் வாடிய மக்களின் குடும்பத்தலைவர்களும், குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களும், குழந்தைகளும்கூட தமது வளவின் பயன்களை பெறச்சென்றனர். அவர்களுக்கே இக்கதி நேர்ந்தது."

## "எலும்புக்கூடுகளின் நகரம்

அடையாளம் காண்பதற்கு உக்கிப்போன
ஒரு துண்டு துணி இன்னமும்
அவர்களுடன் ஒட்டிக்கிடக்கிறது.

மலகூடக் குழிகளிலும் கிணறுகளிலும்
இருந்து வெளியே வந்தவர்களை
அடையாளம் காண்ப தென்பது அவ்வளவு
கடினமான பணியல்ல.

காணாமல் போனோரின் நீளமான
பட்டியல்கள் கைவசம் உண்டு.

கைகளை பின்னே இறுகக் கட்டி உங்கள்
விழிகளும், மொழிகளும் கெஞ்சிய
வார்த்தைகளை புறந்தள்ளி கதறக் கதற
உங்களைக் கொன்றனர்.

காற்றும், சூரியனும் மௌனமாய்
பார்த்திருந்தன. இவர்கள் துயரத்தில்
கண்ணீர் துளிர்க்காத அவர்கள்
தலைகளில் இடிவிழட்டும்.

எலும்புக் கூடுகளை அடையாளம்
கண்டோம் கைகளைக் கட்டிய
வயர்களை, துணிகளை பத்திரப்
படுத்திக்கொண்டோம்.

எங்கள் இதயங்களின் கனல்களை இவை
அணையாது பார்த்துக் கொள்ளட்டும்.

அன்ரன் அன்பழகன் "

1996–98 வரை கிளிநொச்சியில்
சிறீலங்காப் படையினரால்
பிடிக்கப்பட்டவர்கள் மொத்தம் – 234

அந்த இடத்திலேயே
கொல்லப்பட்டவர்கள் – 08

முகாம்களில்
கண்டுபிடிக்கப்பட்டவர்கள் – 42

காணாமல் போனவர்கள் – 184



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தலைவிதி மாற்றி
தாயகம் நோக்கிய பயணத்தில்
பெண்கள் வீரியம் கண்டு
விழிகள் விழித்தார்
பேதமை பெண்மையின்
இயல்பெனச் சொன்னவர்
வெட்கத்தில் இங்கே
தலைகள் குனிந்தார்.
நேற்றெம் எல்லைகள்,
கவர்ந்த பகைவனும்
கடல்வழி தாண்டி
பூமாலை ஏந்தி
வந்த எதிரியும்
கலங்கிட பெண்மை
வீறு கொண்டெழுந்தது.
வென்று பார் நீ என
சொல்லி எரித்தது.
எங்களின் தேசம்
எங்களுக்கானதே
எவன் அதை தொடினும்
எரிமலை வெடிக்கும்
புயலோடு பூகம்ப
அழிவுகள் செய்யும்

# ஆற்றலின் வடிவம் அண்ணன் அவன் வளர்ப்பினில் அனலாய் தங்கை.

அவலங்கள் சூழ்ந்ததோர் வாழ்வு
முடிவிலியாகுமோ என்றஞ்சி ஏங்கி
நொந்தவர் முன்னே – வீரம்
கொள் எனச் சொன்னதோர் வேங்கை.
பெண்மையில் மென்மையை
மட்டுமே கண்டவர் – அவள்
வன்மையின் வடிவம்
என்பதுணர்ந்தார்.
ஒன்றாகி பத்தாகி நூறாகி
பெண்கள் படையான போது
ஆளுமை வீச்சின் அர்த்தம் புரிந்தார்
ஒரு நூலோடையாய்
ஓடிய பெண்மை
காட்டாறாகி பாய்ந்தது கண்டார்.
தடைகள் தாண்டி
என்பதே பெண்மையின்
கூவலாய் ஒலித்தது.
வேரொடு பகை விழும் நினைவில்
முன்னணியாகி மாலதி நடந்தாள்
முதல் விதையாகி முன்னுரையானாள்.
இவள் வழி இங்கே
படையணி நகருது
பகைவனின் பாசறை
இருப்பிடம் மீதெலாம்
எங்களின் செங்கொடி
விண்தொட நிமிருது.

முதற் பெண் மாவீரர் 2ம் லெப்.மாலதி
நினைவாக [10.10.1987]

-சுதந்திரப்பறவை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மண் மீட்டே
# தாயகம் ச



இலங்கைத்தீவு பௌத்த சிங்கள நாடு. இது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம். ஏனையவர்கள் பிற்காலத்தில் ஆக்கிரமிப்பு நோக்கோடும் கூலிகளாகவும் வந்த வந்தேறுகுடிகள். "கள்ளத் தோணிகள்" என்ற மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு கருத்துத் தளத்தை நீண்ட காலத்திற்கு முன்னே சிங்களப் பேரினவாதிகள் கட்டியெழுப்பியிருந்தார்கள். அதன் அடிப்படையிலேயே இலங்கையின் வரலாறும் எழுதப்பட்டுப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இதுவரை எழுதப்பட்டு வந்தது.

தேரவாத பௌத்தத்திற்குப் புகழ்பாட என கி.பி. ஆரம்ப நூற்றாண்டளவில் பாளி மொழியில் புனைந்துரைக்கப்பட்ட புழுகுப் புராணமே மகாவம்சமாகும். அந்த மகாவம்சத்தை வரலாற்று நூலாகக் கொள்வது தவறு. அது பல வரலாற்று நிகழ்வுகளை மறைத்தும் திரித்தும் உள்ளது. அதில் பல முரண்பாடுகளும் உள்ளன. அந்த முரண்பாடுகளே சிங்களப் பேரினவாதிகள் கட்டயெழுப்பி வைத்திருக்கும் கருதுகோள்களைச் சிதறடிக்கப் போதுமானவையாகும்.

விஜயன்தான் இலங்கையில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் என்ற கருத்து மகாவம்சத்தாலேயே மறுக்கப்படுகிறது. விஜயன் பிறப்பதற்கு முன்பே புத்தரின் இரண்டாவது வருகையின்போது நாகதீபத்தில் புத்தருக்கு நிழற் குடையாக ராஜாயதன விருட்சத்தைப் பிடித்துக் கொண்டு வந்த சமிதிசுமணன் என்பவன் அதற்கு முற்பிறப்பிலேயே நாகதீபத்தில் வாழ்ந்தவன் என்பதை மகாவம்சம் தனது முதலாவது அத்தியாயத்திலேயே எடுத்துக் கூறுகிறது.

அண்மைக்காலத்தில் இலங்கைத்தீவின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது அகப்பட்ட தொல்லியற் சான்றுப் பொருட்களும் கல்லெழுத்துப் பதிவுகளும் பொன்னேடுகளும், மண்ணோடுகளும் மனித எலும்புக்கூடுகளும் மகாவம்சக் கதாநாயகனான விஜயனின் வருகையையும் அவனது குடியேற்றங்கள் பற்றிய செய்திகளையும் பொய்யாக்கிவிடுவதுடன் இலங்கைத்தீவின் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே தமிழர்களின் முன்னோர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதனை மெய்ப்பிக்கும் வலுவான சான்றுகளாகவும் அமைந்துவிட்டன.

எனவே இலங்கைத்தீவு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற சிங்களப் பேரினவாதிகளின் வாதம் முற்றாக அடிபட்டுப் போய்விட்டது. தமிழ் மக்களின் முன்னோடிகளே இலங்கைத்தீவின் தொன்மைக்குடிகள் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. இருந்தபோதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமேலாக இலங்கையின் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களும் தென்மேற்கில் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றனர். தீவின் மையப்பகுதியைக் காலத்திற்குக் காலம் இவர்களுள் வலிமை மிக்கவர்கள் மாறி மாறிக் கைப்பற்றி ஆண்டு வந்திருக்கின்றார்கள்.

1505இல் போர்த்துக்கேயர் இலங்கைத்தீவிலே காலடி எடுத்து வைத்தபோது யாழ்ப்பாணத் தமிழரசு, கோட்டைச் சிங்கள அரசு, கண்டிச் சிங்களஅரசு என மூன்று அரசுகள் இயங்கின. இவற்றில் பழமையானதும் வலுவானதுமாகத் திகழ்ந்தது யாழ்ப்பாணத் தமிழரசுதான்.

யாழ்ப்பாண அரசு கடற்படை, தரைப்படை வலுவோடு உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்திலும் மேலோங்கியிருந்தது பற்றிப் போர்த்துக்கேயர் மற்றும் ஊரோடிகளின் குறிப்புக்களிலிருந்தும் ராஜாவழி போன்ற சிங்கள வரலாற்று நூல்களில் இருந்தும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

அது மட்டுமன்றி இந்த மூன்று அரசுகளின் இறைமை வீழ்ச்சிக்கு அன்றைய சிங்கள அரசுகளே காரணமாக இருந்தன என்பது இன்றைய பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் விழுங்கப்பட முடியாத கசப்பான உண்மையாகும். தமிழர்கள் தமது யாழ்ப்பாண ஆட்சியிறைமையை ஐரோப்பிய நாடுகளிடம் இழந்திருந்தாலும் அதற்கான கால்கோள்களையிட்டது அன்றைய சிங்கள அரசு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ாம்
# ாப்போம்

கள்தான் என்பதும் நினைவில் நிறுத்தப் படவேண்டிய வரலாற்று உண்மைகளாகும்.

பதினாறாம் நூற்றாண்டில் கோட்டை அரசைச் சேர்ந்த சிங்கள இளவரசர்களான புவனேகபாகு றைகம் பண்டார மாயாதுன்னை ஆகிய மூன்று உடன் பிறந்தார்களுக்குள் ஏற்பட்ட அரியணை அவாவும் பிணக்கும் அந்த அரசைச் சரித்தது மட்டுமன்றி போர்த்துக்கேயரிடம் அவர்களது இறைமையை வெல்லவும் வழிவகுத்தது.

யாழ்ப்பாண அரசின் மீது போர்த்துக்கேயர் படையெடுத்தபோது அப்படையில் போர்த்துக்கேயரைவிட மூன்றுமடங்கு கூடுதலானவர்களாக வந்து யாழ்ப்பாண அரசை வீழ்ச்சியுற வைத்தது சிங்களக் கூலிப்படைகளே.

கண்டிச் சிங்கள மன்னர்களின் திருமண உறவால் ஆட்சிப்பொறுப்புத் தமிழரிடம் சென்றாலும் பௌத்த அரசாகவே இருந்து வந்த கண்டியரசில் பிறப்பால் தமிழரான இந்துவான ஒருவரை ஆளவிடக்கூடாது என்ற சிங்கள அமைச்சர்கள் சிலரின் காழ்ப்புணர்வினாற்றான் இயற்கை அரணும் வலிமையும் கொண்டிருந்த கண்டியரசு வீழ்ச்சியுற்றது.

1815இல் கண்டியரசையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிவிட்ட போதிலும் 1833வரை 18 ஆண்டுகள் கோட்டை, யாழ்ப்பாணம், கண்டிப் பகுதிகளைத் தனித்தனியாகவே ஆட்சி செய்து வந்தனர். குறைந்த ஆட்களுடனும் குறைந்த செலவுடனும் எளிதான ஆளுகையை மேற்கொள்ளும் நோக்கில் ஆங்கிலேய ஆளுநரான கோல்புறூக்கால் 1833இல் மூன்று ஆட்சிப்பகுதிகளும் ஒன்றிணைக்கப் பட்டுத் தமிழ் சிங்களப் பகுதிகள் என்று வேறுபாடுகளற்ற வகையில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்று என 5 மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டன.



கண்டி இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் விக்கிரமராசசிங்கன்

ஆயினும் 40 ஆண்டுகாலத்தில் தமிழ் சிங்கள மக்களை ஒரே ஆளுகையின் கீழ் வைத்து ஆள்வதில் ஏற்பட்ட இடர்பாடுகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணைக்கப்பட்டிருந்த சிங்களப் பகுதிகளை நீக்கிப் புதிய வடமத்திய மாகாணத்தை ஆளுநர் வில்லியம் கிரெகரி உருவாக்கினார். அதனால் வடக்கு, கிழக்கு பகுதி 1873இல் தமிழர் பகுதியென்பது தெளிவாக்கப்பட்டது. 1871இல் குடிசன மதிப்பீட்டின்போதுகூட வடகிழக்கு மாகாணங்களில் ஒரு வீத சிங்களவர்கள்தானும் குடியிருக்கவில்லை.

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் ஆளுகைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது 1927ஆம் ஆண்டில் கண்டி மக்களினாலும் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்காவினாலும் வடக்குக்கிழக்குப் பகுதி தனியான தமிழர் பகுதியாகவும் கண்டிச் சிங்களப் பகுதி தனியாகவும் ஆளப்படக்கூடிய சமஷ்டி அமைப்புக்கோரப்பட்டது.

அக்காலத்தில் தமிழர் தலைவர்களாக இருந்த இராமநாதன் போன்ற செல்வச் சீமான்கள் சிங்களவர்களையும் சேர்த்துத் தாம் ஆளலாம் என்ற இறுமாப்பில் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுடன் இருந்தனர்.

ஆயினும் அதன் பின் விழிப்புற்ற சிங்களத் தலைவர்கள் பெரும்பான்மையினர் என்ற வகையில் தமக்குக் கிடைத்திட்ட வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழரையும் சேர்த்துத் தாம் ஆளலாம் என்ற முடிவுக்கு வந்து செயற்படத் தொடங்கியதால் தமிழரின் கிழக்குப் பகுதியில் பெரும்பகுதியியைச் சிங்களக் குடியேற்றங்களினால் நிரப்பித் தம் பகுதியாக்கிவிட்டனர். விழிப்புணர்வோ இன நலனோ அற்ற அன்றைய தன்னலத் தமிழ்த் தலைவர்களினால் ஈழத்தமிழர்களாகிய நாம் எமது உரிமைகளைப் பெறும் வாய்ப்பையும் அன்று தவறவிட்டோம்.

அது மட்டுமன்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த எமது பகுதிகளை அந்நியர் ஆட்சியிலும்கூடத் தமிழ்ப் பகுதிகளாகவே இருந்து வந்த பகுதிகளை விரைவாக இழந்துகொண்டிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலை இன்னும் சிறிது காலம் நீடித்தால் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கென ஓர் அங்குல நிலம்கூட இல்லை எனும் நிலை ஏற்படுவது உறுதி. இருண்ட கண்டத்தின் காப்பிலிகள் என்று இழிவாக அழைக்கப்பட்டு ஏழனம் செய்யப்பட்ட இனத்தவர்கள்கூட விழித்தெழுந்து போராடி உலக நாடுகள் அமைப்பில் இன்று வீற்றிருக்கும்போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையை ஆண்ட ஈழத்தமிழர்கள் அடிமைகளாக அகதிகளாக உணவுக்காகவும் உறைவிடத்துக்காகவும் கையேந்தி உலகெங்கும் அலையவேண்டிய இழிநிலை இன்று ஏற்பட்டுள்ளது.



போர்த்துக்கேய அடிவருடியான கோட்டை மன்னன் தர்மபால

இந்நிலை தொடர்ந்து நீடிக்கக்கூடாது என்பதற்காகவும் எமது இழந்த நிலத்தையும் உரிமைகளையும் மீட்டு உலகில் ஏனைய இனங்களுக்கு நிகராக ஏற்றத்தோடு வாழ வேண்டும் என்பதற்காகவும் பதினாறாயிரம் மாவீரர்களைக் களப்பலி கொடுத்து சொல்லொணாத் துன்ப துயரங்களைச் சுமந்து தமிழீழ விடுதலைப்போராட்டம் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் வீறுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அஞ்சா நெஞ்சத்தோடு அயராது துஞ்சாது போராடும் விடுதலைப் புலிகளின் போராட்டத் திறங்கண்டு உலகமே வியந்து மூக்கில் விரல் வைக்கிறது.

மிகக்குறைந்த ஆள்வலுவோடும் எந்த வெளிநாடொன்றிலிருந்தும் எவ்வகை உதவிகளுமின்றிப் பெருவெற்றிகளைக் குவித்து வரும் எமது தேசியத் தலைவரின் செயற்பாடானது இன்றைய இராணுவ அறிவுலகத்திற்கு வியப்பூட்டும் செயலாகவும் அறிந்து கொள்ள வேண்டிய பாடமாகவும் அமைந்து விட்டது.

வரலாறு எமக்குத்தந்த அந்த வீரத் தலைவனின் வழிகாட்டுதலில் இழந்த எமது மண்ணை மீட்டிட மறைந்த எமது ஆட்சியைப் பெற்றிட விடுதலைப் போரில் எம்மையும் இன்றே இணைத்துக் கொள்வோம். எமது விடுதலையை விரைந்து பெற்றுக்கொள்வோம்.

**-இளங்குமரன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் எழுச்சி நாள்!

2ஆம் லெப். மாலதியின் நினைவுநாளை தமிழீழப் பெண்களின் எழுச்சிநாளாகப் பிரகடனப்படுத்தியிருப்பது முற்றிலும் பொருத்தப்பாடானதொன்றே. பேரினவாதம் மற்றும் வல்லாதிக்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்த தமிழீழப் பெண்ணின் குறிகாட்டியாகவே 2ஆம் லெப். மாலதி உள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு இன்று தெளிவாகவே உறுதிசெய்யப்பட்டதாகியுள்ளது. தேச விடுதலையில் அவர்கள் காட்டும் அர்ப்பணிப்புடன் கூடியதான பங்களிப்பு அவர்கள் தேசவிடுதலை குறித்து விழிப்புணர்வு அடைந்துள்ளனர் என்பதை தெளிவாகவே வெளிக்காட்டுகின்றன.

அதேசமயம், தேசத்தின் விடுதலைக்கு அவர்களின் பங்களிப்பு என்பது எமது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகவும், அங்கீகரிக்கப்பட்டதாகவும் ஆகியுள்ளது. அதாவது பெண்கள் போராட்டத்தில் இணைவதும், போராடு வதும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகிவிட்டது. இவ்விடையத்தில் சமூகக்கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டது.

ஆனால், தேச விடுதலையில் பெண்களின் பங்கு, பணியை ஏற்றுக்கொள்ளும் எமது சமுதாயம் பெண்கள் மீது எமது பண்பாடு, கலாச்சாரம் என்பனவற்றின் மூலம் மேற்கொண்டுள்ள ஒடுக்குமுறையை முற்றாக நீக்குவதற்கும், அவற்றைப் புறந்தள்ளுவதற்கும் தயாராக இருக்கின்றதா எனின் அதற்கு இன்னமும் முழு அளவிலான அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

எமது சமூகத்தில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் பாரபட்சங்கள் என்பன எவையும் இன்னமும் அகற்றப்படவில்லை. எமது சமுதாயத்தில் பெண்களுக்குப் பாதகமாகவுள்ள அம்சங்களான குடும்பங்களில் உணவுப்பங்கீட்டில் இருந்து திருமணம் வரையிலான நடைமுறைகள் இன்னமும் கைவிடப்பட்ட வையாகவோ அன்றி வழக்கொழிந்து போனவையாகவோ இல்லை.

இவற்றில் சில தளர்ச்சிகள் விட்டுக்கொடுப்புக்கள் இருப்பினும் அவை ஒட்டுமொத்தமானதொரு மாற்றமாக இன்னமும் வளர்ச்சி காணவில்லை.

இந்தநிலையில் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் வெற்றிகாணும் வேளையில் சமுதாய விடுதலையையும் பெண்கள் அடைவதற்கு நீண்டதொரு பயணத்தை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். ஆனால் இப்பயணமானது சிக்கலானதும், பல கேள்விகளுக்குப் பதில் காணப்பட வேண்டியதாகவும் இன்னமும் உள்ளது.

அதாவது பெண்களின் விடுதலை என்பது தற்போதைய சமுதாயத்தில் பெண்களுக்குப் பாதகமாகவுள்ள அம்சங்களை நீக்குவதாகவும் அவர்களுக்கு சம உரிமைகளை வழங்குபவையாகவும் இருத்தல் வேண்டும். இதற்கென எமது சமுதாய ஒழுங்குமாற்றி அமைக்கப்படுதல் அவசியமானதாகும்.

இதற்கு பெண்கள், சமுதாயத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் பற்றி தெளிவாக அறிந்து கொள்வதும், அது குறித்து போராடுவதும் அவசியமானதாகும். இதன் அடிப்படையாக அவர்களின் கல்வியும், பொருளாதாரதங்குநிலையும் மாறுதலும் அவசியமானதாகும். ஆனால், இப்போராட்டமானது குடும்பம், சமுதாயம் என்ற கட்டமைப்புக்களில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துதல் வேண்டும் என்பதையும் அவர்கள் தெளிவாக வரையறை செய்தல் வேண்டும்.

பெண்ணினத்தின் சமூகவிடுதலை என்பது ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபடுதல் என்றே பொதுவாக அர்த்தப்படினும் அது எவ்வாறானது என்பது தீர்மானிக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். அதாவது இதன் அர்த்தம் ஆண்களுடன் முழுமையாகவே முரண்பட்டுக்கொள்ளுதல், விலகிப்போதல் என்ற ரீதியில் பொருள் கொள்ளத்தக்கனவா என்பது விவாதத்திற் கும், சர்ச்சைக்கும் உரியவையே. ஏனெனில் அவை இயற்கைக்கும், அதேவேளை முன்னேற்றகரமான வாழ்வொழுங்கிற்கும் ஏற்றனவையாக அமைவதும் அவசியமாகும்.

ஆகையினால் பெண் இனத்தின் விடுதலை என்பது பெண்ணினத்தின் விழிப்புணர்வு என்பதுடன் மட்டுமல்ல ஆண்களின் விழிப்புணர்வுடனும் சம்பந்தப்பட்டதொன்றே. ஆகையினால் பெண்ணினத்தின் விடுதலையை முன்னெடுக்க விளையும்போது ஆணினம் விழிப்புணர்வூட்டப்படுதல் அவசியமானது. நமது பண்பாடு, கலாச்சாரம், கலை என்பன ஆண்களுக்கு வழங்கிவிட்ட மேலாண்மையை விட்டுக்கொடுக்கும் அளவில் ஆண்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுதல்வேண்டும். அப்பொழுதே தனித்துவமான பெண்ணின் உரிமை என்பதும் சமுதாயத்தின் விடுதலை என்பதும், தேசத்தின் விடுதலை என்பதும் ஒன்று சேர அமைய முடியும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ாதம்
ா தினசரி

# அரசியலுக்குப் புதிதல்ல!

பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்கப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியினதுமான 12 பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஆதரவு பொ.ஐ.முன்னணிக்குக் கிடைக்கப் பெறும்.

முஸ்லிம் காங்கிரஸ் தாம் வழங்கும் ஆதரவிற்கான நிபந்தனைகள் சிலவற்றை வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. ஆயினும் மறைமுகமாகச் சில நிபந்தனைகளையும் அது முன்வைத்துள்ளதாகவே அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். இதில் அமைச்சர்களான ரத்வத்த, பௌசி ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படக் கூடாது என்பதும் முக்கிய அமைச்சுக்கள் சில தமக்கு வழங்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமானவையாகும்.



அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவது போன்று இரகசிய நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அது உண்மையிலேயே சந்திரிகா குமாரதுங்கா அரசிற்கு ஒரு நெருக்கடியானதாகும், சவால் மிக்கதாகவும் இருக்கும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. ஏனெனில் அவர்களின் நிபந்தனைகள் பொ.ஐ.முன்னணிக்குள்ளேயே குழப்பங்களைத் தோற்றுவிக்கக் கூடியதாகும். அதையும் மீறி நிபந்தனைகள் ஏற்கப்படுமாயின் பொ.ஐ.முன்னணியின் அவலத்தையே அது வெளிக்காட்டுவதாகவே இருக்கும்.

ஆகையினால், இவ்வாறான நிபந்தனைகளுக்கு ஆளும் தரப்பு பெரும்பாலும் இணக்கமான போக்கைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அது பொ.ஐ.முன்னணியைப் பலவீனப் படுத்துவதோடு, எதற்காக முஸ்லிம் காங்கிரசின் உதவியை சந்திரிகா குமாரதுங்கா நாடுகின்றாரோ அதனைக் கூட அர்த்தமற்றதாக்கிவிடவும் கூடும்.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனைகள் அனைத்தும் பொ.ஐ.முன்னணி நிறைவுசெய்யும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அத்தோடு முஸ்லிம் காங்கிரஸும் அனைத்துக் கோரிக்கையையும் நிறைவு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் என்பதற்கும் இல்லை.

ரத்வத்தவின் மகன்மார் தேர்தலின் போது புரிந்த வன்முறைகள் முஸ்லிம் மக்களை நேரடியாகப் பாதித்துள்ளமையினாலும், பௌசியுடன் மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் முரண்பாடு கொண்டிருந்தமையாலும் முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனைகளை வைத்திருக்கலாம் ஆனால் அடிப்படையில் இந்நிபந்தனைகள் முக்கிய அமைச்சுப் பதவியைக் குறியாகக் கொண்டவையே ஆகும். அதாவது ஆட்சியாளர்களினால் விட்டுக் கொடுக்க முடியாத நிபந்தனையை முன் வைப்பதன் மூலம் வழங்கக் கூடியவற்றில் உயர்ந்தவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதே முஸ்லிம் காங்கிரசின் குறியாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில், ஆட்சியமைக்க ஆதரவு தெரிவித்துவிட்டு நிபந்தனைகள் பற்றி அது பேசிக் கொண்டிருக்க மாட்டாது. சில வேளை நிபந்தனைகளை நிறைவேற்ற காலக்கெடுக்களை முஸ்லிம் காங்கிரஸ் விதிக்கலாம், அன்றி காலக்கெடுக்களைக் கொடுத்துள்ளது போன்று காட்டிக் கொள்ள முற்படலாம் ஆனால் அவைகூட அரசியல் நடத்துவதற்கானதொரு கால அவகாசமே ஒழிய வேறில்லை.

ஏனெனில் சந்திரிகா குமாரதுங்கா 1994இல் ஜனாதிபதித் தேர்தலின்போது பதவிக்கு வந்தால் ஆறுமாத காலத்திற்குள் ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பேன் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர் இவ்வாக்குறுதி மூலம் ஜே.வி.பி யின் வேட்பாளரை போட்டியில் இருந்து விலகவும் செய்தவர் ஆனால் பதவிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் பதவியில் இருந்தது மட்டுமல்ல. அடுத்த ஆறு ஆண்டிற்கு பதவியை உறுதிப்படுத்திய பின்னரே ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புப் பற்றி பேசுகின்றார். இது முஸ்லிம் காங்கிரஸிற்கும் தெரியாததல்ல.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனைகளும்- சந்திரிகா குமாரதுங்காவின் வாக்குறுதிகள் தற்போதய அரசியல் சூழ்நிலைக்காக மட்டுமே. முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்து இயன்றளவு முக்கிய அமைச்சுக்களையும் அதிக அமைச்சுக்களையும் பெறுவதும், பொ.ஐ.முன்னணியினைப் பொறுத்து எவ்வளவு குறைந்தளவுடன் திருப்திப்படுத்த முடியுமோ அந்தளவிற்கு குறைந்தளவுடன் திருப்திப்படுத்தி ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதும் என்பதே நோக்கமாகும். இதற்கு அப்பால் இரு தரப்புமே சொல்லப் போவதில்லை ஏனெனில் அவ்வாறான நடவடிக்கை இரு தரப்பினருக்குமே அனுகூலமானதாக இருக்கமாட்டாது. இது அரசியலுக்குப் புதுக்கணக்கொன்றல்ல.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உரிமைக்கு உயிர்

-முத்து சிவஞானம்-

**ஒடுக்குமுறைக்கெதிராக கடந்த 50 வருடங்களாக தமிழர்களாகிய நாம் போராடி வருகின்றோம். எமது போராட்ட வரலாற்றில் 1961ல் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் முக்கியமானது. இந்தச் சத்தியாக்கிரகத்தின் மீதும் அரச படைகள் தம் வன்முறையைப் பிரயோகித்தன. எனினும் தமிழீழப் பரப்பெங்கும் இரண்டு மாதங்களாக அரச நிர்வாகத்தைச் செயலிழக்கச் செய்த நிகழ்வு இது. இந்தக் கதை சத்தியாக்கிரக நிகழ்வைச் சித்தரிக்கிறது.**

விசாலமான அந்தக் கண்டி வீதியில் வாகனச் சந்தடி அற்றுவிட்ட நேரம். நடுஇரவு பன்னிரண்டு மணி.

யாழ்ப்பாணத்துக் கச்சேரி வாசல் முகப்பில் தளராத உள்ளத்துடன் தமிழ்க் குலத்துச் செல்வங்கள், தமிழ் உரிமைப்போரில் கலந்து கொண்டிருக்கின்றன. திரும்பும் இடமெல்லாம் தமிழர் வெள்ளம்; தமிழ் இசை.

உரிமைப் போருக்காக உடல் வருத்திக் கிடக்கும் பெண்கள்; குழந்தைகள்; பெரியவர்கள்; இளைஞர்கள், இவர்களிடையே, ஆண்கள் பகுதியில் முன்னணி விரிசையில் முகத்தில் முத்துக் கோர்க்கும் புன்னகையுடன் துரைராசா அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னால் தமிழ் மண்ணின் இளம் இரத்தத்திற்குரியவர்கள். அடுத்த பந்தியில் தமிழ் மொழியின் வாழ்வுக்காகத் தங்களை அர்ப்பணஞ் செய்ய வந்திருக்கும் தாய்க்குலம்!

அவர்கள் புரிவது,
அறப்போர்; அன்னை
மொழியின்
விடுதலைப் போர்!
"வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம்
வாழிய வாழியவே"

தமிழ்த்தேன் குழைந்த தமிழிசை அங்கு தவழ்ந்து ஒரு புதிய தெம்பை ஊட்டிக்கொண்டிருக்கிறது.

குரலுக்குரியவள்-

கோமளா; துரைராசனின் தங்கை. தமிழுக்காக உழைப்பதில் தமையனை மிஞ்சிவிட்டவள். அவளைத் தங்கையாகப் பெற்றதில் துரைராசனுக்கு அளவற்ற பெருமை.

தங்கையின் பாடலில் துரைராசனின் மனம் இளகிக் கரைகின்றது. இசையினுக்கு அவ்வளவு வல்லமையா?

தமிழன் நிலை அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிய, அவனும் குரலெடுத்துப் பாடுகிறான்.

"வாழ்க தமிழ்மொழி
வாழ்க நிரந்தரம்
வாழிய வாழியவே"

மறுகணம்-

எத்தனை குரல்கள் ஒலிக்கின்றன. உணர்ச்சி பீறிடுகின்றது. தமிழ் வெள்ளம் தங்கு தடையின்றிப் பாய்கிறது.

நேரம் பின்னிரவு - ஒரு மணியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது.

துரைராசனின் எண்ணத்தில் ஒரு துலக்கம்; முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த புன்னகைக்குப் பதில் தீவிர எண்ண ஓட்டங்களின் பிரதிபலிப்பு. வாய் அசைவு பெறுமனே கீதங்களை இசைப்பதிற் தொழிற்பட்டிருந்ததே தவிர, சிந்தனைகள் நல்லூரில் ஒரு குச்சு வீட்டைச் சுற்றிப்படர்ந்து கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் என்னவோ ஏதோ? தங்கச்சி வைத்துக் குடுத்துவிட்டு வந்த குடிநீருக்குப் பிறகு ஒண்டுங் குடுக்கேல்லையே ஒண்டுக்கு ரண்டுக்குப் போறதுக்குப் பிடிச்சுக்கொண்டு போய்விடவும் ஒருத்தரும் வீட்டில் இல்லை.

மனம் துலங்கிப் புழுங்குகிறது.

அரசடி வீதிக்கரையில் ஒரு சிறு குடிசை; செத்தை தட்டிகளின் மறைப்பில் உள்ளே ஒரு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழிசற்பாயில், காசநோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தாயின் உருவம் அவன் உள்ளத்தை ஆக்கிரமிக்கிறது.

பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றதாய், படுத்த படுக்கையாய் கிடக்க...

இங்கே தமிழ்த் தாய்க்காகப் போராட்டம்.

எண்ணங்கள் தவித்துத் தவித்து, உணர்வுகள் வேகப்பட, நினைவுகளின் கிளைப்பில்...

“மோனை இப்பிடிக் கிட்ட வாமோனை. உன்ரை தேப்பன் செத்துப்போக நான் கையடிச்சு, நெருப்புத்திண்டு உங்களை இவ்வளவுக்கும் வளர்த்துப் போட்டன். இனி உன்ரை தங்கச்சியை ஒரு கரை சேர்த்து, அவள் எங்கையன் சுகம்பெலமா இருக்கச் செய்யவேணும். இப்படி நீ நெடுக விளையாட்டுப் புத்தியிலை திரிஞ்சா என்னமோனை நடக்கும்”

துரைராசாவின் கண்களும் பனிக்கின்றன.

கோமளம் குடி நீரை ஆற்றியபடி எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

“அதெல்லாம் நான் செய்து வைப்பன் அம்மா. நீ ஒண்டையும் யோசியாதை” துரைராசாவின் மனத்தில் எழுந்த உறுதி, வார்த்தையாக விழுகிறது. நினைவு தடுமாறுகிறது தங்கையின் எண்ணம் தலைதூக்கிறது.

தலையைத் திருப்பித் தங்கையைப் பார்க்கிறான். அவள் சலனமுற்றுப் பாடிக்கொண்டே இருக்கிறாள்.

அவளை ஒரு கரை சேர்த்துவிட்டால்-

பிறகு தமிழ்வாழ்வுக்காகத் தன் உயிரையும் தியாகம் செய்ய அவன் தயார்.

நேரம் நகர்கிறது.

தூரத்தில் இராணுவ வாகனங்களின் பயங்கர உறுமல்.

கூட்டத்தில் ஒரே பதட்டம்; குசுகுசுப்பு!

“ஒருதரும் எழும்பாதையுங்கோ, உயிர்போனாலும் இருந்த இடத்தைவிட்டு ஒருதரும் எழும்பாதையுங்கோ” உரத்த குரலில் உற்சாகக் குரல்கள் கிளம்புகின்றன.

இராணுவ வாகனங்களின் உறுமல் மிகக் கிட்ட நெருங்கிக்கொண்டிருக்கிறது.

துரைராசன் ஒருகணம் திகைத்தான். சாவதைப்பற்றி அவனுக்குப் பரவாயில்லை. ஆனால் வீட்டில் சாகக்கிடக்கும் தாய் அவனை எதிர்நோக்கி, அவன் வாழவைப்பான் என்ற நம்பிக்கையில் காலங்கழிக்கும் தங்கை கோமளா...

ஒரு கணச் சிந்தனை!

வினாடிகள் பறந்தன!

சட்! புட்!, சட்; புட்... வாகனங்களில் இருந்து சப்பாத்துக் கால்கள் குதிக்கின்றன.

அவல ஓலம்!

சப்பாத்துக்கள் அங்கும் இங்குமாக ஓடுகின்றன. துரைராசனுடைய உள்ளத்தில் எண்ணங்கள் பல அசுர கதியில் மின்னி மறைகின்றன.

உரிமைப் போராட்டத்தில் அவன் உயிரிழந்த பின் தாயின் பிணம் அனாதைப் பிணமாக, சீந்துவாரற்றுத் தருமச் செலவில் தகனஞ் செய்யப்படுகின்றது. தங்கை கண்ணீரும் கண்களுமாகக் கையேந்திப் பிழைக்க, அவளைச் சுற்றி வல்லூறுகள்! அவள் மானமிழந்து, வாழ்விழந்து, தெருப்புழுதியில் புழுவோடு புழுவாய், அவனுடைய உள்ளம் ஒடிந்து விழுகிறது. இனந்தெரியாத ஓர் அவல உணர்வு அவனுள் எழுகிறது.

மின்னல் வினாடி-

அவன் ஓடுகிறான்; இருள் அவனைத் தன்னுள் மறைத்துக் கொள்கிறது.

சப்பாத்துக்கள் இன்னும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

கல்மாரிகள்!

அட்டூழியத்தனமான அடக்குமுறைகளின் முன், அறப்போர் நிலைகுலைகிறது; கூட்டம் கலைகிறது.

ஆனால்

அவள் அசையவே இல்லை. ஒருசில நிமிடங்களில் நடந்துவிட்ட இத்தனை கொடுமைகளையும் பார்த்தும், அவள் கல்லாய்; மரமாய் இம்மியளவு இங்கங்கு அசையாமலிருக்கிறாள். அவள்




அதரங்களின் அசைவில் விடுதலைக் கீதம்.

“இழுத்தெறி அவளை”

அரக்கமனம் படைத்த ஒரு இராணுவ வீரன்- அவனும் மனிதன்- அவளை இழுத்து எறிகிறான்.

இழுத்தெறியப்பட்ட வேகத்தில் கச்சேரி மதில் சுவரோடு அவளுடைய மண்டை மோத, “அம்மா” என்ற ஒரு அலறல் அவ்வளவுதான்.

அப்புறம்-, அவளைப் பொறுத்தவரையில்-,

அமைதி; இருள்!

முகமலரைத் தவிர்த்து, தலையின் மற்ற எல்லாம் பாகங்களையும் மூடி மறைத்துக் கிடக்கும் பண்டேஜ் பந்தனங்குடன், பிரக்ஞையும் பிரக்ஞையற்றதுமான நிலையில் கோமளா துவண்டு கிடக்கிறாள். அவள் கட்டிலின் அருகே உயரத் தொங்கும் ஒரு மருந்துப் புட்டியிலிருந்து, இரப்பர் குழாய் வழியே சக்திமருந்து அவள் உடம்பில் ஏறிக்கொண்டிருக்கிறது.

ஒரு துளி; அது அவளுடைய உடலிற் போய்ச்சேர எவ்வளவு நேரம்?

துரைராசன் சித்தப்பிரமை பிடித்தவனாய் விம்மி விம்மி, வெம்மியபடி தலைகுனிந்து நிற்கிறான்.

எவளுடைய வாழ்வை மலரச் செய்ய வேண்டுமென்பதற்காக, அன்னை மொழியின் உரிமைப் போராட்டத்தை உதறிவிட்டு ஓடினானோ, அவளே அந்த உரிமைப்போரில் தன்னை அர்ப்பணித்துவிட்டு வாழ்வா? சாவா? என்ற நிலையில் ஊசலாடும்போது-

இனி, என்ன இருக்கிறது அவனுக்கு?

அவன் அழுகிறான்.

அவள் கண்கள் திறக்கின்றன. அண்ணனைக் காண்கிறாள்.

வெளிறிக் கிடக்கும் அவள் வதனத்தில் குறுநகையோடுகிறது.

அது தியாகத்தின் சுடரா?

அவள் சிரிக்கிறாளா?

துரைராசன் மெல்லக் குனிகிறான்.

தியாகத்தின் ஒளி ஆளும் அவள் வதனத்து தீட்சண்யத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவனால்.

அவள் ஏதோ சொல்ல முயல்கிறாள்; முடியவில்லை.

மீண்டும் அவளுடைய அதரங்கள் பிரிகின்றன.

“அ..ண்..ணை” அவள் குரல் சக்தியற்றுச் சன்னமாக ஒலிக்கிறது.

அவன் இன்னும் குனிகிறான்.

அவள் கையைத் தூக்கி அவனைத் தடவ முயல்கிறாள்.

“என்ன குஞ்சு; என்ன வேணும்” அவனுடைய அன்புக்குரல் அளவுக்கதிகமாகத் தடுமாறுகிறது.

“அண்...ணை நீ துக்கப்படா தை. நான் - நான் இருக்க - மாட்டன். செத்தாலும் எங் கடை... உரிமை...க் காகச்...சாக வேணும். அவளுக்கு மூச்சு வாங்குகிறது.

“நீங்கள் ஏன் ஓடின...னிங் கள்?” அவன் கண்கள் கலங்கின.

“ஓம் குஞ்சு; நான் அண்டைக்கு இடையிலை எழும்பி ஓடினது பிழைதான். இனி என்ரை உயிர்போனாலும் இப்படிச் செய்யன். என்னை நம்பு குஞ்சு” அவனுடைய குரலிற் சற்று கொதிப்பு. அவள் முகத்தில் ஆனந்தத்தின் ஆட்சி; கண் மலர்கள் ஒளியுடன் சிரித்தன; அதரங்கள் ஏதோ சொல்லத் துடித்தன. அதற்கிடையில்..,

ஒரு அணுவின் அணுவான வினாடி நேரம் - அவள் தலைசாய்ந்தது. அவள் முகம்மட்டும் புன்னகைப் பொலிவு மாறாமல் அப்படியே இருந்தது.


அவன் இப்போ அழவில்லை. எதுவித உணர்ச்சிகளுமற்று அவளையே பார்த்தபடி நின்றான். என்றாலும் கண்கடைகளில் இரண்டு முத்துக்கள் உருண்டு விழுந்தன. அந்தத் தியாக உரு அவன் மனதில் மூட்டிவிட்ட தியாகத் தீ உள்ளே கனன்று கொண்டிருக்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருள் சூழ்ந்த நகரத்தின் விடுதலைக்கதை




சுதந்திரம்! அதை விரும்பாதார் இவ்வுலகில் யார்தான் இருக்கிறார்கள். அதில் ஒரு நிகரில்லா உன்னதம் இருப்பதால்தான், உலகில் அதன் பெறுமதிக்கு நிகராக எதுவுமே இருப்பதில்லை. பசி, பஞ்சம், பட்டினி என்பவற்றுக்கு அப்பால் சாவுகள், அழிவுகளுக்கும் அப்பால் நம்பிக்கையுடன் தொடரும் போராட்டங்கள்தான் ஒடுக்கப்படும் இனத்திற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கிறது. வாழ்வதற்கான எந்த அனுகூலங்களும் மறுக்கப்பட்ட நிலையிலும் அடிமை வாழ்வில் கிடைக்கும் கீழ்த்தரமான சுகபோகங்களைப் பற்றிப்பிடித்து ஏதோ வாழ்ந்துவிட்டுபோவோம் என்று எண்ணாது விடுதலைக்காக விலைகொடுத்து போராடத் துணியும் மனிதர்களுக்கே இவ்வுலகில் சுதந்திரம் சொந்தமாக்கப்படுகிறது.

அசுர பலத்தோடு வந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாது மரணப் புயலின் மையத்தில் நின்று 900 நாள் முற்றுகையில் வாழ்வையும், உயிரையும் விலையாகக் கொடுத்து, வந்த எதிரிகளுக்கு மரணத்தைப் பரிசளித்த மகத்தான மனிதர்கள் "லெனின் கிராட்" மக்கள். உலக வரலாற்றில் ஒப்பற்ற சுமைகளைத் தாங்கி, தியாகங்கள் புரிந்து, அடிபணியாது தமது இறைமையை நிலை நாட்டிய அந்த மக்களின் விடுதலை உணர்வு ஒடுக்கப்படும் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1941 யூன் மாதம் லெனின்கிராட் நகரம் இனவெறிகொண்ட கிட்லரின் படைகளின் இறுக்கமான முற்றுகைக்குள் சிக்கியது. உலகை பேரழிவுக்குள்ளாக்கிய இரண்டாம் உலகப் பெரும் யுத்தத்தில் சோவியத் யூனியனை வீழ்த்துவதற்காக கிட்லர் எடுத்த "ஒப்பரேசன் பார்பரோசா"வின் ஒரு சமர்முனை லெனின் கிராட் நகர் மீது திறக்கப்பட்டது. எல்லா வகையிலுமே மிகக் கொடூரமான முற்றுகை அது. முப்பது இலட்சம் மக்கள் அந்த முற்றுகைக்குள் அகப்பட்டார்கள். தம்மிலும் பலங்கொண்ட எதிரியை இறுதிவரை எதிர்கொள்வதென லெனின்கிராட்டுக்கள் உறுதி கொண்டார்கள்.

1941ஆம் ஆண்டு யூன் 21ஆம் நாள், ஒப்பரேசன் பார்பரோசாவின் தொடக்க நாள். லெனின்கிராட் முனையில் ஜேர்மன் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறத் தொடங்கின. ஜேர்மனியரின் படையெடுப்பை அவ்வளவு விரைவிலேயே எதிர்பார்க்காத ரஷ்யப் படைகள் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருந்தன. முதல் நாள் சமரிலேயே ரஷ்ய வான்படை தனது ஆயிரத்து இருநூறு வானூர்திகளை இழந்தது. சுமார் இரண்டு வாரங்களிலேயே 300 மைல்கள் கடந்து, ஜேர்மன் படைகள் முன்னேறிக்கொண்டிருந்தன. ரஷ்யப் படைகளோ, தமது ஆளணியில் மிகப்பெரும் அழிவுகளைச் சந்தித்திருந்தது. இருபத்தெட்டு "டிவிசன்"களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து இருபதினாயிரம் ரஷ்யப் படையினர் அழிந்து போயினர். மேலும் எழுபது டிவிசன் படையணிகள் தமது அரைவாசி ஆளணியை இழந்திருந்தன.

ரஷ்யர்களின் ஆட்லறி படையணிகள் தமது பலத்தில் அரைவாசியை இழந்த இந்நிலையில் லெனின்கிராட் நகரின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியது. அது விரைவிலேயே ஜேர்மனியரின் காலடியில் அடிபணிந்துவிடுமென்றே உலகம் நம்பியது.

கிட்லர் தனது படைகளின் முன்னேற்றத்தில் பெரும் நம்பிக்கை வைத்தான். இன்றைய சிங்களத் தலைமைகள் தமது இராணுவ பலத்தில் நம்பிக்கைகொண்டு காலக்கெடுக்கள் விதிப்பது போலவே கிட்லரும் சூழுரைத்தான். எண்ணி நான்கே நான்கு வாரத்தில் லெனின்கிராட்டை தமது காலடியின் கீழ் கொண்டுவருவதாக சபதம் செய்தான். "யூலை-21 ற்கு முன்னரேயே லெனின்கிராட் மாளிகைச் சதுக்கத்தில் வெற்றி விழா கொண்டாடுவேன்" என பிரகடனம் செய்தான்.

இவையெல்லாம் லெனின்கிராட் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்துவிடவில்லை. அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடியதாய் அங்கு எதுவுமே நடக்காதபோதும், தமது கைகளை மட்டமே அவர்கள் நம்பினார்கள். நம்பிக்கையின் முன் எல்லாமே தூசு என்பதில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. "உங்களது நகரைக் காக்க லெனின்கிராட் மக்களே அணிதிரளுங்கள்" என்ற கோரிக்கையை உடனடியாகவே அந்த மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஒரு வாரத்தில் மட்டுமே இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் போருக்குப் புறப்பட்டார்கள். அனைத்து மக்களையும் படையணிகளாக்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

“இதுவரை சமாதானத்திற்கான வேலைகள் மட்டுமே எனக்குத் தெரிந்தது. இப்போதிலிருந்து ஆயுதமேந்துவதற்கு நான் தயாராகிவிட்டேன். சண்டையிடுவதால் மாத்திரமே நாங்கள் அழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்ற முடியும்” எனக் கூறிவிட்டுப் போருக்காகப் புறப்பட்டுப்போனார் ஒரு பாடலாசிரியர். இவ்வாறு மக்கள் எல்லோருமே போர்க்களத்திலே ஓய்வு றக்கமின்றி அல்லும் பகலுமாய் உழைத்தார்கள். போர்க்களங்களில் இருந்து தம்மால் மீண்டு உயிருடன் திரும்ப முடிகிறதோ, இல்லையோ தங்களுடைய நகருக்கு மீண்டும் விடியலைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள்.



லெனின்கிராட் எல்லையில் ஜேர்மனியத் துருப்புக்கள்.

போருக்கென புறப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்குக்கூட ஜேர்மனியர்கள் அவகாசம் கொடுக்கவில்லை. அவர்களுக்குத் தேவைக்கான ஆயுதங்களைக்கூட உடனடியாக வழங்க முடியவில்லை. பயிற்சிகள் இன்றியே போர்க்களங்களிற்கு அவர்கள் புறப்பட்டார்கள். கையில் அகப்பட்ட கோடாரிகள், மண்வெட்டிகள், கத்திகள் அலவாங்குகள் என்பவற்றையும் தங்களுடைய ஆயுதங்களாக அவர்கள் எடுத்துச்சென்றார்கள். போர்க்களங்களிலே அவர்கள் காட்டிய வீரமும், தியாகமும் ஜேர்மனியர்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. எதிரியின் முக்கியத்துவம் வாய்ந்த நகர்வுகளையெல்லாம் பல சமயங்களில் அவர்கள் தனித்து நின்றே வெற்றிகொண்டார்கள்.

சோவியத் படைகள் ஆரம்பத்தில் அடைந்த பேரழிவுகளை வைத்து, ஜேர்மனியர் கட்டிய வெற்றிபற்றிய கற்பனைகளெல்லாம் லெனின்கிராட் மக்களின் எழுச்சியால் சுக்குநூறாகியது. தொடர்ச்சியான சண்டைகளில் ஏற்பட்ட தோல்வியின் இழப்புக்களால் லெனின்கிராட் நோக்கிய தமது முன்னேற்றப் பாதையை தமது “சாவுக்கான பாதை” என வர்ணித்து மனமுடைந்து போனார்கள் கிட்லரின் தளபதிகள். “ரஷ்யர்களின் பெரும் படைபற்றி நாம் குறைவாக மதிப்பீடு செய்துவிட்டோம்” என்றான் கிட்லரின் படைக்கல முதன்மை அதிகாரியொருவன்.

இப்படியே தனது படைவீரர்களும், தளபதிகளும் மனமுடைவதை நன்கு அவதானித்த கிட்லர், எழுச்சிகொண்ட லெனின்கிராட் மக்களை முற்றுகைக்குள்ளாக்கி, தனிமைப்படுத்துவதன் மூலம் அவர்களை அடிமைப்படுத்துவதற்கென திட்டங்களைத் தீட்டினான். லெனின்கிராட் நகருக்கும், சோவியத் யூனியனின் ஏனைய பகுதிகளுக்கும் தரைத் தொடர்பாக இருந்த இரண்டு பாதைகள் 1941 செப்டெம்பர் எட்டாம் நாள் ஜேர்மன் படைகளிடம் வீழ்ச்சி கண்டது. முற்றுகைக்குள்ளான லெனின்கிராட் மீது மேலும் தாக்குதலை தீவிரப்படுத்தி அந்த மக்களை விரைவிலேயே சரணடைய வைத்துவிடலாம் என்று கிட்லர் சந்தேகத்திற்கிடமின்றி நம்பினான். லெனின்கிராட் மக்கள் என்ன செய்யப்போகிறார்களோ என்று உலகம் கண்ணீர் சிந்தியது. எல்லோருடைய கணிப்பீட்டின்படியும், லெனின்கிராட் மக்களுக்கு சரணடைவதைத் தவிர வேறுவழியேதும் இல்லையென்றே நம்பப்பட்டது. ஆனாலும், லெனின்கிராட் மக்கள் தொடர்ந்தும் போரிட்டார்கள். என்றோ ஒருநாள் அந்த முற்றுகையை உடைத்து புதியவழியமைப்போம் என்ற நம்பிக்கை அவர்களுக்குள்இருந்தது.

தமது நகருக்குள் எதிரிகள் உட்புகுந்துவிடுவார்களானால், தாம் வியர்வை சிந்தி உருவாக்கிய எதையுமே எதிரி அனுபவித்துவிடக்கூடாது என்பதில் லெனின்கிராட் மக்கள் உறுதியாக இருந்தார்கள். தமது வீடுகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பூங்காக்கள், வீதிகள் எல்லாமே எந்த நிமிடமும் அழிக்கப்படக்கூடிய நிலையில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வைத்திருந்தார்கள்.

முற்றுகை லெனின்கிராட் மக்களை வாட்டத் தொடங்கியது. பட்டினியால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு இறந்தார்கள். பெரிய உணவுக் களஞ்சியங்கள்கூட ஜேர்மனியத் தாக்குதல்களால் அழிந்துபோயிருந்தன. எஞ்சியிருந்த உணவுப்பொருட்களில் மிகச்சிறிய அளவை தமக்குள் பங்கீடு செய்து கொண்டு ஏனையவற்றை போர்க்களங்களில் கடுமையாக உழைப்பவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் அனுப்பிவைத்தார்கள். லெனின்கிராட்டில் இருந்த நாய்கள், காகங்கள், எலிகள் என்பனகூட உணவில்லாததால் அங்கிருந்து வெளியேறி ஜேர்மன் படைகள் நிலைகொண்டிருந்த பகுதிகளுக்குச் சென்றன. மக்களோ பசிக்கொடுமையால் கையில் கிடைத்தவைகளையெல்லாம் உண்ணத் தொடங்கினார்கள். ஜேர்மனியர்களால் அழிக்கப்பட்ட களஞ்சியம் ஒன்றில் தொன் கணக்கான சீனி நிலத்தோடு அழிந்து போயிருந்தது. பல மாதங்களின் பின் அந்த சீனி கலந்த மண் வெட்டியெடுக்கப்பட்டு அங்கு விற்பனை செய்யப்பட்டது. சாவின் மையத்தில் நின்ற இத்தகைய நிலையிலும் லெனின்கிராட் மக்கள் அடிபணிய மறுத்தனர். இந்த இறுமாப்பே அவர்களைப் பின்னர் மனிதர்களாக வாழவைத்தது; உலகத்தை அவர்கள் பற்றிப் பேசவைத்தது.

உணவுக்கு மாற்றீடாக உண்ணக்கூடியவைகளையெல்லாம் கண்டுபிடித்து பசி தீர்த்துக்கொண்டு தமது இறைமையைக் காக்க அவர்கள் போரிட்டார்கள். போர்க்களம் தவிர்ந்த இடங்களில் எல்லா மக்களுமாக உற்பத்தியில் இறங்கினார்கள். லாபம் என்பதற்கு அப்பால் எல்லாமே போரை வென்றெடுப்பதற்காகச் செய்யப்பட்டது. குளிரால் பனிக்கட்டியாக உறைந்திருந்த “லெடேகா” என்ற நீளமான ஏரியூடாக தமது நாட்டினுடனான தொடர்புகளை ஏற்படுத்தினார்கள் லெனின்கிராட்டுக்கள். அது மட்டுமே அவர்களுக்குரிய ஒரேயொரு தொடர்புப் பாதையாக இருந்தது.

லெனின் கிராட் நகரில் தற்காப்புச் சமருக்கு தயாராகும் ருஸ்சிய மக்கள்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அதனால்தான் அந்தப்பாதையை அவர்கள் "வாழ்விற்கான பாதை" என்று அழைத்துக் கொண்டார்கள். அதனூடாக மிகச் சொற்பமான உணவுப் பொருட்களையே அவர்களால் கொண்டுவர முடிந்தது. அதனூடாக பயணம் செய்த வேளைகளில் குளிரால் உறைந்து இறந்து போனவர்கள் பலர். ஜேர்மனியரின் பீரங்கிகளும், விமானங்களும் முழுமூச்சுடன் செயற்பட்டு அந்தப் பாதையை தடைசெய்துவிட முயன்றபோதும் வாழ்விற்கான பயணம் தொடர்ந்தது. அது வெறுமனே உயிர் வாழ்தல் என்பதற்கப்பால் போரை வெற்றிகொள்வதற்காய் இருந்தது.

"வெற்றி ஒரு சிறந்த நாளைக் கொண்டு வரும்" என்ற நம்பிக்கையில் அந்த வெற்றிக்காக லெனின்கிராட் காத்திருந்தது. அதற்காக உழைத்தது. இயலாத, நோயுள்ள நிலையில் இருந்த மக்கள் லெனின்கிராட்டிலிருந்து "லெடேகா" ஏரியூடாக அப்புறப் படுத்தப்பட்டார்கள். போர்க்களங்களிற்கு இலட்சக்கணக்கில் திரண்டு வந்த மக்களும், உற்பத்தியில் ஈடுபட்டு லெனின் கிராட்டை முற்றுகைக்குள் வாழ உதவிய உழைப்பாளர்களும், ரஷ்யப்படைகளின் வலிந்த தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலுக்கு உதவினார்கள். புதிதாக அணி திரண்ட மக்கள் படையணிகளாலே முக்கணிப்பகுதிகள் காவல்காக்கப்பட்டன. லெனின்கிராட் மக்களின் கைகளில், நகரைக் காவல்காக்கும் பொறுப்பை ஒப்படைத்த முன்னணி இராணுவப்படைகள், தமது மண்ணில் காலடி வைத்திருக்கும் ஜேர்மன் படைகளைத் துவம்சம் செய்து தமது நகரை மீட்டெடுப்பதற்காக கடுமையான பயிற்சிகளிலும், தயார்ப்படுத்தலிலும் ஈடுபட்டன. இறுதியில், அந்த மக்கள் தமது உழைப்பின் அறுவடையைப் பெறத் தொடங்கினார். பெரும் ஆட்பலத்தைப் பெற்றிருந்த ரஷ்யப் படைகளுக்கு இப்போது போதிய ஆயுதங்களும் வந்து சேர்ந்தன. முற்றுகையின் சரியாக 506ம் நாள் லெனின்கிராட்டுக்குரிய தரைப்பாதைகளில் ஒன்றான "சிலில்பேர்" ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்தது. அப்போது லெனின்கிராட்டில் ஓடிய கார்களின் "கோன்" ஒலிகளும், மக்களின் இசைநிகழ்ச்சிகளும், கூக்குரலும், மகிழ்ச்சி ஆரவாரங்களும் ஜேர்மன் படைகளை எரிச்சலடைய வைத்தது.

அன்றிலிருந்து படிப்படியாக வெற்றிகளைப் பெற்று உறுதியாக முன்னேறினார்கள் லெனின்கிராட் மக்கள். முற்றுகையின் 880ம் நாள் ஜேர்மன் படைகள் முற்று முழுதாகவே அவர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. அந்த மக்களின் உறுதி, இறுதியில் வெற்றிபெற்றது. பஞ்சமும், பட்டினியும், விடுதலைக்காக அவர்கள் அர்ப்பணித்த வாழ்வும், இறுதியில் அவர்களின் இறைமையைக் காப்பாற்றியது. மின்னலெனப் புறப்பட்ட ஜேர்மன் படைகளை தமது மனவுறுதியால் தடுத்து நிறுத்திய மக்கள், தமது சண்டைப் படைகளுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுத்து இறுதி வெற்றிக்கு வழிகோலினார்கள். அந்த மக்களின் அசையாத உறுதி, கிட்லரின் ஆக்கிரமிப்புப் படைகளை ரஷ்யாவின் எல்லைக் கோட்டோடு மட்டும் விட்டுவிடாது ஜேர்மனியரின் "பேர்லின்" சுவர்வரை விரட்டிச்சென்றது. அந்தத் தோல்வியின் முடிவில் இலட்சக்கணக்கான தனது படைவீரர்களை பறிகொடுத்த கிட்லர் இறுதியில் தற்கொலை செய்துகொண்டான். இன்று தமிழர் போராட்டம் சந்திக்கும் இத்தகைய நிலை, விரைவுபடுத்தப்படப்போகும் விடுதலையின் நாட்களை நினைத்துப்பார்க்க வைக்கிறது.

"வெற்றி ஓர் நிம்மதியான நாளைக் கொண்டு வரும்" என்ற தமது எதிர்பார்ப்பை எமது மக்கள் வென்றெடுக்கப்போகிறார்கள். "சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்" என தலைவர் அவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்த மக்கள், இன்று எதையும் தாங்கிக் கொள்ளும் உறுதியுடன் மேலும் எழுச்சி கொண்டு நிற்பது தமிழீழ விடுதலையின் நாட்கள் எண்ணப்பட்டு வருவதை உணர்த்தி நிற்கிறது.

## ஈழத்தமிழருக்காக தமிழகத்தில்...




தமிழீழத் தமிழர்களின் துயர் நிலையைப் போக்கக் கோரியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், புதிய தமிழகம் கட்சி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் ஆர்பாட்ட ஊர்வலங்களை நடத்தியது. இந்நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான தமிழக மக்கள் கலந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வுகள் புதிய தமிழகம் கட்சி நிறுவனர் டாக்டர். க. கிருஸ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

## மலர்வு

### இன்னொரு காத்திருப்பு- (கவிதைத் தொகுதி)

ஆக்கம்–திருமதி சாந்தி ரமேஸ் வவுனியன் (ஜேர்மனி)
வெளியீடு– பார்த்தீபன் வெளியீடு




ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் திருமதி. சாந்தி ரமேஸ் வவுனியன் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் 91 பக்கத்திலான கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது. இன்னுமொரு காத்திருப்பு எனுந் தலைப்பில் வெளிவந்துள்ள இத்தொகுப்பு முழுமையாக தாயக விடியலுக்காய் தம் உயிரை அர்ப்பணித்தவரின் நினைவலைகளையும், மண் பற்றினையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது போன்ற ஆக்கமுயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது ஆவல்.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதைகள் இரண்டு

## (1) நம்பிக்கை

'அம்மாவைச் சந்திக்க வேணும்'
'முன் அனுமதி உண்டா'
'ஓமோம்'
'எத்தனை மணிக்கு'
அது அவரின் சாப்பாட்டு நேரம் அல்லவா'
'அது தெரியும் – அவர்தான் அந்த நேரம் சொன்னார்'
'அது வெரி சிம்பிள்– நாங்கள் எலும்பைத் தவிர வேறு எதையும் கேட்க மாட்டோம் என்று அம்மாவுக்கு உறுதிபடத் தெரியும்'
'இப்போ– காலை பத்து மணிதானே– ஒரு மணிவரை அந்த அரச மரத்தின் கீழ் போய் இரு'
'சரி'
'ஏய்– சற்று நில்லு'
'என்ன'
'உன் நெற்றி சந்தனப் பொட்டை அழித்து விட்டு போய் இரு–'

## (2) போட்டி

'அவன் சரியான கள்ளன்- மோசடிக்காரன்- நம்பிக்கைத் துரோகி'
'ஏனப்பா அவனைத் திட்டுகிறாய்-நேற்று வரை நீயும்- அவனும் ஒரே கோப்பையில்தான் சாப்பிட்டீர்கள்'
'அது உண்மைதான்- ஆனால் இப்பிடித் துரோகியாய் மாறுவான் என்று எதிர்பார்க்கேல்லை'
'அப்படி என்ன துரோகத்தனம் செய்தான்'
'மன்னிக்கக் கூடிய துரோகமா அது-'
'சரி பரவாயில்லை சொல்லு'
'நானும் அவனும் ஒருமிக்கத்தான் வந்தோம் ஏதாவது கதைச்சுப் பேசி சலுகைகள் பெறலாம் எண்டு'
'பிறகு'
'கதைக்க வந்த இடத்தில்- தங்கடை காலில விழுந்து கும்பிடச் சொல்லிக் கேட்டிச்சினம்'
'சரி சொல்லு'
'இரண்டு பேரும் ஒருமிக்க அவையின்ரை காலில விழுந்தால் நல்லது எண்டு நான் நினைச்சு முடிவெடுக்கிறதிற்கு இடையில அவன் எனக்கு முதல் அவையின்ரை காலில விழக் கூடியதாய்ப் போச்சு- அதுதான் சிக்கல்.'



**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடிவமிட்டுக் கூறமுடியாத உணர்வுக் கலவைக்குள் அவளின் மனம் அமிழ்ந்து போயிருந்தது. அழவேணும் போல, சிரிக்க வேணும் போல, எதுவுமே அற்ற சூனியத்தை நோக்கி ஓடவேணும் போல, ஒழியவேணும் போல அவளுள் ஆயிரம் எண்ணங்கள் கிளர்ந்தன.

தலையை நிமிர்த்தி கண்களை உருட்டிப் பார்த்தாள். இருட்டு, ஒரே கும்மிருட்டு. அவளிற்கு அந்த இருட்டை தொட்டுப் பார்க்கவேணும் போல இருந்தது. எழும்ப முயன்றாள். கால்கள் வலுவிழந்திருந்தன. கைகளை உயர்த்தினால் வலியை மட்டுமே உணரமுடிந்தது.

கத்தினாள், குளறினாள் நிசப்தமே குரலாய் பிளிறியது. மீண்டும் கண்களை சுழற்றிப் பார்த்தாள். இருட்டில் நிறைய உருவங்கள் அவளை வரவேற்கக் காத்திருப்பது போன்ற உணர்வு. அவை அவளைக் கடிக்க காத்திருப்பது போல நடமாடுவதாயும் உணர்ந்து கொண்டாள்.

"அவை கிட்ட வரமுன்னம் ஓடிப் போனால்... ஓட வேணும் என்றால் கால்கள் வேணுமே"

தலையை சரித்து கால்களை பார்த்தாள். அவை அப்படியே இருந்தன. பாதத்தை அசைத்துப் பார்த்தாள். அழகிய வெள்ளி மெட்டி அவளது கண்களிற்கு தட்டுப்பட்டது.

"வெள்ளி மெட்டி"

மங்கல மங்கலாய், கோணல் மாணல்களாய் பலவித நினைவுகள் அவளிற்கு வந்து போனது. அம்மி... கோலம்... புகை... ஐயர்... எல்லாமே நினைவில் வந்து போனது. ஆனால் அவள் தேடும் அவனை மட்டும் காணவே இல்லை.

"வேட்டி மாற்றப் போயிருக்கவேணும்"

அவள் உள்மனம் அவளுக்குள் ஒலித்துக்கொண்டது.

"வேட்டி மாற்ற என்றால் நான் சாறி மாற்ற" நினைவுச் சுழல் அறுபட்டுப் போக அவள் தடுமாறிப் போனாள்.

சோர்வு அவளை மீண்டும் ஆட்கொண்டது. தலை பாரமாய் கனப்பது போல உணரும் போது அவளது இமைகள் மூடிக்கொண்டன.

"யாரே அவளை கூப்பிடுவதாய்... இல்லை யாருமல்லஅவளின் உயிர். அவள் கடந்த எட்டு வருடமாய் நேசித்து கைப்பிடித்த அவளது உயிரான ஜீவனின் குரல் தான் அது.

எழும்பி ஓடிப்போய் அவனை கட்டிப்பிடித்து அழவேணும். "எங்கை போனீங்கள்" என்று அவளது தோள்களில் தலை வைத்து விசும்ப வேணும்.

புரண்டு எழும்ப நினைத்தாள். முடியவில்லை அப்ப என்ர ஜீவனை காண முடியாதே? அவர் போறதிற்கிடையில், என்ர அவர் என்னை விட்டிட்டு போகப் போறார்... போரார்... இஞ்ச...நில்...லுங்கோ.

தட்டுத்தடுமாறி எழும்பி நிற்க முயன்றாள். தலை நிலத்தில் அடிபட அப்படியே சாய்ந்து போனாள்.

அவள் மீண்டும் கண் விழித்தபோது சாளரத்தூடே வந்த சூரியக்கதிர்கள் எட்டிப்பார்த்தன. இதுவரை செயலற்று இருந்த அவளது மூளை விழித்துக்கொண்டது.

தாறுமாறாய் குழப்பிய அவளது மனநிலை ஓர் நொடிப் பொழுதில் நிலையெடுத்தபோது, அவள் தன்னை குனிந்து ஆராய்ந்து கொண்டாள்.

நினைவுச் சிதறலில் ஜீவன் வந்து போனான்.

இறுதியாய் ஜீவனோடு ஒன்றாகப் புறப்பட்டது நினைவில் வந்தது. உள்ளத்தில் இனம்புரியாத சிலிர்ப்பு ஏற்பட மோட்டார் சைக்கிளில் ஜீவன் பின்னால் இருந்து வந்தபோது உலகே மறந்து போனதும் நினைவுத் திரைக்குள் வந்தது.

சோதனைக்காக ஒவ்வொரு முறை இறங்கி உருட்டிக்கொண்டு வந்தபோது, இறந்து மீண்டும் பிறப்பதாக அவளது மனநிலை ஓயாது சுழன்றடித்தது.

ஆள் உயர வரம்புகளற்ற வீதியில் முட்கம்பிச் சுருளுக்குள்ளால் வெறுப்பையும், விசமத்தையும் உமிழும் முகங்களற்ற வீதியில் ஒரு சுதந்திரமான சிறகசைப்புக்காய் அவள் மனம் தவித்தது. புரியாத மொழியில் பேசிய அந்த உருவம் மோட்டார் சைக்கிள் கரியலை இழுத்து நிறுத்தியபோது பருந்திடம் தப்பத் துடிக்கும் குஞ்சாய் அவனோடு அவள் ஒன்றி நின்றதும், அதன் பின்னால் இருவரின் உடலும் வேர்த்து நடுங்கி நின்றதும், மூளை மரத்துப்போய் செயலாற்ற மறுத்தது நினைவில் வந்தது. கூடவே கண்ணீர் கட்டுக்கடங்காது பெருக்கெடுத்தோடியது.

ஜீவனிற்கு அவங்கள் மாறிமாறி அறைந்தபோது அவர்களை தடுக்கப்போன அவளை இருவர் முரட்டுத்தனமாக கன்னத்தில் ஓங்கி அறைந்ததும், அவளிற்கு தலை விண் விண்ணென்று வலித்து கண்களிற்குள் பொறிகள் ஒளி வெள்ளமாக பாய்ந்தோடியதும், ஒன்றின் பின் ஒன்றாக மூளையில் அணிவகுத்தன.

இறுதியில் என்ன நடந்தது?

விடையாய் வெறுமைதான் மூளைக்குள் எழுந்தடங்கியது. "ஜீவனை என்ன செய்திருப்பாங்கள்"

அவளின் உள் மனது பூகம்பமாய் பயம், இனம்புரியாதவலி. ஜீவனின் நினைவு என மாறிமாறி மையம் கொண்டது.

எதுவுமற்ற சூனியத்துள் அவள் மட்டும் அந்தரிப்பதாய் தவித்துக்கொண்டாள்.



உடல் விறைத்துப்போனது உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை அச்ச உணர்வுள் மண்டிக் கிடந்தது.

செவிப்பறையில் மோதிய சத்தத்தை உணர்ந்ததும் அசையாது நின்றாள்.

அது வந்தது விகாரமான பற்களோடு பேயுருக் கொண்டதாக அவளது கண்ணிற்குப் புலப்பட்டது.

அது... அவளிற்கு... கிட்ட தனது அழுக்கடைந்த கைகளை நீட்டிக்கொண்டு விழுங்க வர முற்படுவதை கண்டபோது உரத்துக் குரலெடுக்க முற்பட்டாள். முடியவில்லை. அது அவளோடு விளையாட முற்படுவதுபோல அவளிற்கு விளங்கியது.

அவள் ஒவ்வொரு மூலை மூலையாய் ஒதுங்கும் போதெல்லாம் அது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளியில்...

பல்லை விகாரமாக காட்டியவாறு அவளை நெருங்கியது. அவள் அதற்கு அஞ்சி நடுங்கி ஓடி ஒழிய முற்பட்டு தவித்தபோது, அது அவளைஆக்கிரமித்துக் கொண்டது.

அவள் திமிறினாள், திணறினாள் எதுவும் முடியாத போது அப்படியே நினைவிழந்து போனாள்.

அவளிற்கு நினைவு வருவதும் போவதுமாக இருந்தது. நிரந்தரமாக அவளை விழிப்பு ஆட்சிசெய்தபோது... அவளிற்கு இனம்காண முடியாத வேதனை ஏற்பட்டது. எழும்ப முயன்றாள் முடியவில்லை. ஏதோ ஒன்று அவளிற்கு பாரமாய் அழுத்துவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

நினைவுச் சுழலில் மீண்டும் அது தலையெடுக்க முற்பட்டது. தலையை உதறி மறக்க முயன்றாள். முடியவில்லை.

நெற்றியில் குளிர்ந்தது. கையை தூக்கி நெற்றியை தொட முயன்றாள். கை விண் விண்ணென்று வலித்தது.

அது... அது அவளை விரட்டுவது போல இல்லை. குரல் வளையை அமுக்குவது போன்ற பயம் ஏற்பட குளறினாள். ஒலி எழும்பவில்லை.

ஏதோ ஒன்று அவளை விட்டுப்போன உணர்வு வந்து போனது. அவள் தன்னை ஒரு தரம் முழுமையாக பார்க்க முற்பட்டாள்.

அவளிற்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் முடிந்து போன தன்மையை உணரும் சக்தியை, கிரகிக்கும்ஆற்றலை தொலைத்திருந்தாள். எவ்வித ஈவிரக்கமின்றி, அவளின் விருப்பின்றி கொடுமையாய் அவளின் தனித் தன்மைகள் அழிக்கப்பட்டன.

அவளிற்கு எங்கோர் தொலைவில் மனித உயிர் குடிக்கும் வாகனம் நகரும் ஒலி கேட்பதாக உணர்கிறாள்.



சிறுகதை

வாகனத்தின் ஒலி இருட்டை அழித்துக் கொண்டு அவளை நோக்கி வருகிறது.

அவளிற்கு புரியாது; தன்னிலை அறியாது தொடுவானத்தில் தூர ஏதாவது தெரிகிறதா என கற்பனை இட்டவாறு முகட்டைப் பார்க்கிறாள்.

வெறும் நிலத்தில் அவள் உடல் விறைத்துப்போனது. மானத்தை மறைக்கும் ஆடை அற்று தான் இருப்பதை அவள் அறிய மாட்டாளே?

உயிர் கொல்லி வாகனத்தின் ஊளை ஒலி அவளிற் கருகில் வந்து ஏப்பமிட தவிப்பது போல ஒலி எழுப்பிக் கொண்டிருக்கிறது.

அவள் காண அஞ்சும், வெறுக்கும் அதுகள் அவளைப் பற்றி இழுக்கின்றன.

நடக்க, எழும்பத் திரணியற்றிருந்த அவளை அதுகள் வாகனத்தில் திணித்துக் கொள்கின்றன.

அதுகளின் காலடிக்குள் அவள் நசித்து வைக்கப்படுகிறாள்.

நோ, உடல் எல்லாம் நோ... அந்நோவின் உந்தலால் ஏற்பட்ட அவளது அலறலை கட்டுப்படுத்த சாக்கை வாய்க்குள் திணித்தார்கள். மூச்சுத் திணறலோடு அவள் மயங்கிப்போனாள்.

ஊமை நிலவிற்கும், ஊதல் காற்றிற்கும், வலுவிருந்தால் அது அவளை அப்படியே அள்ளிச்சென்றுவிடும்.

நீட்டி நிமிர்ந்து வானத்தை உற்றுப்பார்த்தபடி அவளது விழிகள் உறைந்து போயிருந்தன.

வெகு அருகில் தரையைக் கொத்தும் ஓசை காற்றோடு சங்கமித்து அவளை எச்சரிக்க முயல்கிறது. நாசித் துவாரத்தின் ஊடே வரும் காற்றில் நாறும் மணத்தைக் கூட அவள் அறியமாட்டாள்.

குற்றுயிராய் ஜீவன் துடித்துக் கொண்டிருந்த போது அப்பெருவெளி எது என்பதுஅவளிற்கு தெளிவாகத் தெரிந்தது.

தொண்டையில் தீக்கோளம் ஒன்று சிக்குப்பட்டது போன்ற அவஸ்தை ஜீவனிற்கு.

அவள் உயிராய், அவன் சுவாசமாய், அவள் கனவுகளின் ராணியாய் உலவும் அவளிற்கு என்ன நடந்திருக்கும் என்று அவளிற்கு தெரியும்.

அப்படியொன்றும் நடக்கக்கூடாது என்று உள்மனம் ஒப்பாரிபாடியது.

இல்லற வாழ்வின் இனிய துணைவிக்கு நற்பண்பான துணைவனாய் வாழவே அவன் தன் மனதுள் காலமெல்லாம் கற்பனைக் கோட்டை கட்டியிருந்தான். இன்று எதுவுமற்ற கானல் நீராய் போனதை எண்ணி கதறினாள்.

அவன் மனதில் ஆழ இடம் பிடித்த இனிய உயிர் அவள். அவளது மகிழ்வே தனது வாழ்வாக எண்ணிக்கொண்டதெல்லாம் அழியப் போவதையிட்டு ஜீவன் மனதில் அனல் சூறாவளி வீசிக் கொண்டிருந்தது.

ஜீவன் தன்னை எதுவோ நெருடமுற்படுவதை உணர்ந்து திரும்புமுன் அவனது உயிர்ப் பொட்டு அணைந்து போனது.

அழித்து புதைக்கும் இந்த அவலத்தை காண சகிக்காது நிலா முகிற்கூட்டத்துள் முகம் புதைந்து கொள்கிறது.

அவள் அப்படியே கிடந்தாள். வக்கிர எண்ணம் கொண்ட அதுகளால் குற்றுயிராய் சிதறிக் கிடந்தாள். காலமெல்லாம் காத்திருந்து கரம் பிடித்தவன் அவளருகில் உள்ள குழியொன்றில் சிதைக்கப்பட்டிருப்பதை அவன் அறியவேமாடான்.

தனக்கான உலகில் ரண அவஸ்தைகளோடு அவள் போராடிக்கொண்டிருந்தாள்.

அவளை நோக்கி இரும்புக்குழல் நீண்ட போதும் அதைப்புரியாது அப்படியே இருந்தாள். வெறியோடு காத்திருந்த பகைவன் ஒருவன் அழுத்திய விசைவில்லின் வேகத்ததைப்போல அவளின் உயிரும் முடிந்துபோனது.

அந்தப் பெருவெளியில் காற்று மட்டும் ஆவேசத்தோடு மூசி மூசி வீசத் தனது வெப்பியாரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. குரலெழுப்பாது நின்றிருந்த குயில்களும், இலையசைக்காது நின்றிருந்த மரங்களும் கூட இந்த இளைய உள்ளங்களின் கொடூர முடிவுக்கு சாட்சி சொல்லத் தயாராக நிற்பது போல இப்போதும் அந்த சூனியத்தைக் கிழித்து ஆங்காரமாய் ஓசையெழுப்பிக் கொண்டே இருக்கின்றன.

**-அலையிசை**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிலவரம்

## சிங்களத்து தடுப்பு முகாமில் தமிழ்க்கைதிகள் படுகொலை

புதிதாக பதவியேற்ற பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆசியுடன் முதலாவது தமிழினப் படுகொலை 25.10..2000 அன்று நடந்து முடிந்திருக்கின்றது. சிறீலங்காப் படைகளும் காடையர்களும் இணைந்து 25 தமிழ் இளைஞர்களைப் படுகொலைசெய்துள்ளனர். பொலிசாரின் ஒத்துழைப்புடன் பண்டாரவளை பின்டுநுவேவ பகுதியில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களை அரச படைகளும், சிங்களக் காடையர்களும் இணைந்து தாக்கி சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துள்ளனர். பண்டாரவளை பின்டுநுவேவ தடுப்பு முகாம் பொலிசாரின் விசேட கண்காணிப்பின் கீழ் இருந்து வந்துள்ளது. 25.10.2000 அன்று அதிகாலை 5.00 மணிக்கு கத்தி, கோடரி, அலவாங்கு சகிதம் தடுப்பு முகாமை1500ற்கும் மேற்பட்டோர் முற்றுகையிட்டனர். இரவு பகலாக முகாமை காத்துக் கொண்டிருந்த பொலிசார் காடையர்கள் உள்ளே வரவும் தடுக்காமல் உள்நுழைய அனுமதித்தனர். நிராயுத பாணிகளாக இருந்த தமிழ் இளைஞர்களை அடித்தும், வெட்டியும், குத்தியும், படுகொலை செய்துள்ளனர். அப்பகுதிக்கு தியத்தலாவைப் பகுதியிலிருந்து வந்த இராணுவத்தினரும் சுட்டதினாலும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இம்முகாமில் 84 இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவ் இளைஞர்களில் 25 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 43 இளைஞர்களில் 16 இளைஞர்கள் கடுங்காயங்களுக்கு உள்ளாகினர். 16 பேர் காணாமல் போயுள்ளனர் இவர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

## திருமலையை அதிரவைத்த கடற்புலிகளின் அதிரடி

திருமலைத் துறைமுகத்தினுள் கடற்படையின் பீரங்கிப் படகும், துருப்புக் காவியொன்றுமாக இரு கடற்படைக் கலங்கள் 23.10.2000 அன்று கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. மேலும் இரு பயணிகள்கப்பலும் சேதமாக்கப்பட்டன. பெருந்தொகையான கடற்படையினர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து திருகோணமலைத் முறைமுகத்திற்கு தெற்கே 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கரிய மலைப் பிரதேச வெள்ளைக் கரையோரப் பகுதியில் மூன்று மணித்தியாலய சமர் இடம்பெற்றது. இதன்போது கடற்படையினருக்கு உதவிக்கு வந்த எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தி ஒன்றும் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் பயணம் செய்த 2 விமானப் படையினரும் கொல்லப்பட்டனர். இவ்வெற்றிக்கு வித்தாக 6 கடற்கரும்புலிகள் வீரகாவியமாகினர்.

## எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது



19.10.2000 அன்று ஓயாத அலைகள் நடவடிக்கைப் படையணிகளால் நாகர்கோவில் பகுதியில் வைத்து எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்தியொன்று சுட்டு வீழ்த்தபட்டது. இச்சம்பவத்தில் மேலும் ஒரு எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தியொன்றும் பலத்த சேதமாக்கப்பட்டது. சுட்டுவீழ்த்தப்பட்ட உலங்குவானூர்தியில் பயணம் செய்த ஐந்து விமானப் படையினரும் கொல்லப்பட்டனர்.

## கொழும்பில் குண்டு வெடிப்பு

19.10.2000 அன்று காலை 10.10 மணியளவில் கொழும்பு மாநகரசபைக்கு முன்பாக உள்ள விகாரமாதேவி பூங்கா வாயிலில் குண்டொன்று வெடித்தது. விகாரமாதேவி பூங்கா பொலிஸ்காவலரணில் நின்ற சிங்களப் பொலிசார் இளைஞர் ஒருவரை சோதனையிட முற்பட்ட வேளையில் குண்டு வெடிக்கப்பட்டது. இக்குண்டு வெடிப்புக் காரணமாக சிறீலங்காப் பொலிசார் உட்பட இருவர் கொல்லப்பட்டு 23 பேர் காயமடைந்தனர். சிறீலங்காவின் 11வது பாராளுமன்றத்தின் புதிய அமைச்சரவை பதவியேற்ற அன்று இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## முன்னாள் பிரதமர் சிறிமாவோ மரணம்



தமிழர்களின் எதிர்காலச் சந்ததியின் கல்விக்கு வேட்டு வைக்கும் நோக்கிலான பல்கலைக்கழக தரப்படுத்தல் முறையை அமுல்ப்படுத்தியவரும், தமிழர்களின் தாயகப்பிரதேசத்திற்கு முதன்முதலாக ஆயுதப்படைகளை அனுப்பி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டவரும், 10000 மேற்பட்ட சிங்கள இளைஞர்களின் சாவிற்கு காரணகர்த்தாவாக விளங்கியவருமான திருமதி பண்டாரநாயக்கா தமது 84 வயதில் மாரடைப்பால் மரணமானார். இவர் சிறீலங்காவின் பிரதமராக பதவி வகித்ததோடு உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற சாதனையையும் எட்டியிருந்தார். இவரது ஆட்சிக்காலங்கள் யாவும் தமிழர்களின் உரிமைப்பறிப்புக் காலங்களாகவே இருந்துள்ளன. மகள் சந்திரிகாவின் தமிழரழிப்பு நடவடிக்கைகளுக்கு நெறிப்படுத்தல்களையும் ஆசியினையும் வழங்கினார். இறுதியாக ஜனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட அரசியல் அபிலாசைகளுக்காக பிரதமர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். இதன் காரணமாக மனமுடைந்த நிலையிலேயே அவர் கடந்த 10.10.2000 அன்று அத்னகல தொகுதியில் தமது வாக்கை அளித்துவிட்டு திரும்பியவேளையில் மாரடைப்பினால் மரணமடைந்தார்.

## பூமரத்தடிச்சேனைப் படுகொலை

தென்தமிழீழத்தில் திருமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பூமரத்தடிச்சேனைக் கிராமத்தில் 8 அப்பாவித் தமிழ் விவசாயிகள் சிங்கள ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 04.10.2000 அன்று பூமரத்தடிச் சேனைக் கிராமத்தை சுற்றிவளைத்த சிங்கள ஊர்காவல் படையினரால் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண் உட்பட 8தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு ந.அருளானந்தம் (17வயது), சி.நல்லதம்பி (57 வயது), த.கலிராசா(35 வயது), வி.சோமசுந்தரம்(56 வயது), த.கனகரட்ணம்( 57வயது), ச.இராசன்(37 வயது), கிருஸ்ணபிள்ளை தயாஜோதி(32 வயது).



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## செப்டெம்பர்

### 01.09.00

வவுனியா வெள்ளாங்குளப் பகுதியில் உழவு இயந்திரத்தில் வீதித் தடைகளை அகற்றவென வந்த சிறீலங்கா விமானப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் 15 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். 10ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

### 03.09.00

சிறீலங்காப் படைகளால் ஆரம்பிக்கப்பட்ட ரிவிகிரண-1 நடவடிக்கையில் கொழும்புத்துறை, அரியாலை, மட்டுவில், சரசாலை, மீசாலை என ஐந்து முனைகளுக் கூடாக முன்னேற முயன்ற படையினரை தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முறியடிப்புச் சமரில் சுமார் 150 படையினர் கொல்லப்பட்டனர். 1000ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### 10.09.00

ரிவிகிரண- 2 நடவடிக்கையின்போது அரியாலை, கொழும்புத் துறைப் பகுதியில் முன்னேற முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகளின் பதில்த் தாக்குதல்களில் ஒரு அதிகாரி உட்பட17 சிங்களப் படையினர் பலியாகினர். 58 பேர் படுகாயமடைந்தனர்.

கிண்ணியா சூரன்கல் பகுதியில் இராணுவத்தினர் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் 3படையினர் பலி, நால்வர் காயமடைந்தனர்.

மூதூர் பிரதேசம் தோப்பூர் பகுதியில் சின்னக்கல்வார் பாலத்தடியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### 11.0900

புல்மோட்டை 13ஆம் கட்டைப் பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் பயிற்சி நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக் குதலில் 3 பொலிசார் கொல்லப்பட்டனர். 4 இராணுவத்தினர் படுகாய மடைந்தனர்.

வவுணதீவு பிரதேச செயலகச் சந்தியூடாக ரோந்து வந்த சிறீலங்காப் படைகள் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் 3 படை யினர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

### 17.09.00

தனது கைக்குழந்தையைக் காப்பாற்றுவதற்காக பாதுகாப்பைத் தேடியபோது எறிகணை வீழ்ந்து வெடித்ததில் வரணி இயற்றாலை யைச் சேர்ந்த முருகேசு சசிகலாதேவி என்ற இளந்தாய் பலியானார்.

### 18.09.00

சிதம்பரப்பிள்ளை சிவநாதன் என்ற 24 வயது இளைஞன் யாழ் ஊரெழு தடைமுகாமில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார்.

### 15.09..00



கொழும்பு கண்வைத்திய சாலைக்கு முன்பாக பாது காப்பு கடமையில் ஈடுபட்ட சிறீலங்கா பொலிசார் அப் பாதையில் வந்த இளைஞ ரொருவரை பரிசோதிக்க முற் படுகையில் இடம்பெற்ற குண் டுத் தாக்குதலில் சிறீலங்காப் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தோர் உட்பட 8பேர் கொல்லப்பட்டனர். 28பேர் படுகாயமடைந்தனர்.

### 16.09.00



சிறீலங்கா அமைச்சரும் முஸ்லீம் காங் கிரஸ் ஸ்தாபகரும் தலைவருமான அஸ்ரப் தேர்தல் பிரச்சாரத்திற்காக கொழும்பிலி ருந்து கல்முனைக்கு சென்ற வேளையில் அரநாயக்க காட்டுப் பகுதியில் உலங்கு வானூர்தி வீழ்ந்ததில் கொல்லப்பட் டார். இதன்போது இவருடன் பயணம் செய்த 13 பேர் கொல்லப்பட்டனர்.

### 19.09.00

திருகோணமலை யாழ் வீதியில் கன்னியாவிற்கும் வெண் வேலிக்கும் இடையே ரோந்து சென்று கொண்டிருந்த சிறீ லங்கா இராணுவ றக் வண்டி மீது வில்கம் விகாரைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் மற்றும் ஆர்.பி.ஜீ தாக்குதல்களில் 24 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்.

வன்னி மல்லாவியில் யோகபுரம் மகாவித்தியாலய மாணவர் களினால் சிங்கள அரசின் உணவு மருந்துத் தடையாலும், கல்வி பொருட்களுக்கான தட்டுப்பாட்டாலும் தமிழ் மாணவர் கள் பாதிக்கப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

### 21.09.00

மன்னார் பெரியகடைப் பகுதியில் வாடியில் தங்கியிருந்து தொழில் புரிந்து கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மீனவர்கள் மீது சிங்கள இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 47வயது கே.தங்கராசா, 21 வயது எஸ்.சதீஸ் ஆகிய இரு மீனவர் அநியாயமாகப் பலியாகினர்.

### 26.09.00

ஓயாத அலைகள்- 4 நடவடிக்கையின் ஆரம்பம். இதன் போது 200ற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 600ற்கு மேற் பட்டோர் படுகாயமடைந்தனர். தென்மராட்சி கிழக்கு, தென் கிழக்கு முன்னணிக் காவலரண்கள் அதாவது கிளாலியிலிருந்து நாகர் கோவில் வரையிலான, குறிப்பாக கிளாலிக் கரையோரத்திலி ருந்து தொண்டமனாறு கடனீரேரியின் மேற்கு கரை வரையி லான இராணுவ முன்னரங்க நிலைகள் யாவும் விடுதலைப் புலி களால் தாக்கியழிக்கப்பட்டன ஆரம்பக் கட்டம் பூர்த்தியாகியது. சுமார் மூன்றுகிலோமீற்றர் தூரத்திற்கு விடுதலைப் புலிகளின் அணிகள் முன்னேறின. நாகர்கோவில் சிறீலங்கா கூட்டுப் படைத் தளத்திற்கான வழங்கல் பாதை துண்டிக்கப்பட்டது.

ஓமந்தைப் பிரதேசத்தின் மேற்கு எல்லைப்புறப் பகுதியான காட்டுப் பூவரசங்குளத்திற்கும், நொச்சிக்குளத்திற்கும் இடையே ரோந்து இராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டனர்.

### 30.09.00

புத்தளம் கற்பிட்டிக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் சிறீலங்காக் கடற்படையினரின் சுப்பர் டோறா பீரங்கிப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# “கண்கள் கூறும் வார்த்தைகள்”

www.tamilarangam.net

**காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...**





**எரிமலை**
*C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
FRANCE.*

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.



## ஓகஸ்ட்டுக்கான...

துவிச்சக்கர வண்டியும் தூக்கமின்றித் துடிக்கிறது
தவிக்கின்ற தமிழனுக்கு தரணியெங்கும் அவலநிலை
அன்று ஆண்டவரும் நாமே வீணே மாண்டவரும் நாமே
தீண்டவரும் பகையைத் தாண்டினால்தான் விடிவே
கண்ணில் பட்டதைத்தான்
கையோடு எடுத்தோடி வந்தோம்
கண்ணான பூமியைக் கண்ணீரால் நனைத்து வந்தோம்
தமிழ் வேரை அறுத்து அதில் சிங்களம் முளைக்குமோ
அச்செய்தி கேட்டும் நம்முயிர் நிலைக்குமோ?

**எம்.கிருஸ்ணன்
சூரிச்–சுவிஸ்**

சிட்டுக்குருவிகள் நம் கூட்டில் ஆனந்தமாக இருந்தது
அந்நேரம் தம் கூட்டை பருந்து தாக்க வருகின்றதாம்
என்று செய்தி
ஆம் சிட்டுக்குருவிகள் சின்னாபின்னமாகியது.
கூடஇருந்த சில உறவுகளோடு
தம் கூட்டைப் பிரிந்து சென்றது.
ஊர் ஊராய் பறந்தது. தமது கூட்டை
அமைத்து வாழ முற்பட்டது
ஆனாலும் இன்னும் பேய்ப்பசி தீரவில்லை.
பழைய நிலைக்குத் தள்ளப்பட்டு பறந்து அலைந்தது.
இது எத்தனையாவது கூடு கட்டிப் பறத்தல்?
இந்நிலை மாறுமா? மாறும்!

**இசைஞானவதனி ஜெயராசா
எஸ்டோவ்–ஜேர்மனி**

**அநேக வாசகர்களின் ஆக்கங்கள்
இடப்பற்றாக்குறையால் இடம்பெறவில்லை.
தொடர்ந்தும் எழுதுங்கள். எரிமலை
பிரசுரிக்கும். உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்.**

ஆண்ட பரம்பரைத் தமிழனை
ஆதிக்க வெறி பிடித்த
சிங்கள அரசு தன் யுத்த வெறியால்
எல்லாவற்றையும் இழந்து போக வைத்தாலும்-தன்
நம்பிக்கையை மட்டும் இழக்காது
கையில் கிடைத்தவற்றை
வாரிச்சுருட்டி மூட்டை கட்டி
கால் போன போக்கிலே
வெயில் மழை பாராது
எங்கே போவது என்று தெரியாமல்
போகும் இவர்களின் தலைச்சுமை பாரமல்ல
மனச்சுமைதான் பாரம்
நாளை விடியும் தமிழீழத்தில்
இவர்களுக்கு இந்தச் சுமைகள் நிச்சயம் இருக்காது.

**வ.துஸ்யந்
அரோ, சுவிஸ்**

தலையில் மட்டுமல்ல நெஞ்சில் சுமையுடனும்
போகுமிடமறியா போகும் பயணமிது.
பசித்த வயிற்றுடன் பச்சைக் குழந்தையுடன்
பாதை தெரியா பயணமிது ஆம்
பாதை மாறிய பயணமிது பகலிலும்
இவர் பாதை இருள்தான்
நிலை நிறுத்தி ஓர் நிமிடம் சிந்தியுங்கள்
உங்கள் வழி எதுவென்று
அப்போது புரியும் எங்கள் பயணம்
அந்த விடியலை நோக்கி என்று.

**திருமதி. துயாநந்தன்
சூரிச்–சுவிற்சர்லாந்து**

கானகம்தான்- ஆனாலும் இதுவெம் தாய்நிலம்
கற்கால வாழ்முறையே வந்து சேர்ந்தாலும்
அடிமைகளாய் யார்க்கும் தெண்டமிடோம்.
ஊர் ஊராய் இடம் பெயர்ந்தோம்.
வானந்தவிர ஒதுங்கவோர் முகடு இல்லை.
இன்றிருப்போம்- நாளை எதிரி காவு கொள்ளலாம்-
என்றாலும்- உடலில் உயிர்த்துளி உள்ளவரை
தங்கத் தலைவன் சுட்டும் திசை செல்வோம்.
சுதந்திர பூமியின் பிரசவம் காண்பதற்கு
எந்தப் பளுவேனும் நாம் சுமந்திடுவோம்.
என்ன விலையேனும் கொடுப்பதாக வந்துள்ளோம்

**ந.ஹேமராஜ்
இலண்டன்**

ஆண்டாண்டு காலமாய் பிறந்து வளர்ந்து
படித்து விளையாடித் திரிந்த
எம் தாய்மண்ணை விட்டு வருத்தத்துடன்
எதிரியின் இனஅழிப்புப் போரிலிருந்து
தமது உயிர்களையும் கையில் அகப்பட்ட உடமையையும்
எதிர்காலத்தின் கண்களான தங்கள் வாரிசுகளையும்
சகோதரர்களையும் கூட்டிக் கொண்டு
கொதிக்கும் வெய்யிலில்இடம் பெயர்ந்து செல்கிறார்கள்
ஆனால் எமது விடிவு காலம் வெகு விரைவில்
எங்கள் தேசியத் தலைவரின் காலத்தில்
கிடைக்கும் கவலைப் படாதே சகோதரா.
வெகு விரைவில் தாய்மண்ணை முத்தமிடத் திரும்பி வரலாம்.

**முருகா
இத்தாலி**

ஓடுகின்றோம், ஓடுகின்றோம்,
ஒதுங்க இடமின்றி ஓடுகின்றோம்
ஊரைவிட்டு உறவுகளை விட்டு ஓடுகின்றோம்
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி ஓடுகின்றோம்.
உயிரை மட்டும் கொண்டு ஓடுகின்றோம்
உயிரோடு ஏன் ஓடுகின்றோம்
உதய சூரியனாய் உதயமாகப் போகும்
உண்மையான தமிழீழம் காண ஓடுகின்றோம்
ஓடுகின்றோம் ஓடுகின்றோம் உயிரைக் கொண்டு
ஓடுகின்றோம்.
உதயமாகும் தமிழீழம் காணும்வரை ஓடுகின்றோம்.

**விமலா பாஸ்கரலிங்கம்
லவுசான்–சுவிற்சர்லாந்து**

செம்மணல் வீதிவழியே சுமைக்கு மேல்
சுமையாக எத்தனை சுமை
இமைக்க மறந்து நீர் படும் இன்னல்
காணும் கண்கள் பனிக்க மறுக்குமா
தன்மானத் தமிழனாய் வாழ்வதுதான் குற்றமா
ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பது குற்றமா?
அம்புலி பார்த்து பாற்சோறு உண்ண
வேண்டிய பாலகர் இவர்
எம்புலி மாமாக்களே கதியென வந்தனரோ
புலம் பெயர்ந்தோரே உம் புலத்தில் இவர் பெயர்வு தடுக்க
நலமுடன் ஈழத் தாயகமமைக்கும்
புலிக்கரத்தை பலப்படுத்துவீர்.

**ச.பிறேம்குமார்
டோட்முண்ட்– ஜேர்மனி**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சர்லாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhausen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(39) 091 61 62 804

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag
Tel:(31) 70 346 1963

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவிடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072
Tel:(61) 03 95 47 83 00

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

# அன்பான வாசகர்களே! "உணர்வுப்பாலமாக" "உறவுப்பாலமாக" வெளிவரும் எரிமலை இதழ்




உலகமெலாம் பரவி வாழும் நம்மவர் எல்லோரையும் சென்று எட்ட வேண்டும் என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும் எரிமலை உங்கள் உறவுகளை, நண்பர்களை சென்றடைகின்றதா?
இல்லையெனில்...
அது உங்கள் பணி
அவர்களையும் எரிமலை வாசகர்கள் ஆக்கிடுங்கள்!

வாசகர்களே! எழுத்தாளர்களே!
உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

